பக்கங்கள்: 32
விலை: 30
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 24 மார்கழி 04ஆம் நாள் வியாழக்கிழமை 20 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## ஆட்டம் சமநிலை கண்டது

» 27

# எதிர்கட்சித் தலைவர் பதவி எவருக்கு? நாடாளுமன்றில் நேற்றுக் கடும் வாதம்

கொழும்பு, டிசெ. 20

எதிர்க்கட்சித் தலைவர் பதவி எவருக்கு உரியது? என்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் முன்னணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நாடாளுமன்றில் நேற்றுக் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

நாடாளுமன்றம் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறியின் தலைமையில் கூடியது. சபை ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்க் கட்சித் தலைவர் பதவி தொடர்பில் கடுமையான உரையொன்றை நிகழ்த்தினார். சபாநாயகர் அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்தார். இதனையடுத்து சர்ச்சை ஆரம்பமானது.

இதன்போது எழுந்த தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மகிந்த ராஜபக்சவும் அவரது அணியினரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரங்களை சபையில் சமர்ப்பித்தார்.

சம்பந்தனின் கூற்றைத் தொடர்ந்து எழுந்த ஐக்கிய மக்கள் » 06

# மகிந்தவுக்கான பதவி பெரும்பான்மைவாதமே

## எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் சபாநாயகருக்கு சம்பந்தன் சாட்டை




கொழும்பு, டிசெம்பர் 20

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்தவை அறிவித்தமை, இந்த நாட்டின் துர்ப்பாக்கிய நிலமைக்குக் காரணமான பெரும்பான்மைவாதச் சிந்தனை என்றே மக்கள் கருதுகின்றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். » 06

## தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு மௌனத்துக்குள் இயங்கு நிலையில்

### இவ்வாறு குறிப்பிட்டு வடமராட்சியில் சுவரொட்டி



யாழ்ப்பாணம், டிசெ. 20

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது மௌனத்துக்குள் இயங்கு நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டு வடமராட்சி வல்லைவெளி முனியப்பர் கோயிலில் சுவரொட்டியொன்று நேற்று அவதானிக்கப்பட்டது.

"தமிழீழ திருநாட்டை மீட்கும் எமது தியாகப் போராட்டமானது » 24

## சம்பந்தனுடன் முரண்பட நாங்கள் விரும்பவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் பதவி எம்மைத் தேடி வந்தது என்கிறார் மகிந்த



கொழும்பு, டிசெ. 20

"எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் புலம்பிக்கொண்டிருக்கின்றார். சம்பந்தனின் புலம்பல் சரியா? பிழையா? என்பதை அவரின் மனச்சாட்சியே » 24

## நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் பயன்படுத்துவேன்

### அரச தலைவர் மைத்திரி பிடிவாதம்



கொழும்பு, டிசெ. 20

நான் மக்களினதும் தேசத்தினதும் நலனுக்காக நிறைவேற்று அதிகாரத்தைத் தொடர்ந்தும் பயன்படுத்துவேன். எனது பதவிக்காலம் முடியும் வரையில் இத்தகைய அதிகாரங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவேன் இவ்வாறு தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும் தெரிவித்ததாவது: » 06

## விட்டுக்கொடுக்க ஐ.தே.க. இம்மியளவும் தயாரில்லை

### மைத்திரியுடன் வலுக்கிறது மோதல்

கொழும்பு, டிசெ. 20

எந்தவொரு சூழ்நிலையிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், சட்டம், ஒழுங்கு மற்றும் ஊடகத்துறை அமைச்சுக் » 06

## நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படவே கூடாது!

### சிங்களராவய சீற்றம்

கொழும்பு, டிசெ. 20

எந்தக் காரணத்துக்காகவும் நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக் கூடாது. அந்த முறைமை நாட்டுக்கு இன்றியமையாதது என்று சிங்கள ராவய » 06

## மைத்திரியை 'பைத்தியம்' என்ற பொன்சேகாவுக்கு பதவி இல்லை

கொழும்பு, டிசெ. 20

சரத் பொன்சேகாவுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அமைச்சுப் பதவியை வழங்க மாட்டேன்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை » 06

### மகிந்தவின் எம்.பி. பதவி விவகாரம்

## நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்குமாறு தீர்மான வரைவு

கொழும்பு, டிசெ. 20

மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு 11 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சபாநாயகரிடம் தீர்மானவரைவு நேற்று ஒப்படைக்கப் » 24

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும்

### ஐ.ம.சு.மு. கூட்டத்தில் மைத்திரிபால கூறினார் என்கிறார் காமினி எம்.பி.

கொழும்பு, டிசெ. 20

ரணில் விக்கிரமசிங்க அரசின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரச தலைவர் மைத்தி » 24


## ஐ.ம.சு.மு உறுப்பினராக மகிந்த தொடர்கின்றார்

### கட்சியின் பொதுச்செயலர் சபாநாயகருக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ. 20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு கடந்த மாதம் 11ஆம் திகதி தாவிய மகிந்த உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை கேள்விக்குறியாகியுள்ள நிலையில், அவர்கள் » 23

# ரணிலுடன் பணியாற்ற அமெரிக்கா விருப்பம்!



கொழும்பு, டிசெ. 20

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்ததைப் பாராட்டியுள்ள அமெரிக்கா, அவருடன் இணைந்து செயற்படுவதற்கு ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்று முன்தினம்இடம்பெற்றசெய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் றொபேர்ட் பல்லாடினோ அமெரிக்காவின் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

"கடந்த பல வாரங்களாக நீடித்த அரசியல் நெருக்கடிக்கு, அரசமைப்பு நெறிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்ட வகையில் தீர்வு கண்டமைக்காக இலங்கையின் அரசியல் தலைமையை நாங்கள் பாராட்டுகிறோம்.

இந்தோ - பசுபிக்கின் மிகப் பெறுமதியான பங்காளராக இலங்கை இருக்கிறது. மேலதிக ஒத்துழைப்பு மற்றும் பொதுநலன் சார்ந்த பிராந்திய விவகாரங்கள் மற்றும் இருதரப்பு விவகாரங்களில் தலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்கவுடனும், அவரது அமைச்சரவையுடனும் இணைந்து முன்நோக்கிச் செயற்படுவதற்கு நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம்'என்றும் அவர் தெரிவிததார்.

(ம5)

# அபிவிருத்தியைத் தடைசெய்கிறார் சயந்தன் குற்றம் சுமத்துகிறார் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், டிசெ. 20

**சாவகச்சேரிப் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகள் தன்னை மீறி நடந்து விடக் கூடாது என்ற வகையில் அவற்றுக்கு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் தடங்கல் ஏற்படுத்துகின்றார் என்று குற்றம்சாட்டப்படுகின்றது.**

கொடிகாமத்தில் 4 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு இடைபுகுந்து தடங்கலை ஏற்படுத்தியதுடன், அதனை முன்னெடுத்த உள்ளூராட்சிச் சபை உறுப்பினரை சயந்தன் மிரட்டினார் என்று இந்தக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குருவிச்சான் வீதி, கொலனி முதலாம் வீதி, ஒட்டங்கேணி போக்கட்டி வீதி, கொடிகாமம் கச்சாய் ஊர் எல்லைத் தெரு ஆகியவற்றை அபிவிருத்தி செய்துதருமாறு அந்தப்பகுதி மக்களாலும், அவர்களுடைய உள்ளூராட்சி சபைப்பிரதிநிதியாலும்நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்த வீதிகளை நேரில் சென்று பார்வையிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர், அவற்றின் மறுசீரமைப்புக்கான உத்தேச மதிப்பீட்டை வழங்கினால் கொழும்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன்பேச்சுநடத்தி அவற்றுக்கான உதவியைப் பெற்றுத் தரமுடியும் என்று உறுதியளித்திருந்தார்.

மக்கள் சந்திப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்துச்சென்ற பிரதேச சபை உறுப்பினருக்கு அழைப்பு எடுத்த மாகாணசபை உறுப்பினர் சயந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஊடாக அபிவிருத்திப் பணிகளைச் செய்யக் கூடாது. அவ்வாறு செய்ய முற்பட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக அதனை நிறுத்துவேன் என்று குறிப்பிட்டார் என சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தன், "கம்ரெலிய திட்டத்தில் அந்த வீதி (ஒட்டங்கேணி போக்கட்டி வீதி) அந்த உறுப்பினர் கேட்டு உள்வாங்கப்பட்டுள்ளது. இதனால் இரண்டு திட்டங்கள் ஊடாக ஒரே வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளமையைத்தான் உறுப்பினரிடம் சொன்னேன்" - என்றார்.

கம்ரெலிய திட்டத்தில் 500 மீற்றர் வீதி உள்வாங்கப்பட்டுள்ளது. அந்த வீதி 2 கிலோ மீற்றர் நீளமுடையது. நீண்டகாலமாக மறுசீரமைக்கப்படாதால், மக்கள் பிரதி நியான என் மீது மக்கள் கோபம் கொள்கின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஊடாக மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற முயல்கின்றேன் என்று உறுப்பினர்உதயனிடம்தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக சயந்தனை, உதயன் தொடர்பு கொண்டுகேட்டபோது, "இந்தச்செய்தி பிரசுரமானால் அதன் பின்னர் நான் பார்த்துக்கொள்கின்றேன்"என்றுஎச்சரிக்கை விடுத்தார்.

"கட்சிக்கிளையின்செயலர்என்றஅடிப்படையில், சபை உறுப்பினர்கள் கட்டுக்கோப்பாகச் செயற்படுவது தொடர்பில் அறிவுறுத்தினேன். இந்தச் செய்தி வெளிவந்தால், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு எதிராகப் பரப்புரை செய்வேன் என்பதையும் எழுதுங்கள்" என்று தெரிவித்தார்.

ஐங்கரநேசனை தெருவில் கொண்டு வந்து விட்டவன் நான். ஆளாளப்பட்ட விக்னேஸ்வரனுடன் மோத முற்பட்டவன்நான். நாடாளுமன்றஉறுப்பினர் சரவணபவனுக்குப் பாடம்படிப்பிப்பேன்" என்று சவால் விட்டார்.

"இந்தச் செய்திதான் சரவணபவனின் அரசியலைத் தீர்மானிக்கப் போகின்றது என்று எந்தச் சலனமும் இன்றி துணிவாகச் சொல்கின்றேன்" என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், சாவகச்சேரி பிரதேசத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்வது ஏன்,அவரைக் கொந்தளிக்க வைக்கின்றது என்பதற்கான காரணங்களை அவர் தெரிவிக்கவேயில்லை.

(111)

# மைத்திரியின் கூட்டங்களுக்கு நான் செல்லப் போவதில்லை

## குமார வெல்கம அடுத்தடுத்து அதிரடி

கொழும்பு, டிசெ. 20

அரச தலைவர் பதவியிலிருந்து மைத்திரிபால சிறிசேன விலகவேண்டும் என்றுதெரிவித்த24மணித்தியாலங்களுக்குள், "மைத்திரியின் கூட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை'' என்று அதிரடியாக அடுத்த கருத்தைத்தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்குமாரவெல்கம.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்சார்பில்நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தாலும், மகிந்த அணியான கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்பட்டவர் குமாரவெல்கம. அரசதலைவர்தேர்தலில்கூட்டுஎதிரணி சார்பில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டபோது பகிரங்கமாக எதிர்த்திருந்தார். ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்தவை தலைமை அமைச்சராக மைத்திரி நியமித்ததையும் எதிர்த்திருந்தார்.

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்பாடு செய்யும் எந்தவொரு கூட்டத்திலும் இனி கலந்து கொள்ள போவதில்லை. அதன்படி அரச தலைவர் தலைமையில் நேற்று (நேற்றுமுன்தினம்) காலையில் இடம்பெற்ற கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. இதற்கு பிறகு அரச தலைவருடன் நடைபெறும்எந்தக்கூட்டத்திலும்கலந்துகொள்ளாதுபுறக்கணிக்கப் போகிறேன்'' என்று குமார வெல்கம நேற்றுத் தெரிவித்தார்.

(ம5)

# உந்துருளி விபத்தில் ஒருவர் துயரச் சாவு

## சிகிச்சை பயனளிக்காததை அடுத்து

யாழ்ப்பாணம்டிச20

உந்துருளியில் பயணித்த நபர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து படுகாயமடைந்ததைஅடுத்துஅவர்சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். வவுனியா மதகுவைத்த குளத்தைச் சேர்ந்த சிவராசா தினேஷ்கரன் (வயது 26) என்ற இளைஞனேஉயிரிழந்தவராவார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது:

குறித்த நபர் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நண்பருடன் உந்துருளியில் நேற்றுமுன்தினம் பயணித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குஅண்மையில்வைத்து உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. குறித்தஇளைஞன் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார். இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின்திடீர்இறப்புவிசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் மேற்கொண்டார்.

(ம-8)

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# வருட இறுதிக்குள் 264 ஏக். விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரச தலைவரின் பணிப்புரைக்கமைவாக டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் 263.55 ஏக்கர் தனியார் மற்றும் அரச காணிகள் விடுவிக்கப்ப டவுள்ளன. இதில் 132.89 ஏக்கர் தனியார் காணிகளும் 130.66 ஏக்கர் அரச காணிகளும் உள்ளடங்குகின்றனஎன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கானஅரசதலைவர்செயலணியின் செயலாளர் வே. சிவ ஞானசோதி தெரிவித்தார். -

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான செயலணியின் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலகடந்த17ஆம்திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயேகாணிவிடுவிப்புத்தொடர்பானவிடயங்கள் தெரிவிக்கப்பட்டன. இதன்படிவடக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தில் 44.60 ஏக்கரும், கிளிநொச்சியில் 52.95 ஏக்கரும், முல்லைத்தீவில் 99.47 ஏக்கரும், மன்னாரில் 5 ஏக்கரும்,வவுனியாவில்47.28 ஏக்கரும் விடுவிக்கப்படவுள்ளன.

இவ்வாறு விடுவிக்கப்ப டவுள்ள காணிகளை விட ஆயிரத்து 99 ஏக்கர் விவசாய காணிகளும் விடுவிக்கப்படவுள்ளன. அதில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி ஜெயபுரம்வடக்குகிராம சேவையாளர்பிரிவில்வனவளபாதுகாப்புத்திணைக்களத்துக்குச் சொந்தமான 194 ஏக்கர் காணிகளும் (நாச்சிகுடா). முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுகுடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டுகுளம் தெற்கு கிராம சேவையாளர்பிரிவில்வனவள பாதுகாப்பு திணைக்களத்து க்குச் சொந்தமான 120 ஏக்கர் காணிகளும், மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெல்லன்குளம் கிராம சேவையாளர்பிரிவில் வனவளபாதுகாப்புத்திணைக்களத்துக்குச் சொந்தமான 500 ஏக்கர் காணிகளும் உள்ளடங்குகின்றன.(ம-8)

# வவுனியாவில் ஐந்து இளைஞர்கள் கைது கெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில்!

வவுனியா, டிசெ. 20

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் வைத்து கெரோயினுடன் ஐந்து இளைஞர்கள்நேற்றுக்கைதுசெய்யப்பட்டனர் என்று வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும்சிறப்புப்போதைஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்றது. இந்த விடயம்தொடர்பில்போதைஒழிப்புப் பிரிவினர் மேலும் தெரிவித்ததாவது.

வன்னிப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய வவுனியா தேக்கவத்தை, பகுதியிலுள்ள பாழடைந்த வீடு ஒன்றில் மேற் கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கெரோயினைப்பயன்படுத்துவதற்கு தயார்நிலையில்இருந்த5இளைஞர்கள் கைதுசெய்யபட்டனர். அவர்களிடம் இருந்து சில கெரேயின் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் நாளை (இன்று) நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள்' என்றனர்.

(ம-110)

# சுற்றறிக்கைப் படியே அலைபேசிக்குத் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 20

கொழும்பு அரசின் 2006ஆம் ஆண்டு சுற்றறிக்கைக்கு அமையவே, நோயாளர்பகுதியில்கமராவசதியுடையநவீன அலைபேசிகள் பயன்படுத்த முடியாது என்பதனை நடைமுறைப்படுத்துகின்றோம்என்றுயாழ்ப்பாணப்போதனாமருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அங்கு பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் கடமைநேரத்தில் நவீனவகை அலைபேசிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில், நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மருத்துவமனையில் பணியாற்றும் பணிப்பாளரான நான் உட்பட சகலரும்நோயாளர்களின்தேவையைப்பூர்த்திசெய்யவே நியமிக்கப்பட்டுள்ளோம். நோயாளர் விடுதிகளில் நான் உட்பட எவருமே நவீனவகை அலைபேசிகளைப் பயன்படுத்தமுடியாது. சுற்றறிக்கைப்படியே அதுநடைமுறைப்படுத்தப்படுகிறது. நாங்கள்மட்டுமன்றிநோயாளர்களுடன்தொடர்புடைய எவருமே பயன்படுத்த முடியாது என்றுதான் கூறியுள்ளோம். இதில்எந்தவிதபாகுபாடும்கிடையாது" - என்றார். (4,105)

# சிகிச்சை ஆரம்பித்த பின்னரே வளங்களைத் தேடுகின்றோம்!

## போதனாவின் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 20**

**யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இருதயநெஞ்சறைசத்திரசிகிச்சைஆரம்பித்தபின்னரே வளங்களைத் தேடுகின்றோம். ஒரு வருடத்தில் 72 பேருக்கு இடம்பெறும் சத்திர சிகிச்சையை குறைந்தது இரட்டிப்பாக்க முயற்சிக்கின்றோம் என்று மருத்துவமனைப்பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்**

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைக்கூடம் ஆரம்பித்து ஓர் ஆண்டுநிறைவையொட்டி செய்தியாளர்சந்திப்புஒன்று அங்கு நேற்று நடத்தப்பட்டது. மருத்துவமனைப் பணிப்பாளர் மற்றும் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். முகுந்தன்ஆகியோர்இதை நடத்தினர்.

பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

"கொழும்பு, கண்டி, காலி ஆகிய மருத்துவமனைகளில் போதிய கட்டடங்கள், வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னரே இருதய சத்திர சிகிச்சைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் அந்த மருத்துவமனைகளில்உள்ளசத்திரசிகிச்சைப் பிரிவுகள்போன்றதராதரத்துடனேயே யாழ்ப்பாணப் போதனாவில் இருதய சத்திரசிகிச்சைபிரிவுஉள்ளது. இது பலருக்குத் தெரியாமலுள்ளது.

குருநாகல், அநுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள மிகப்பெரும் மருத்துவமனைகளில்கூட இன்னும் ஆரம்பிக்கப்படாத இந்தச் சேவையை மருத்துவ நிபுணர் முகுந்தன் இங்கு ஆரம்பித்தார்.

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருதய சத்திரசிகிச்சைநோயாளர்களில் சுமார் 50 பேரை தனியார் மருத்துவமனைக்கு மாற்றுவதற்குச்சிலமருத்துவர்கள்சிபார்சுசெய்திருந்தனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் உரிய நடவடிக்கைக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது" - என்றார்.

*பெரிய மருத்துவ மனைகளில் உள்ள சத்திர சிகிச்சைப் பிரிவுகள் போன்ற தராதரத்துடனேயே யாழ்ப்பாணப் போதனாவில் இருதய சத்திர சிகிச்சை பிரிவு உள்ளது.*

**வளர்க்கும் பொறுப்பு மக்களிடம்தான்!**

மருத்துவர் முகுந்தன் அங்கு கருத்துத் தெரிவித்ததாவது:

இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சைக் கூடத்தை இங்கு ஆரம்பித்துள்ளேன். அதை வளர்ப்பது மக்களின் கைகளில்தான் உள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்த அரசியல்வாதிகள், புலம்பெயர்ந்தோர், செல்வந்தர்கள்முன்வர வேண்டும்.

இந்தப் பிரிவுக்கு இன்னும் 3 சத்திர சிகிச்சை நிபுணர்கள்தேவைப்படுகின்றனர். சத்திரசிகிச்சைக்காக 985 பேர் காத்திருக்கின்றனர். இந்த ஆண்டு 72 சத்திர சிகிச்சைகளைமேற்கொண்டுள்ளோம். அவற்றில் 66 பெரியளவான சத்திர சிகிச்சைகள்" - என்றார். (4,105)

# இந்தியப் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

இந்தியக் குடியுரிமையுள்ள பெண் யாழ்ப்பாணம் கொட்டடியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அவர், இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புடவை வியாபாரம் செய்யும் நோக்கில் தனது கணவருடன் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என்று ஆரம்ப விசாரணையில் பொலிஸார் தெரிவித்தனர்.

"ஒரு மாதகாலமாக கொட்டடி நமசிவாயம் பாடசாலைக்கு அருகாமையில் கணவருடன் தங்கியிருந்தார். வயிற்று வலி என்று கூறியிருந்தார். நேற்றுமுன்தினம் இரவு உறங்கினார். காலையில்பார்த்தபோது தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டார்" என்று அவரது கணவர் விசாரணையில் கூறியுள்ளார். சடலம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (4,106)

# வெளிமாவட்ட சங்கங்களை பார்வையிடத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

வெளிமாவட்டங்களிலுள்ளபலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்கு வெளிக்களவேலைத்திட்டம்ஒன்றுநாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்குமாகாணகூட்டுறவுஅபிவிருத்தித்திணைக்களத்தின் அனுசரணையுடன் இது ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை தெரிவித்தது.

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் சிறப்பாகச் செயற்படும் சங்கங்களை நேரில் சென்று பார்வையிடுவதன் மூலமாக புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதோடு பணிப்பாளர், பணியாளர் மனநிலையில் உற்சாகத்தையும் ஏற்படுத்த முடியும்.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட சங்கங்களிலிருந்து பணியாளர்களை இணைத்துக் குறித்தவேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சபை மேலும் தெரிவித்தது. (4,17)

# ஊழியர்கள், மக்களின்பங்குபற்றலுடன் பார்த்தீனிய அழிப்பு இடம்பெறுகிறது

## வலி. தென்மேற்கு சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

குடாநாட்டில் பல இடங்களிலும் பார்த்தீனியங்களை அழிக்கும்நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. வலிகாமம் தென்மேற்குபகுதிகளில்பார்த்தீனியம்அழிக்கப்படும்இடங்களில்அவைமீளவும்வளர்ந்தால், அழிப்பதற்காகஅந்தஇடங்கள்அடையாளப்படுத்தப்படுகின்றனஎன்றுவலிகாமம்தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார். அங்கு பிரதேச சபை, பிரதசெயலகம், பொது அமைப்புகள் பொதுமக்கள் இணைந்து இந்த நடவடிக்கையில் கடந்ததிங்கட்கிழமைதொடக்கம்ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். இது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிகாமப்பகுதிகளில்பார்த்தீனியச்செடிகள் மிகவேகமாகப் பரவுகின்றன. இவற்றை அழிக்கும்வேகத்தைவிடபல்மடங்குகூடிய வேகத்தில் இவை பரவுகின்றன. இதற்காக அரசுபலமுயற்சிகளை எடுத்துள்ளபோதும் மக்களிடம்போதியவிழிப்புணர்வுஇல்லை. அதன் பாதகங்களை அறியாதவர்களாக, அவற்றைஅழிக்கவேண்டும்என்பதில்அக்கறையற்றவர்களாகக்காணப்படுகின்றனர். பார்த்தீனியச் செடிகள் தாம் படரும் நிலங்களில் வேறு எந்தப் பயிர்களையும் வளர இடமளிப்பதில்லை. இது ஏனைய பயிர்களின் உற்பத்தித்திறனைக்குறைக்கும்வகையில் நிலத்திலுள்ளமுழுமையானசத்துகளையும் உறிஞ்சி அகற்றிவிடுகின்றன.

பார்த்தீனியம் பரவியுள்ள இடங்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகளில் இருந்து பெறப்படும் பால் மனிதர்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடியதாக உள்ளது. பார்த்தீனியத்தால் விவசாய நிலங்கள் மட்டும் வளமிழக்கவில்லை, மக்களை நீண்டகாலத் திட்டத்தில்நோயாளர்களாக்கிக்கொண்டிருக்கின்றது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை ஆளுகைப் பகுதியில் இந்த வருட ஆரம்பத்தில் பார்த்தீனிய அழிப்பு இடம்பெற்றது. தற்போது மழைகாலம் என்பதால் மீண்டும் பார்த்தீனியச் செடிகள் பல இடங்களிலும் பரவுகின்றன. இவற்றை மீண்டும் முற்றாக அழிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. பார்த்தீனியம்கூடியஅளவில்பரந்துகாணப்படும் இடங்களை பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் அல்லது மானிப்பாய் பட்டினஉபஅலுவலகம், மானிப்பாய்கிராமஉப அலுவலகம், பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டுஇனங்காட்டுங்கள் - என்றுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பார்த்தீனிய அழிப்புநடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெற்றுவருகின்றன. இந்தவாரம் பார்த்தீனிய ஒழிப்பு வாரமாகவடக்குமாகாணஆளுநர்கடந்தவாரம் அறிவித்திருந்தார். (4)

# மூதாட்டியைக் கட்டித்தாக்கி நகைகள், பணம் அபகரிப்பு

## நாவற்குழியில் சம்பவம் மூதாட்டி மருத்துவமனையில்

சாவகச்சேரி, டிசெ. 20

மூதாட்டியைத் தாக்கிவிட்டு தங்கச் சங்கிலி, தோடுகள் என்பனவற்றை அபகரித்துச் சென்றனர் கொள்ளையர். தாக்குதலுக்குஇலக்கானமூதாட்டி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன்நித்தியலட்சுமி(வயது -70)என்பவரே காயமடைந்தார்.

மூதாட்டியின்வீட்டுக்கூரைத்தகட்டையும் உட்தகட்டையும் (லெவல் சீற்) உடைத்து கொள்ளையர் உட்புகுந்துள்ளனர். மூதாட்டிஅங்கிருந்துதப்பியோடமுற்பட்டபோது அவரின் முகத்தைத் துணியால் மூடிக் கட்டித் தாக்கிவிட்டு சங்கிலி, தோடுகளை அபகரித்தனர். அவரை ஓரிடத்தில் அமர்த்திவிட்டுவீடுமுழுவதும்தேடுதல்நடத்தி 20ஆயிரம்ரூபாபணம், 3 அலைபேசிகள் ஆகியவற்றையும் அவர்கள் எடுத்துச் சென்றுவிட்டனர் என்று மூதாட்டிசர்வகச்சேரிபொலிஸ்நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர்.

"எனக்கு 17 வயதாக இருக்கும்போது தந்தைதோடுகளைவாங்கித்தந்திருந்தார். தாய் தங்கச் சங்கிலி வாங்கித் தந்திருந்தார். தற்போதுவரை அவற்றைக் காதில் அணிந்திருந்து பக்குவமாக வைத்திருந்தேன் பறித்துவிட்டனர்" என்றுகூறி மூதாட்டி கவலை தெரிவித்தார். (4,9)

*யாழ்ப்பாண மாநகர சபையில்*

# நியமனங்கள் முறைப்படியில்லை விசாரணை நடத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 20

**2013, 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்ற நியமனங்கள் சிலவற்றில் உரிய விதி முறைகள் பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள தால் அது குறித்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

மின் இணைப்பாளர், பொறியியலாளர்கள் நியமனத்துக்குக் கோரப்பட்ட விண்ணப்பங்களில் பதவிக்கானஉரியதகமைகள் குறைக்கப்பட்டுவிண்ணப்படங்கள் கோரப்பட்டுள்ளன. மற்றுமொரு பணிக்குக் குறைந்த கல்வித் தகமை கொண்டவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். நியமனத்தில்உள்வாங்கப் பட்டபொறியியலாளர்பணி நீக்கம்செய்யப்பட்டுள்ளார். எனினும்மின்இணைப்பாளர்கள் தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர். குறித்த விடயம் கணக்காய்வு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்துக் குறித்த விடயம் கோப் கணக்காய்வுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கோப்குழுவிசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அந்த உத்தரவுக்கமைய பொறியியலாளர்நியமனம் தொடர்பில் தலைமைச் செயலரும், மின் இணைப்பாளர்நியமனம்தொடர்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அதற்கமையவே இரு விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளஎன்றுதெரிவிக்கப்பட்டது. (4,105)

# கொல்களங்களைத் தடை செய்யவேண்டுமென முதலுதவிச் சங்க தொண்டர் சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20

சாவகச்சேரி பிரதேச எல்லைக்குள் அதிக எண்ணிக்கையான மாடுகள் பெருமளவில் திருட்டுப் போகின்றது. தூய்மையற்ற இறைச்சி நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றுக்கு மாடுகள் வெட்டப்படும் கொல்களங்களின் ஒப்பந்தகாரரும், மாட்டிறைச்சிக் கடைகளை நடத்துவோருமேகாரணமாகின்றனர்என்று இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை குற்றஞ்சாட்டுகிறது. இவற்றைத்தடுக்கமாடுவெட்டும் கொல்களங்கள், மாட்டு இறைச்சிக் கடைகள்என்பனவற்றுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்துகிறது.

இது தொடர்பில் சங்கம் சாவகச்சேரி பிரதேசசபைக்குஅனுப்பியகடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள்பல மாடுகள் காடுகளிலும் வயல்களிலும் தோட்டங்களிலிலும் கடற்கரைகளிலும்வைத்துவெட்டப்பட்டுஇறைச்சியாக்கப்பட்டிருக்கின்றமை பின்னர் தெரியவருகின்றது -அவதானிக்க முடிகிறது.

சாவகச்சேரி பிரதேச சபை வழங்கிய உரிமங்களைப் பயன்படுத்தியே அங்கு இறைச்சி கொல்களங்களின் ஒப்பந்தகாரரும், மாட்டுறைச்சிக்கடைகளைநடத்துவோரும்செயற்படுகின்றனர். மாடுகள் களவு போவதற்கும் தூய்மையற்ற மாட்டு இறைச்சி இலங்கைமுழுவதும்விற்கப்படுவதற்கும் இவர்களேகாரணமாகஇருக்கின்றனர்என்றுஎமதுஅமைப்பின்கவனத்துக்குப்பொதுமக்கள்கொண்டுவந்துள்ளனர்.

மக்களின் பண்பாடுகளுக்குக் கேடு விளைவிக்க முன்னர் கன்றுத்தாச்சிப் பசுக்கள், வயதுக்குவராதநாம்பன்கள், நாகுகள் நோயுற்ற காளைகள், இலங்கைஅரசின்கொல்களம்மற்றும் இறைச்சியாக்கும் சட்டங்களுக்குப் புறம்பாகசெயற்படுவதைத்தடுக்கவும், மாடுகளைக் கொல்வதும், இறைச்சியாக்குவதும் உண்பதும்மாபெரும் பாதகச்செயல். பாவச்செயல்களால் வரும்சாபங்கள்பிரதேசசபைஉறுப்பினர்களையும்அவர்களதுகுடும்பத்தினரையும்சென்றடையாமல்தடுக்கவும். சாவகச்சேரிப்பிரதேசசபை, தனதுஎல்லைக்குள்மாடுகளைக்கொல்வதற்குத் தடை விதித்து, கொல்களங்களை அமைக்கத் தடை விதித்து, இறைச்சிக் கடைகளைநடத்தஉரிமம்வழங்காது சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தைக் காத்து அனைவரும் புண்ணியம் தேடிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று கடிதத்தில் கோரியுள்ளது.

"இந்து மக்களும் இந்து தத்துவங்களைக் கடைப்பிடிப்பவர்களும் மாட்டிறைச்சி சாப்பிடக்கூடாது. ஏனைய மதத்தினர்தமதுஉணவுக்காகஅதைச் சாப்பிட்டாலும் தென்னிலங்கைக்குக் கடத்தப்படுவதைமுற்காகத்தடைசெய்யவேண்டும். அதில் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நாம் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம்" என்று ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் தெரிவித்தார்.

"இஸ்லாமிய மதத்தில் ஓதிவிட்டு மாடு வெட்டலாம், சாப்பிடலாம் என்று எமது நூல் கூறுகிறது. நாட்டில் சட்டம் உள்ளது. ஒருவரது இறைச்சி உண்ணும் உரிமையைத் தடுக்கக்கூடாது. சட்டத்திலும்அதற்குஇடமில்லை. மாட்டிறைச்சிக் கடைகள் இயங்க அனுமதிப்பதா தடை செய்வதா என்பதைச் சட்டத்தின் மூலமாக அணுகமுடியும். சட்டத்தைச் சரியானமுறையில்நடைமுறைப்படுத்தினால் கால்நடைகள் களவு போவது தடுக்கப்படும்" என்று முஸ்லிம் மதகுரு சுபியான் தெரிவித்தார். (4,8)

*தடை விதிக்கக் கோரியபோதும்*

# மாட்டிறைச்சிக்கடைகள்பல குத்தகைக்கு விடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணமாவட்டத்தில்மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விட வேண்டாமென்று இந்துமதஅமைப்புகள் சில கோரிக்கை விடுத்துவரும் நிலையில், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலானஉள்ளூராட்சிசபைகள் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடக் கேள்வி கோரிள்ளன.

கடந்த வருடம் உள்ளூராட்சி சபைகள் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சிக்கடைகளைக்குத்தகைக்கு விடுவது தொடர்பாக பத்திரிகைகளில் மூன்று தடவைகள் கேள்வி அறிவித்தல்கள் விடுத்தன. கேள்வித் தொகை அதிகம் என்று எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வரவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் புதிய சபைகள் பொறுப்பேற்றதும் சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் சட்டவிரோதமாகஇறைச்சிக்காகவெட்டுவதற்காகப் பசுக்கள் கட்டப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. பசுவதையைக் கண்டித்த இந்து அமைப்புகள் பல, அடுத்த வருடம் மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடவேண்டாமென்று வலியுறுத்தின.

மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாகக் கேள்வி அறிவித்தல் கோராதுவிடின் கணக்காய்வுக் குழுவின் கேள்விக்குப் பதில் அளிக்கவேண்டும். என்பதற்காகமாட்டிறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பான கேள்வி அறிவித்தல்கள்கடந்தமாதம்தொடக்கம்பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியாகின. தற்போது மீள்கேள்வி அறிவித்தல் பட்டியல்கள் வெளியாகி வருகின்றன. மீள்கேள்வி அறிவித்தலில் மாட்டிறைச்சி தவிர்ந்த ஏனையவற்றுக்கு மீள்கேள்விகோரப்படுகின்றபோதிலும் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவது பற்றிக் குறிப்பிடவில்லை. இது தொடர்பாகச் சபைகளின் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இந்தமுறை மாட்டிறைச்சிக் கடைகளைப் பலர் போட்டியிட்டு குத்தகைக்கு எடுத்துள்ளனர்" எனத் தெரிவித்தனர்.

சபைகளின் அமர்வுகளில் மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விட வேண்டாமென்றுஒருசிலஉறுப்பினர்களும் குத்தகைக்கு விடவேண்டும் என்றுஇன்னும்சிலஉறுப்பினர்களும் கோரிக்கைவிடுத்துவருகின்றனர். சில சபைகளில் மாட்டிறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக வாக்கெடுப்பும் இடம்பெற்றுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாட்டிறைச்சி உண்பவர்களின் உரிமையைத்தடைசெய்யக்கூடாது என்பதும் உறுப்பினர்கள்சிலரின்வாதமாகவுள்ளது. மாட்டிறைச்சி சாப்பிடாத உறுப்பினர்களும்இதேகருத்தைவலியுறுத்தி வருகின்றனர். (4,9)



*சிறந்த நூலகமாக*

# எட்டாவது தடவையாகவும் கைதடி நூலகத்துக்கு விருது

சாவகச்சேரி, டிசெ. 20

கைதடி பொது நூலகம் தொடர்ச்சியாக எட்டாவது வருடமாகவும்சிறந்தநூலகத்துக்கானவிருதைப்பெற்றுக்கொண்டதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிப்பிரதேசசபையின்ஆளுகைக்குள் இந்த நூலகம் உள்ளது.

தேசியநூலகவாசிப்புமாத நிகழ்வுகளைக் கடந்த வருடம்சிறப்பாகநடத்தியபொது நூலகங்களுக்குவிருதுகள் வழங்கும்நிகழ்வுகொழும்பு பத்தரமுல்லையில் கடந்த 13ஆம்திகதிநடைபெற்றது. தேசியநூலகஆவணவாக்கல் சபையினர் இதனை நடத்தினர். அங்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டு கைதடி பொது நூலகத்துக்கான விருது வழங்கப்பட்டது. பேராசிரியர் கே.ஜீ. கருணவிதான விருது வழங்கபிரதேசசபைத்தவிசாளர் க.வாமதேவன், கைதடி நூலகர் திருமதி இ.சிவசுப்பிரமணியம்ஆகியோர் அதைப் பெற்றுக் கொண்டனர். இதுதவிர, நல்லூர், உடுவில், தெல்லிப்பளை பிரதேச சபைகளுக்குஉட்பட்டஒவ்வொரு பொது நூலகத்துக்கும் சிறந்த நூலகத்துக் கான விருதுகள்வழங்கப்பட்டன. (4,9)



*வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அழகியல்பாட அலகினரால்பாடசாலை மாணவர்களுக்கிடையில்நடத்தப்பட்ட அகில இலங்கை சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வும் கடந்த 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. விருந்தினராகக் கலந்து கொண்ட மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் மாணவர்களுக்குச்சான்றிதழ் வழங்கினார். (9)*

# சுகாதாரச் சீர்கேட்டுக்கு 2 ஆயிரம்ரூபா தண்டம்

சாவகச்சேரி, டிசெ. 20



சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய கொடிகாமம் நகர உணவக உரிமையாளரைச் சாவகச்சேரி நீதிமன்று எச்சரித்து 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாண மாவட்ட உணவுகள், மருந்துகள்பரிசோதகர்ந.கஜேந்திரன்தலைமையில் நேற்று முன்தினம் நடத்திய திடீர் பரிசோதனையில் சீர்கேடு தெரிய வந்தது.

உணவு சார்ந்த உபகரணங்களைப் பொருத்தமான மூடிகளால் பேணத் தவறிய நிலையில் உணவு தயாரித்தமை, உணவகத்தின்மலசலகூடத்தைதுப்புரவுடன்பேணத்தவறியமைஆகியகுற்றச்சாட்டுக்கள்நடத்துநர்மீதுசுமத்தப்பட்டன. வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். தண்டம்விதிக்கப்பட்டது. (4,9)

# பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு 20க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்

## மாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

**வடக்கு மாகாணத்தில் மருத்துவ வெற்றிடங்களில் பல் அறுவைச் சிகிச்சைநிபுணர்வெற்றிடங்களே நீண்டகாலம் நிரப்பப்படாமல் உள்ளன. பல்மருத்துவத்துறைக்குவிண்ணப்பிப்பவர்களும்குறைவாகவே உள்ளனர் என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக மருத்துவ மனைகளில்நிலவும் மருத்துவர்வெற்றிடங்கள்தொடர்பாகக் கேட்கப்பட்டபோது இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்குமாகாணத்தில்உள்ளமருத்துவ மனைகளில் நீண்டகாலம் மருத்துவர் வெற்றிடங்கள் காணப்படுகிறன. அனுமதிக்கப்பட்ட 882 ஆளணியில் 200க்கும் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில்வருடாந்தம் மருத்துவர்களின் வெற்றிடங்கள் படிப்படியாகநிரப்பப்பட்டாலும்பல்மருத்துவர்கள் குறிப்பாக பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளன.

பல் மருத்துவ கற்கை நெறிகளுக்கு மாணவர்களின்நாட்டம்குறைவாகவே உள்ளது. அதிலும் தமிழ் மாணவர்கள் நாட்டம் மிகக்குறைவாக உள்ளது. கொழும்புசுகாதாரஅமைச்சின் ஊடாக பல் மருத்துவர்கள்நியமனம்வழங்கப்படும்போது எமது மாகாணத்துக்குத் தேவையான பல் மருத்துவர்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் குறைவாகவுள்ளது. வடக்குமாகாணத்தில் சுமார் 60 க்கும் அதிகமான பல் அறுவைச்சிகிச்சைநிபுணர்கள்தேவையாக உள்ளனர். பல் சார்பான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதற்குப் பல் சார்ந்த மருத்துவம்சிறப்பாகக்கற்றிருப்பது அவசியம். யாழ்ப்பாண மாவட்டத்துக்குமாத்திரம்20க்கும்அதிகமானபல் அறுவைச்சிகிச்சைநிபுணர்கள்தேவையாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)



## ஆறு மாதங்களாகச் சம்பளம் இல்லை! பணிப்புறக்கணிப்பில்பணியாளர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 20

வடமாராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமக்கான மாதாந்த சம்பளம் கடந்த 6மாதங்களாக வழங்கப்படவில்லை என்று கூறிச்சில நாள்களாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

"குறைந்த சம்பளம் பெற்று வந்தோம். அதுவும் 6 மாதங்களாக வழங்கப்படவில்லை. வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் பணியாற்றி வந்த நாங்கள் தற்போது மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். இது குறித்துப் பல தடவைகள் சுட்டிக்காட்டியும்இயக்குநர் சபை சம்பளத்தை வழங்க முயற்சிக்கவில்லை"என்று அவர்கள் தெரிவித்தனர்.

"ஆறு மாதங்கள் சம்பள நிலுவை இருந்தபோதும் முற்பணமாக 10 ஆயிரம் ரூபா கோரியிருந்தோம். அதையும் தரவில்லை" என்றும்அவர்கள்தெரிவித்தனர்

இது தொடர்பாக தற்போது பதில் தலைவராக உள்ள சி.சிறிகலாதனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

"தான் சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்டு இரண்டுநாள்களே ஆகின்றன. சங்கம் பெரும் நட்டத்தில் பல வருடங்களாக இயங்கிவருகிறது. இதனால் பணியாளர்களுக்குஆறுமாதங்களாகச் சம்பளம் வழங்க முடியாதுள்ளது. தாம் ஒரு சில மாதங்களுக்குரியசம்பளத்தையேனும்வழங்கமுயற்சிப்பதாகவும் இத தொடர்பாகயாழ்ப்பாணமாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது" என்றுதெரிவித்தார்.

"எது எப்படி இருப்பினும் வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்2010ஆம்ஆண்டுமீள இயங்கத் தொடங்கிய காலத்தில் ஒரு கோடி 25 இலட்சம் ரூபா வரை நிதி இருந்தது. இரண்டுலொறி, கன்ரர்,

உழவு இயந்திரம் இயங்கும் நிலையில் இருந்தும் அப்போதை இயக்குநர் சபை கவனம் செலுத்தவில்லை. பொதுச்சபை உறுப்பினர்கள் அனுமதி இன்றி நிதியைச் செலவீடு செய்துள்ளனர். அதனாலேயேசங்கம்இயங்கமுடியாதநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. முன்னர் 22 கிளைகள் இயங்கி வந்தபோதும் தற்போது 5 கிளைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

நிதி கிடைத்ததும் மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொதுச்சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (4,160)

உறவினர்கள் கைவிட்டதால்

## இல்லத்தில் சேர்க்குமாறு வீறிட்டு அழுதார் முதியவர்

*கைதடி இல்லத்தின் முன்பாகச் சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ. 20

உறவினர்கள் தன்னைக் கைவிட்டுள்ளனர். தன்னை முதியோர் இல்லத்தில் இணைத்துக் கொள்ளுங்கள் என்றுகூறி வீறிட்டு அழுது புலம்பினார் முதியவர். அவரது நிலையைக் கண்ட கைதடி அரச முதியோர் இல்லத்தினர் இல்லத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம்காலை இடம்பெற்றது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை இராஜகோபால் (வயது85) என்பவரே அங்கு சேர்ந்துள்ளார். ஏழு வருடங்களாகக் கொழும்பில்உறவினர்களால்கைவிடப்பட்டிருந்தநிலையில்வசித்து வந்தேன் என்று அந்த முதியவர் கூறினார் என்று கைதடி அரச முதியோர் இல்லத்தினர் தெரிவித்தனர்.

"உடல்நலக்குறைவு காரணமாக முதியோர் இல்லத்துக்கு வந்தேன்" என்று இல்லத்தின் வாயிலில் அவர் வீறிட்டு அழுதார். அவரின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அவரை இல்லத்தில் இணைத்தோம் என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். முதியவரின் தகவல்களைப்பெற்றுக்கொள்ள வசதியாக அவரின் உறவினர்கள் இல்லத்துடன் தொடர்புகொள்ளுங்கள் என்று அத்தியட்சகர் கோரியுள்ளார். (4,17)

*நாவற்குழி கடற்கரையோரத்தில்*

## ஏராளம் பனைகள் அழிப்பு! இருவருக்கு எதிராக வழக்கு

*பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 20

சட்டவிரோதமாக சுமார் 500 தொடக்கம் 600 வரையான பனைகள், வடலிகள் அழித்து நாசமாக்கப்பட்டுள்ளன. அவற்றைஅழித்தனரென்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றுபனைஅபிவிருத்திச்சபைதெரிவித்தது.

நாவற்குழி கைதடி, பின்முருங்கை வீதி கடற்கரையோரத்தில் 10 ஏக்கர் பனந்தோப்பில் கடந்த திங்கட்கிழமை மதியம் இரண்டு கனகரக வாகனங்கள் மூலமாக அவை அழிக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்று. பனை அழிப்பைத் தடுத்து நிறுத்தி இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

இது குறித்துச் சபையின் உத்தியோகத்தர்கள் அந்தப் பகுதிக்குரிய கிராம உத்தியோகஸ்தர் மற்றும் சாவகச்சேரிபொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் அந்த வாகனங்களுடன் சாரதிகளைப்பொலிஸ்நிலையத்துக்குஅழைத்துச்சென்றனர்.

வடக்கு மாகாணத்தில் பனை வளம் அருகி வரும்நிலையில்அபிவிருத்தித்தேவைகளுக்காகத் திட்டமிட்டுப் பனைகள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. இதுசமூகஆர்வலர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இனி வருங்காலங்களிலும் பனை அழிப்பில் ஈடுபடும் பட்சத்தில் பனை அபிவிருத்திச் சபை தொடர்ந்தும் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என்று பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)



# மாகாண சபையினருக்கு புதிய பல நடைமுறைகள்!

## அரசதலைவர் செயலகம் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20

மாகாண சபையினருக்கு வழங்கப்பட்டு வரும் மேலதிக படிகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் புதிய நடைமுறை ஒன்று இந்த மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது. அரச தலைவர் செயலகம்இதுபற்றிய சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது என்று பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபற்றிமேலும்தெரிவிக்கப்பட்டதாவது:

மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும்அவைத்தலைவர்களுக்கும்பல்வேறு படிகள், கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறன. அலுவலக படி, தொலைபேசி படி. போக்குவரத்து என்பனவற்றுடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறன. இவற்றில் பல்வேறு மாற்றங்களை உட்படுத்தி புதிய சுற்றறிக்கை ஒன்றை அரச தலைவர் செயலகம் கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி மாகாண பிரதி முதன்மைச் செயலருக்கு அனுப்பியுள்ளது.

சிலசபைகளில்ஆளுநரின்அனுமதியுடன் அவை வழங்கப்பட்டன. அலுவலகப் படியாக வழங்கப்பட்டு வரும் 50ஆயிரம் ரூபா நிறுத்தம், தொலைபேசிப் படியாக அவைத் தலைவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் 25 ஆயிரம் ரூபாவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.




புதிய சுற்றறிக்கையின் படி அலுவலகம், வீடு போன்றவற்றில் பயன்படுத்தும் தொலைபேசி செலவினங்களுக்கு உரிய பில்செலுத்தப்படும்போது பில்லில்குறிப்பிடப்படும் தொகை மாத்திரம் கொடுப்பனவாக வழங்கப்படும். ஆனால் இந்த தொகை25ஆயிரம்ரூபாவில்இருந்து40 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. சபை அமர்வுகளுக்கு வருபவர்களுக்குக் கொடுப்பனவாக ஆயிரத்து 250 ரூபா வழங்கப்பட்டது. அது 250 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சபை அமர்வுகளுக்குவெளிமாவட்டத்தில் இருந்து வரும் உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப் படியாக 5 ஆயிரம் ரூபா வரையில் ஒரு அமர்வுக்குவழங்கப்பட்டது. ஆனால்இப்போது வாகனத்தில் வந்து செல்லும் எரிபொருள் கொடுப்பனவு மட்டும்வழங்கப்படவேண்டும் என்றுள்ளது. இந்த நடைமுறைகள் யாவும் இந்தமாதம்தொடக்கம்மாகாணப் பிரதிமுதன்மைச்செயலர் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால்இதற்கு மாகாணப்பிரதி. முதன்மைச்செயலர்கள்பதில்சொல்லவேண்டும் என்று கண்டிப்பான அறிவுறுத்தலாகச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

## எதிர்கட்சித்...

முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுசில் பிரேமஜயந்த அரசமைப்பின் ஆதாரங்களையும், கடந்தகால நீதிமன்றத் தீர்ப்புகளையும் உதாரணம் காட்டி சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை நியமித்தது சரியானதெனவும், எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் நீதிமன்றம் செல்லவோ தெரிவுக்குழுவை அமைக்கவோ முடியாதெனவும் வாதிட்டார்.

இதனையடுத்து ஐ.தே.க. தரப்பில் ஹர்சன ராஜகருணா, மரிக்கார், ஆசும் ஆரசிங்க உள்ளிட்டோரும் ஐக்கிய மக்கள் முன்னணியின் சார்பில் சந்திம வீரக்கொடி, உதய கம்மன்பில ஆகியோரும் தமது கருத்துகளை முன்வைத்து தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதே வேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சம்பந்தனின் கருத்துத் தொடர்பில் தன் கருத்துகளை முன்வைத்ததுடன், மகிந்த அணியினர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்தமை தொடர்பில் சில கருத்துகளை முன்வைத்தார். இதையடுத்து அவருக்கும், மகிந்த அணியைச் சேர்ந்த ஹெகலிய ரம்புக்வெலவுக்கும் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

ஹக்கீம் சம்பந்தனுக்கு ஆதரவாக கருத்துகளை முன்வைத்துக்கொண்டிருந்த போது, சம்பந்தன் அதனை ஆதரித்து உண்மை உண்மையென உரத்தகுரலில் கூறினார். இதன்போது சம்பந்தனுக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்த சுசில் பிரேமஜயந்த சம்பந்தனுக்கு ஏதோ கூறமுயன்ற போது சம்பந்தன் அவருடன் உரத்தகுரலில் கடும் கோபத்துடன், தர்க்கத்தில் ஈடுபட்டார். சுசில் பிரேஜயந்தவோ சிரித்தவாறு சம்பந்தனுக்கு ஏதோ கூறிக்கொண்டிருந்தார்.

இந்த சர்ச்சையின் போது எழுந்த சபை முதல்வாரன லக்ஷ்மன் கிரியெல்ல, சுசில் பிரேமஜயந்தவை பெயர்கூறி அழைத்து நீங்கள் மொட்டில் இணையவில்லையா? எனக் கேட்டார். அதற்கு இல்லையென சுசில் பிரேமஜயந்த பதிலளித்தார். அதனைத் தொடர்ந்து லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் மகிந்த அணியைச் சேர்ந்த பலரின் பெயரை கூறியழைத்து நீங்கள் இணையவில்லையா? நீங்கள் இணையவில்லையா? எனத் தனித்தனியாகக் கேட்டார். அவர்கள் இல்லையென பதிலளித்தனர்.

அப்போது எழுந்த அரச தரப்பு தலைமைக் கொரடாவான கயந்த கருணாதிலக்க தனது அலைபேசியில், மகிந்த ராஜபக்சவிடமிருந்து சுசில் பிரேமஜயந்த இலங்கைப் பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளும் ஒளிப்படத்தைக் காட்டி இதோ நீங்கள் மொட்டில் உறுப்பினராகும் காட்சியென கூறினார். ஆனால், அது பொய்யென சிரித்தவாறே மறுத்தார். இவ்வாறு சுமார் 35 நிமிடங்கள் வரை எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பிலும், மகிந்த அணியினர் பொதுஜன பெரமுனவில் இணைந்தமை தொடர்பிலும் தர்க்கம் நீடித்தது.

இதனை முடிவுக்கு கொண்டுவந்த பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி இரா.சம்பந்தன் முன்வைத்த விடயத்தை தான் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டுசெல்வேன் என்று தெரிவித்தார். (ம-31)

## மகிந்தவுக்கான...

மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக' சபாநாயகர் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இதற்கு சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கியமையைக் கேள்விக்கு உட்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த இரா.சம்பந்தன், சபாநாயகரின் அறிவிப்பைக் கேள்விக்கு உட்படுத்தி நாடாளுமன்றத்தில் நேற்றுச் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

**இருமுறை ஏற்பு**

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கூடியபோது, எதிர்க்கட்சியில் இரண்டாவது கூடிய ஆசனங்களைக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராக என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் ஏனைய உறுப்பினர்களால் இது தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அதிகூடிய ஆசனங்களைக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் என்னை எதிர்க்கட்சித் தலைவராக மீண்டும் ஒருமுறை ஏற்றுக் கொண்டீர்கள். அந்த முடிவை நீங்கள் அறிவித்தபோது, அதுவே இறுதி முடிவு என்றும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

**எப்படிச் சாத்தியம்?**

மகிந்தவை நேற்று (நேற்றுமுன்தினம்) எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கவேண்டும் என்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கோரிக்கையை ஏற்று, மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்தீர்கள். இரண்டு முறை மீள் உறுதி செய்து எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் நியமித்த என்னை அந்தப் பதவியிலிருந்து நீக்காமல், மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவிப்பைச் செய்துள்ளீர்கள். இதனூடாக, நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தக்க வைக்கப்பட்டிருப்பதாகவே புலப்படுகின்றது. என்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதில் உங்களுக்கு முழுமையான திருப்தி இருக்கவில்லையா என்ற கேள்வியை இது எழுப்புகின்றது.

**முறையற்ற செயல்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைவிட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றத்தில் அதிகூடிய ஆசனங்களைக் கொண்டிருப்பதை கேள்விக்கு உட்படுத்த முடியாது. நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் என்னை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டீர்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட இந்த இரு கட்சிகளினதும் ஒரு சாரார் அரசில் அங்கம் வகித்திருந்தார்கள். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவர். நிறைவேற்று அதிகாரத் தலைவர். அரசின் தலைவர் மட்டுமல்ல, பல்வேறு அமைச்சு பதவிகளை வகிக்கும் ஒரு அமைச்சராகவும், அமைச்சரவையின் தலைவராகவும் செயற்படுகின்றார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இன்னும் பலர் அமைச்சரவையில் பல்வேறு பதவிகளை வகித்தனர். அவர்கள் எல்லோரும் நாடாளுமன்றத்துக்கு கூட்டுப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள். இதனடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு செய்யப்படுவது முறையற்ற செயலாக அமைந்திருக்கும். இந்தப் பின்னணியில், நாடாளுமன்ற சம்பிரதாய மற்றும் சாசனமுறைப்படி நாடாளுமன்றத்தில் இரண்டவாது பெரும்பான்மையுள்ள கட்சியின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுவதை நடைமுறைப்படுத்தி என்னை நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இரண்டுமுறை ஏற்றுக் கொண்டீர்கள்.

**அரசு நியமிக்கப்படாத நிலையில் அவசரம் ஏன்?**

ஒக்ரோபர் 26ஆம் திகதியிலிருந்து தலைமை அமைச்சர், அமைச்சரை மற்றும் நாடாளுமன்றம் தொடர்பில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றன. அரசமைப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு அமைய உயர்மட்டத்தில் நீதித்துறையால் கொடுக்கப்பட்ட தீர்ப்புக்களின் அடிப்படையில் சில முடிவுகள் இந்த விடயங்களில் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில்தான் மேற்குறித்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் நீங்கள் தீர்மானமொன்றை வழங்கியிருக்கின்றீர்கள்.

கடந்த 16ஆம் திகதி நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அமைச்சரவை ஒன்றோ அரசோ இன்னமும் முறையாக நியமிக்கப்படவில்லை. கடந்த 18ஆம் திகதியன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர்கள் சபையிலே கடந்து வந்து அரச தரப்பில் அமர்ந்து கொண்டனர். அரசு நியமிக்கப்படாத இந்தப் பின்னணியில் அவசரமாக இன்னொமொருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கான தேவைஇல்லை என்பதனை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**நிலமை சிக்கலாகும்**

பதவியில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவரை நீக்காமல் இன்னொருவரை எதிர்க்கட்சித் தலைவராக்கும் அறிவிப்பை செய்தமை விடயங்களை இன்னும் சிக்கலாக்கியுள்ளது. நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்த உறுப்பினர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், அவர் அந்தக் கட்சியிலிருந்து விலகி ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையானது வெற்றிடமாக உள்ளது என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்த உறுப்பினர், நீங்கள் அறிவித்த அந்த நாளில் நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட இல்லை என்பதை உங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

**அரசமைப்பை மதிக்கவில்லையா?**

மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் (சபாநாயகர்) அறிவிக்க எடுத்த தீர்மானமானது அவசரமாகவும் எமது அரசமைப்பை மீறும் வகையிலும் இருக்கின்றதாகவே கருதப்படுகின்றது. இலங்கை தனது மிக முக்கிய சட்டமான அரசமைப்பை மதிக்காத ஒரு தோல்வியை நோக்கி நகருகின்ற நாடாக மாறுகின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இந்த நடவடிக்கையையும், இந்த நாடு இன்றைக்கு இருக்கும் இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கும் மூல காரணம் பெரும்பான்மைவாத சிந்தனை என்றே, பிளவுபடாத பிரிக்க முடியாத இலங்கை நாட்டில் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழ விரும்பும் மக்கள் கருதுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையானது தமிழ் மக்களும் தமிழ் பேசும் மக்களும் உள்ளடங்கலான அனைத்து மக்களும் சுய மரியாதையுடனும் மதிப்புடனும் வாழ்வதற்கு வழிவகுக்கும் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டியதன் அதி முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கிறது - என்றார். (ம-5)

## விட்டுக்கொடுக்க...

களை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டபோதும், மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையிலான அரசியல் மோதல் முடிவுக்கு வரவில்லை. ரணில் தலைமையிலான அமைச்சரவை இன்னும் பதவியேற்கவில்லை. அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பில் மைத்திரியுடன் இணக்கம் காணப்படாமையே இதற்குக் காரணம். சட்டம் ஒழுங்கு மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களை தன்வசம் வைத்துக்கொள்ள மைத்திரிபால திட்டமிட்டுள்ளார். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

"இந்த இரண்டு அமைச்சுக்களும் நிறைவேற்று அதிகார அரச தலைவரிடம் அளிக்கப்பட்டால், அது அரசமைப்பு மற்றும் அரசியல் நெருக்கடிகளை மேலும் வலுப்படுத்தும். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய அரச தலைவர் பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சுக்களை மாத்திரமே வைத்திருக்க முடியும். எனவே, வேறெந்த அமைச்சையும் அவருக்கு கொடுக்க நாங்கள் இடமளிக்க மாட்டோம். ஏனென்றால் அது மேலும் பிரச்சினைகளை உருவாக்கும்" என்று அகிலவிராஜ் மேலும் தெரிவித்தார். (ம-5)

## நிறைவேற்று அதிகாரம்...

அமைப்பின் பொதுச் செயலர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டுச் சக்திகளை இணைத்துக் கொண்டு, நாட்டைப் பிரிக்கும் அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவேன் என்று கூறியே தற்போது ரணில் பதவியேற்றிருக்கின்றார். ரணில் பதவியேற்றதை மக்கள் வழங்கிய தீர்ப்பாக ஒருபோதும் கருத முடியாது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 225 உறுப்பினர்கள் தொடர்பிலும் மக்களுக்கு சிறந்த அபிப்பிராயம் இல்லை. இலஞ்சத்துக்கும், அமைச்சுப் பதவிகளுக்கும் விலை போனவர்களே தற்போது நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளனர். நாட்டு மக்களுக்கு பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பை வழங்க வேண்டும். அதன் ஊடாக சிங்கள மக்கள் மாத்திரமன்றி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் தமது தேவைகளை நிறைவேற்றத்தக்க, தமக்குப் பொருத்தமான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு ஏற்படும்.

நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக் கூடாது. அந்த முறைமை நாட்டுக்கு இன்றியமையாதது என்பதே எமது நிலைப்பாடாகும். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் காரணமாகவே நாட்டில் இந்தளவுக்குத் தளம்பல் நிலையும், குழப்பநிலையும் ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் இருபதாவது திருத்தம் கொண்டுவரப்படுமாயின் நாடு எத்தகைய மோசமான நிலையைச் சந்திக்க நேரிடும் என்று எதிர்வுகூறுவதற்குக்கூட முடியாது. ஆதலால்தான் நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக் கூடாது என்கிறோம் - என்றார். (ம-5,61)

## நிறைவேற்று...

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் ஆதரவளித்தால் கூட நான் ரணிலை தலைமை அமைச்சராக நியமிக்க மாட்டேன் என்று தெரிவித்திருந்தேன். இது எனது தனிப்பட்ட அரசியல் கருத்து. அந்தக் கருத்தை நான் தற்போதும் கொண்டிருக்கின்றேன். எனினும் நான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதிக்கின்றேன். இதனால் தலைமை அமைச்சர் பதவியை ரணிலுக்கு மீண்டும் வழங்கவேண்டும் என்று தீர்மானித்தேன்.

. அரசியல் நெருக்கடி நிலவிய காலத்தில் ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் ராஜபக்ச தரப்பினர் பெரும்பான்மையைப் பெறாமலிருப்பதை உறுதி செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயன்றனர். இலஞ்ச ஊழல், அரசியல் அச்சுறுத்தல், வன்முறைகள் போன்ற தீமையான நடவடிக்கைகள் அழிக்கப்படுவது அல்லது குறைக்கப்பட்டுப் புதிய கலாசாரத்தை உருவாக்குவதே எனது நோக்கம். நான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர். நான் மக்களின், தேசத்தின் நலனுக்காக எனது அதிகாரங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்துவேன். எனது பதவிக்காலம் முழுவதும் நான் அவ்வாறு எனது அதிகாரங்களை பயன்படுத்துவேன்.

நான் தெளிவான மனச்சாட்சியுடன் இருக்கின்றேன். எனது அனைத்து முடிவுகளையும் தேசத்தின் நலனையும் மக்களின் நலனையும் கருத்தில்கொண்டே எடுத்தேன். அரசமைப்பை மீறும் நோக்கத்துடனேயோ தீய நோக்கத்துடனேயோ நான் இதனைச் செய்யவில்லை.

நாடு மிகப்பெரும் அரசியல் நெருக்கடியிலிருந்தது. தேர்தலுக்குச் செல்வதே சிறந்த தீர்வாகக் காணப்பட்டது. இதன் காரணமாகவே நான் அரசமைப்பு நிபுணர்களுடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பை வெளியிட்டேன் - என்றார். (ம)

## மைத்திரியை...

நீக்கி மகிந்த ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். இதன் பின்னர் நாடாளுமன்றத்திலும், பொது வெளியிலும் உரையாற்றிய சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனவை பைத்தியம் என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஏற்கத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்த பொன்சேகா, மைத்திரிபால முன்பாக பதவியேற்பதை நினைக்க வெட்கமாக இருக்கின்றது என்றும் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அமைச்சுக்கு பொன்சேகாவின் பெயரை ரணில் விக்கிரமசிங்க பிரேரித்தாலும் அதற்கு அமைவாக பொன்சேகாவுக்கு பதவி வழங்கமாட்டேன் என்று மைத்திரி கூறியுள்ளார். (ம-5)



## பார்த்தீனியம்ஒழிப்பு

கொடிகாமம், டிசெ. 20

கைதடிமேற்குசரஸ்வதிசனசமூகநிலையம், கைதடி நேவையூர்சுற்றாடல்பகுதிகளில்பார்த்தீனியஒழிப்புநடவடிக்கைகள் கடந்தஞாயிற்றுக்கிழமைஜே/293கிராமஅலுவலகர்தலைமையில் இடம்பெற்றது.

இந்த பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையில் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்மற்றும்பொதுமக்கள்கலந்துகொண்டனர். (ஐ-159)



## வித்தியாலயத்தில் துப்புரவுப்பணி

கொடிகாமம், டிசெ.20

கைதடிமுத்துக்குமாரசாமிமகாவித்தியாலயத்தில்துப்புரவுப் பணிகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

கைதடிதெற்குகிராமஅலுவலர்வி.நியூரிசா தலைமையிலும், வித்தியாலயத்தின் அதிபர் கா.கணேசபாலேந்திரனின் மேற்பார்வையில் வித்தியாலயத்தின் வளாகம் துப்புரவு செய்யப்பட்டது.

மழை காலங்களில் வெள்ளம் தேங்கி தொற்று நோய்கள் பரவுவதிலிருந்து மக்களைபாதுகாக்கும்நோக்கில் இந்தத் துப்புரவு பணிகளை கைதடி பிரதேச ஜே/291கிராம மக்கள் மேற்கொண்டனர். (ஐ-159)

## மருதங்கேணியில் தன்னியக்கசேவை

மருதங்கேணி, டிசெ.20

மருதங்கேணி இலங்கை வங்கியில் நேற்றுத் தொடக்கம் தன்னியக்க பணப் பரிமாற்றசேவைஊடாகபணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




வடமராட்சிக் கிழக்கு பிரதேசத்தில் பல வருட காலமாக ஒரு அரச வங்கி இல்லாது காணப்பட்டமையால் மக்கள்வங்கிச்சேவையினைப் பெற்றுக்கொள்ளவதற்காக கிளிநெச்சிஅல்லதுயாழ்ப்பாணத்திற்கேபயணம்செய்து வந்தனர்.

பின்னர் குறிப்பிட்ட சில காலத்துக்கு முன் பருத்தித்துறைஇலங்கைவங்கியின் கிளை ஆரம்பிக்கப்பட்டு வங்கி படிப்படியாக முன்நேற்றமடைந்துஅனைத்து வசதிகளும் கொண்ட வங்கியாக மாற்றப்பட்டது.

இதன் பின்னர் இங்குள்ள மக்கள் எந்த விதமான சஞ்சலமும் இல்லாது மருதங்கேணியுடன் வங்கித் தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர்.

இந்த வங்கியின் அடுத்த கட்ட சேவையாக தன்னியக்க பணப் பரிமாற்ற சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)

## சீருடை வழங்கல்

சாவகச்சேரி, டிசெ. 20

சாவகச்சேரிடிறிபேக்கல்லூரிமாணவர்களுக்கான இலவச சீருடைத்துணிகள்கல்லூரியில்நாளைமுற்பகல்9.30மணி தொடக்கம் வகுப்பாசிரியர்களால் வழங்கப்படும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களும், ஏனைய மாணவர்களும் நேரில் வந்து சீருடையினைப் பெற்றுக் கொள்ளுமாறுஅதிபர்செ.பேரின்பநாதன்அறிவித்துள்ளார். (ஐ-9)

# ஆசிரிய இடமாற்றக்கொள்கையில் மாற்றங்கள்செய்யவேண்டியுள்ளன

## ஆளுநரிடம் வலியுறுத்தியுள்ளது இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம்

**யாழ்ப்பாணம், டிசெ. 20**

**வடக்கு மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கையில் புதிய நடைமுறைகளை உள்ளடக்கி அதன்படி இடமாற்றங்கள் வழங்க நடவடிக்கை எடுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.**

ஆளுநரின் தலைமையில் அண்மையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், 12 வலயங்களின் பணிப்பாளர்கள், ஆளுநரின் செயலாளர், தொழிற்சங்கப்பிரதிநிதிகள்அதில் கலந்துகொண்டிருந்தனர். இது குறித்து சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்குமாகாணத்தில்யாழ்ப்பாணம்தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். விடுதிகள் சீரின்மை, போக்குவரத்துச் சீரின்மை, பாதுகாப்புச் சீரின்மை முதலிய பிரச்சினைகள் சீர்ப்படுத்தப்படவில்லை. அவ்வாறிருக்கையில்கஷ்ட, அதிகஷ்டப்பிரதேசங்களில்உள்ள பாடசாலைகளில்கைவிரல்அடையாளஇயந்திரங்களைப்பொருத்தி, அங்குபணியாற்றும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளனர்.

வசதிகள் அற்ற பாடசாலைகளில் அந்த வசதிகளைஏற்படுத்திக்கொடுக்கும்வரைஅவற்றை அகற்றுங்கள்என்றுஆளுநரிடம்கோரிக்கை விடுத்தோம். சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றுஆளுநர்உறுதியளித்தார். அதிகாரிகளும், தொழிற்சங்கப்பிரதிநிதிகளும் இடமாற்றச் சபையில் முறைகேடாக நடந்து கொள்கின்றனர். தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு முரணாக மாகாணத்துக்கு நிலையான கொள்கையில்லாமல் பக்கச்சார்பாக இடமாற்றம் நடைபெறுவதால் ஆசிரியர்கள் உள ரீதியாக பாதிப்படைந்துள்ளனர். தவறான முடிவெடுக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஆத்மதிருப்தியுடன் கற்றல் கற்பித்தலில் முழு மனத்துடன் ஈடுபடமுடியாமல் தவிக்கின்றனர்.

இவ்வாறான சிக்கல்களைத் தவிர்ப்பதற்குத் தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையைத் தழுவி வடக்கு மாகாண ஆசிரிய இடமாற்ற கொள்கையைவகுக்குமாறுகேட்டுக்கொள்கிறோம் என்று கலந்துரையாடலில் கருத்துக்களை முன்வைத்தோம்.

அதன்போது, விரைவில் தொழிற்சங்க உதவியுடன், கொள்கையொன்றைத் தயாரிக்குமாறு கல்வி அதிகாரிகளை ஆளுநர் பணித்தார்.

முதல்நியமனம்வழங்கும்போது, அனைத்து ஆசிரியர்களுக்கும் தமது சொந்த வதிவிட மாவட்டத்தை விடுத்து வெளிமாவட்டத்துக்கு நியமனம் வழங்குமாறும் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் வலியுறுத்தியது. அதற்கும் ஆளுநர் சம்மதித்தார் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

# கோப்பாய்த்தொகுதியில் பல வீதிகள் சீரமைப்பு

அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், அச்செழு, இருபாலை, உரும்பிராய் ஆகிய பகுதிகளின் வீதிகள் சீரமைப்பு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சமயநிகழ்வுகளை அடுத்து வீதியின் சீரமைப்புப்பணிகளை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் ஆரம்பித்து வைத்தார்.

தேர்தல் தொகுதிக்கு 100 மில்லியன் ரூபா எனும் திட்டத்தின் கீழ் கோப்பாய்த் தொகுதிக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் சிபார்சின் கீழ் இந்த வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ், வலி.கிழக்குபிரதேசபையின்உபதவிசாளர்ம.கபிலன், வலி.கிழக்கு பிரதேசபை உறுப்பினர்களான சி.அகீபன், இ.செல்வராசா, கஜேந்திரகுமார் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



*"மண்சுமந்துகூலிகொண்டு அக்கோலால்மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனிப் பாடுதுங்காண் அம்மானாய்" என்று மாணிக்கவாசகர்பாடும்சிவபெருமான் நல்லூரில் பிட்டுக்கு மண் சுமந்து திருக்காட்சி நல்கினார். அநாதையாகவந்திக் கிழவியின் பொருட்டு இறைவன் செய்த அத்திருவிளையாடல் நேற்றுக் காலை நல்லூர் சிவன் கோயிலில் உற்சவமாக நிகழ்த்தப்பட்டது. (ஐ)*

# மதிப்பளிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்பிரதேசத்தில் சிறப்புச் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நிலையத் தலைவர் சொக்கலிங்கம் சிவயோகலிங்கம் தலைமையில் இடம்பெறும். (ஐ)

\+ + + + +

சாவகச்சேரி, டிசெ.20

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

கடந்த வருடம் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று உயர்தர வகுப்பில் இணைந்துள்ள சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 53 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்தம் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



## தளபாடங்கள் வழங்கல்

கொடிகாமம் டிசம்பர் 19

பருத்தித்துறை தொண்டமனாறு கலைமகள் சனசமூக நிலையத்துக்கு ஒருதொகுதி தளபாடங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதன் கலந்து கொண்டு கலைமகள் சனசமூக நிலையத்தின் நிர்வாகத்திடம் தளபாடங்களைக் கையளித்தார்.

இதன் போது விவசாய அமைச்சின் பத்து லட்சம் பலாக் கன்றுகள் நடும் திட்டத்தில் பழமரத் தோட்டச் செய்கையாளர்களுக்கு பலாமர கன்றுகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை பருத்தித்துறை தும்பளை தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தேற்றாவடி சிறி மனோன்மணி அம்மன் ஆலயத்துக்கும் அங்கஜன் இராமநாதனின் 75 ஆயிரம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒலி பெருக்கிச் சாதனம் வழங்கிவைக்கப்பட்டது. (ஐ-159)

# கிராம செயலகம் அமைக்க 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.மேற்கு,டிசெ.20
பிரான்பற்று கிராமத்துக்கு ரூபா 20 லட்சம் செலவில் கிராம செயலகம் அமைக்கப்படவுள்ளது.
இதற்கென ஜெ.147 கிராம அலுவலர்பிரிவு பிரான்பற்றில் சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ,ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றுக்கு மையத்திலுள்ள ஒரு பரப்புக்காணி வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நேசரட்ணம் செல்வக்குமாரியிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.
பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர் ,வலி தென்மேற்குப்பிதேசசபைஉறுப்பினர் சி.மகேந்திரன் மேற்படி காணி உறுதியை பிரதேச செயலகத்தின் பெயரில் கிராம செயலகம் அமைக்க வழங்கினார்.
பிரதேச செயலகத்தினால் 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் கட்டடத்தின் கீழ்த் தளத்தில் சமுர்த்தி அலுவலர்,பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ,கிராம அலுவலர் பிரிவு இயங்குவதுடன் முதலாவது மாடியில் பொது நோக்கு மண்டபத்துடன் கூடிய நூலகம் ஒன்று அமைய வேண்டிய தேவை குறித்து பிதேச செயலருக்குத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 50)

## தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வு

சாவகச்சேரி, டிசெ.20
அதிகரித்துவரும் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்களையும் நடத்தி வருகின்றனர்.
இந்தப் பரிசோதனை முகாம்களில் 35 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு உயர் குருதி அமுக்கம், நீரழிவு போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தொற்றா நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களை தொடர் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தி வருகின்றனர்.
கடந்த வாரம் கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் நடத்தப்பட்ட தொற்றாநோய் பரிசோதனையில் கலந்து கொண்டவர்களில் 12 பேர் தொற்றா நோய்களுக்கு உள்ளாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
கைதடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி பொது நோக்கு மண்டபத்திலும் கடந்த திங்கட்கிழமை பரிசோதனை முகாம் நடாத்தப்பட்டது.
எதிர்வரும் 27ஆம் திகதி வரணி பொதுச் சுகாதார பரிசோதகர்பிரிவுமக்களுக்குபரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## நிதி அன்பளிப்பு

சாவகச்சேரி,டிசெ. 20
கைதடி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழில் பூங்கா விடுதியில் உள்ள அங்கத்தவர்களின் உணவுத் தேவைக்காக புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த ஒருவர் நிதி அன்பளிப்புச் செய்துள்ளார்.
புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த சுதர்சன் தயாளினி தனது பிறந்த நாளையொட்டி 15 ஆயிரம் ரூபாவினை அண்மையில் சங்கத்திடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என்று சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.
கைதடியைச் சேர்ந்த இந்தப் பெண் தனது பிறந்த நாள் அன்று கைதடி விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு வருடாந்தம் நிதி வழங்கிவருவதாக அவரது தாயாரான மயில்வாகனம் பரமானந்ததேவி தெரிவித்தார். (9)

## 90 அதிநவீன கொள்கலன்களை இலங்கைக்கு வழங்கியது சீனா

கொழும்பு, டிசெ. 20
சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்ட காலமாக இருந்துவரும் நட்புறவை மேலும் பலப்படுத்தும் நோக்கில் சீன உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 90 நவீன கொள்கலன்கள் நேற்று வழங்கப்பட்டன.
அரச தலைவர் செயலகத்தில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது. கடந்த சில காலமாக நாட்டில் ஏற்பட்டிருந்த காலநிலை தாக்கங்களின் காரணமாக அரசு ஆரம்பித்த உதவி நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவும் வகையிலேயே இந்த கொள்கலன்கள் வழங்கப்பட்டன. சீனத் தூதுவர் செங் சூ ஆன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் உரிய ஆவணங்களைக் கையளித்தார். (ம)






## கிராம,மாதர் சங்ககங்கள் சீரமைப்பு

பளை, டிசெ.20
பளை பிரதேச செயலகத்தினால் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றைப் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ஜனனி சபாரத்தினம், அந்தந்த கிராம அலுவலர்களின் பங்களிப்புடன் சங்கங்களைப்சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.
இதன் பிரகாரம் கடந்த 2000 ஆம் அண்டு இடப்பெயர்வின் பின்னர் நிர்வாகத் தெரிவின்றி இயங்கி வந்த செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் செல்வபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.
பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிராம அலுவலர் வேதநாயகம் தர்சினி கலந்து கொண்டார்.
"கிராமங்களின் வளர்ச்சிக்கு அங்குள்ள சங்கங்கள் பெரும்பங்காற்ற வேண்டிய நிலையில் உள்ளது. பச்சிலைப்பள்ளிப் .பிரதேசத்தைப் பொறுத்த வரை போரினால் பல்வேறு அழிவுகளை ஒவ்வொரு குடும்பமும் சந்தித்துள்ளது.தற்போது படிப்படியாக வளர்ச்சி கண்டுவரும் நிலையில் ஒவ்வொரு சங்கமும் கிராம முன்னேற்றத்திற்கு பெரும்பாலான பங்களிப்பினை வழங்கவேண்டும்.சங்கங்களின் வளர்ச்சிக்கு மக்கள் தம்மாலான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்" என்று பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையுரையில் தெரிவித்தார்.
நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர் தி.பரமேஸ்வரன், உப தலைவர் துரைசிங்கம், செயலாளர் ச.இராஜேஸ், உதவிச்செயலாளர் ந.பவலவன்,பொருளாளர் ப.கருணாகரன் இவர்களுடன் 10 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-9)

## விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி,டிசெ.20
முச்சக்கரவண்டியுடன் உந்துருளி மோதியதில் உந்துருளியில் பயணித்த இளைஞன் படுகாயடமைந்தார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக கடந்த 13 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது.
ஏ 9 முதன்மைச் சாலையில் பயணித்த முச்சக்கர வண்டி சமிக்ஞையுடன் வீதியை கடக்க முற்பட்டது. பின் தொடர்ந்து வந்த உந்துருளி முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.
இதில் காயமடைந்த உந்துருளி சாரதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
சாவகச்சேரி தனன்களப்புச் சாலையைச்சேர்ந்த 24வயது இளைஞனே இவ்வாறு காயமடைந்தார். (ஐ-9)



*கல்வி அமைச்சின் அழகியல் கிளையினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற சமஸ்தலங்கா போட்டியில் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். மூத்த பிரிவில் நடத்தப்பட்ட குழு இசை நாட்டார் பாடல் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். அத்துடன் கீழ்ப் பிரிவில் தனி இசை குறவன் குறத்தி பாடலில் முதலாம் இடத்தையும் எமது பாடசாலையை சேர்ந்த மாணவன் கி.கபிநாத் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.*



*வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் ராகம நிறுவன அனுசரணையுடன் கிராம மட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. அந்த வகையில் ஒருகட்டமாக சிறுவர் கழகங்களை அமைத்து அதனுடாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காட்டுப்புலம் சிறுவர் கழகத்திற்கான விளையாட்டு போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.*



*வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு தனிப்பனை புனித மடுமாதா ஆலய கட்டட வேலைக்காக கிராம எழுச்சித்திட்டத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் ரூபா 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதி மூலம் ஆலயத்தின் ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (ஐ –70)*

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.
கீரிமலை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்துடன் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது.
நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் , பிரதேச சபை உறுப்பினர்கள்,கிராம அலுவலர் நகுலேஸ்வரம்,பொருளாதார அபிவிருத்தி அலுவலர், இள்ளஞர் சேவை அலுவலர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
அத்துடன் நிகழ்வின் சிறம்பம்சமாக உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தினர் மாதிரி நுளம்புடன் பிரதேசம் எங்கும் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (ஐ-114)



# தையிட்டி கடற்கரையை அண்மித்து மயானம் அமைக்க அனுமதிக்காதீர்

## மாவட்டச்செயலரிடம் மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ.20**

**வலிகாமம்வடக்கு ஆவளைதையிட்டிகடற்கரையை அண்டியபகுதியில்மயானம் அமைக்கவேண்டாம்என்றுபிரதேசமக்கள் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுச் சென்ற அவர்கள் இது குறித்த கோரிக்கையை விடுத்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:
28 வருடங்களாக நாங்கள் நலன்புரி நிலையங்களில்வாழ்ந்துவந்தோம். நல்லிணக்கபுரம் மற்றும் ஏனைய இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டோம். எமது வாழ்வாதாரம் கடற்றொழில். 172குடும்பங்கள் உள்ளோம். கடற்றொழிலுக்கு ஏற்ற இடம் ஒன்று தேவை என்று அரச தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். அதன் பின்னர் ஆவளை தையிட்டி பகுதியில் கடற்றொழில் செய்வதற்கு மாவட்டச் செயலகம் 2016 இல் அனுமதி வழங்கியது.
அந்த இடத்தில் வலி. வடக்குப்பிரதேசசபைக்குச் சொந்தமான சுடலைக் காணி உள்ளது.
அதனைச் சீரமைக்கும் வேலைகளைச் சபை ஆரம்பித்துள்ளது. நாம் வாழ்வாதாரத்தில் இப்போதுதான் முன்னேறிக்கொண்டு வருகின்றோம். நாம்தொழில்செய்யும்இடத்தில்சுடலை அமைந்தால் மீன்பிடிப்படகைநிறுத்த முடியாது. வாடி அமைக்க முடியாது. வலை வேலைகள் செய்ய முடியாது. இதனால் எமது தொழில் பாதிப்படையும். ஆனால் 200 மீட்டர் தூரத்தில் சுடலைஒன்றுஉள்ளது. அதனைத்தான்மக்கள் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலரின் விருப்பு, அரசியல்நோக்கத்துக்காவேமற்றைய இடத்தில் மீண்டும் சுடலை அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அடுத்தவாரம் இதுதொடர்பில் அனைத்து தரப்பினருடன் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தீர்வைப் பெற்றுத் தருவதாக மாவட்டச்செயலர் கூறியுள்ளார் - என்றனர்.

இது தொடர்பில் வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:
"இது பிரதேச சபைக்குச் சொந்தமான காணி. அதில் மயானம் அமைக்கத் தனியார் ஒருவர் சபைக்கு வழங்கிய காணியே அது. வேறு மயானத்தில் இவர்களும் உடலத்தை அடக்கம் செய்வதால் அந்தப் பகுதியின் மூன்று கிராமங்களின் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி அவர்களுக்கும் இடையூறு இல்லாதவாறு இடைவெளிவிட்டுத்தான் மயானம்அமைக்கும் பணிகளைத் தொடர்ந்தோம். இவர்களின் தொழிலில்எந்தப்பாதிப்பும்ஏற்படாதவாறுதான் வேலைகள் நடைபெறும்" - என்றார். (4.7)

## பெருந் திருவிழா

சாவகச்சேரி, டிசெ.20
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
நாளைவெள்ளிக்கிழமைசப்பறத் திருவிழாவும் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.
பெருந்திருவிழா கிரியைகள் கோவில் முதன்மைக் குரு தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (ஐ-131)

## பட்டமளிப்பு நிகழ்வு ஜனவரி 11 இல்

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 34ஆவது பொதுப் பட்டமளிப்பின் பகுதி ஒன்று ஜனவரி மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.
யாழ்ப்பாணம்மற்றும்வவுனியா பல்கலைக்கழக வளாகத்தின் பட்ட கற்கைகள், பட்டத்தின் பின்னராக கற்கை நெறிகள், டிப்ளோமா கற்கைகளுக்கான பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின்சார்பாக 8 பட்ட கற்கைகளுக்கான பட்டங்களும், வவுனியா பல்கலைக் கழக வளாகம் சார்பாக 6 வகையான கற்கைகளுக்கான பட்டங்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)



## லான்ட்மாஸ்ரரை மோதித்தள்ளியது தொடருந்து

யாழ்ப்பாணம், டிசெ. 20
தொடருந்துடன் லான்ட்மாஸ்ரர்மோதிவிபத்துக்குள்ளானதில் லான்ட்மாஸ்ரர் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்குஅருகில்உள்ளகடவையில் நேற்று இடம்பெற்றது.
கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி தொடருந்துபயணித்துக்கொண்டிருந்தது. இந்த நிலையில் தொடருந்து கடவையை லான்ட்மாஸ்ரர் கடக்க முற்பட்ட வேளையே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.
இதேவேளை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிபயணித்துக்கொண்டிருந்த தொடருந்தில் மோதி ஒருவர் விபத்துக்குள்ளானார்.
இந்தச்சம்பவம்நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை அரியாலைப்பகுதியில்இடம் பெற்றது.
இதில் ஒருவர் தனது வலது கையை இழந்த நிலையில் ஆபத்தான நிலமையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்சிகிச்சை பெற்று வருகின்றார்.
அரியாலையை சேர்ந்த எஸ். லோகேஸ்வரன் (வயது - 59) என்ற நபரே விபத்துக்குள்ளானார்.
கை துண்டாடப்பட்டதுடன் தலையில் பலத்த காயமடைந்த அவர் உடனடியாக அங்கிருந்து மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
துண்டாடப்பட்ட கையினையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் அதனை சத்திர சிகிச்சை மூலம் பொருத்த முடியாத நிலை காணப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ-37)

## ஈருருளிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20
வறுமையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம்நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் மாணவர்களுக்கான ஈருருளிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.
ஹாட்லிக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் தவயோகராசா அனோஜன் மற்றும் யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவி பாலச்சந்திரன் சௌமியா ஆகிய இருவருக்குமே ஈருருளிகள் வழங்கப்பட்டன. (ஐ)

## திருவாசக முற்றோதல்


வவுனியா, டிசெ.20
திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வியாழக்கிழமைவவுனியாபிரதோஷம்திருக்கோவிலில் முற்பகல் 9 மணிக்குஇடம்பெறவுள்ளது.
வவுனியா கோவிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரிசமேதஅகிலாண்டேஸ்வரர்ஆலயஅறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத்தலங்களில் திருவாசக முற்றோதல்கள் நடைபெற்றுவருகின்றன. (ஐ)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்திஉரிமையாளர்கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான 2019 ஆம் ஆண்டுக்குரிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்குசங்கக் காரியாலயத்தில்தலைவர் செ. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் திருமதி பி. கஜேந்தினி தெரிவித்துள்ளார். (ஐ)

## கிராம எழுச்சி நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.20
சிறிசத்தியசாயிபன்னாட்டு நிறுவனம் நடத்தும் 'கிராம எழுச்சி நிகழ்வு' யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் 6 மணி வரை நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அஜிதா பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)



வடமாகாணக்கல்வித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட அகில இலங்கை சித்திரப் போட்டியில்சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். தரம் 2 இல் கல்வி கற்கும் பி. கோபிநாத் என்ற மாணவனே ஆரம்ப பிரிவிற்குரிய வெளிப்பாட்டு சித்திரப் போட்டியில்முதலாம்இடத்தைப்பெற்றுக் கொண்டுள்ளார். (ஐ - 159)

## உணவகத்துக்குசீல்

யாழ்ப்பாணம், டிசெ.20
சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியது என்ற குற்றச்சாட்டில் உணவகம்ஒன்றைமூடிச்சீல்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
சுகாதாரப்பரிசோதகரின் அறிக்கை நீதி மன்றத்துக்கு வழங்கப்பட்டபின் உணவகத்தைதிறப்பதற்குஅனுமதிவழங்கப்படும்என்றும்தெரிவித்துள்ளார்.
உணவுபாதுகாப்புவாரத்தைமுன்னிட்டுயாழ்ப்பாணம் மாநகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்ஜீவன் யாழ்ப்பாண நகர்ப் பிரதான வீதியிலுள்ள உணவகம் ஒன்றை சோதனைக்கு உட்படுத்தியபோது அங்கு பல குறைபாடுகள் இருந்தமையை அவதானித்துள்ளார்.
இதையடுத்து உணவகத்தின்உரிமையாளருக்கு எதிராக 9 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
வழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதுஉரிமையாளர்குற்றத்தைஒப்புக்கொண்டதை அடுத்து, உணவகத்தை மூடிச் சீல்வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், உணவகம் சம்பந்தமாக அறிக்கை சுகாதாரப் பரிசோதகரால் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே உணவகம்திறப்பதற்குஅனுமதிவழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ-115)

## சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி, டிசெ 20
மதுபோதையில்வாகனம்செலுத்திய குற்றச்சாட்டில் நான்கு சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றினால்நேற்றுமுன்தினம் 35 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.
சாவகச்சேரிமற்றும்கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
விசாரணையின்போதுசாரதிகள் குற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்து 10 ஆயிரத்து 500 ரூபா, 9 ஆயிரத்து 500 ரூபா, இருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா - என்ற அடிப்படையில் தண்டம் விதிக்கப்பட்டது. (9)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி டிசெ. 20
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உணவக உரிமையாளர்களுக்கான திண்மக்கழிவு தொடர்பான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு நகரசபையின்பொன்விழாமண்டபத்தில் நடைபெறும்.
உணவுகையாளும்நிலையங்களின் உரிமையாளர்கள் அனைவரையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (9)

# மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகளை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**மன்னார்,டிசெ.20**

**மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் மாதிரிகளைப்பரிசோதனைக்கு அனுப்பிவைக்க, மன்னார்நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில், நேற்றுக்காலைமனிதஎலும்புக்கூடுகளின்மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டுவருவதாகஅகழ்வுபணிக்குபொறுப்பானசட்டமருத்துவஅதிகாரி சமிந்த ராஜபக்ச நேற்றுக்காலைதெரிவித்தார்.**

அவர்மேலும்தெரிவித்ததாவது:


"தற்போது வரை 280 மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 274 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு, மன்னார் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய் மற்றும் நேற்று புதன்கிழமை ஆகிய இரு தினங்களிலும் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 'காபன்' பரிசோதனைக்கு அனுப்ப சேகரிக்கப்பட்டுள்ளன.

குறித்தபுதைகுழியைபார்வையிடஉள் நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பலர் வருகை தருகின்றனர். ஆனால் மன்னார் நீதிமன்றத்தின் அனுமதி இன்றி பார்க்க அனுமதி வழங்க முடியாது.

குறித்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. விசாரணை முடியும் வரை எவ்வித கருத்துக்களையும் கூற முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகள் மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப்பணிகளைப் பார்வையிட்டுள்ளனர்.



தற்போது மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மன்னார் நீதிவான் முன்னிலையில் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

நீதிமன்றம், சிறப்பு சட்டமருத்துவ அதிகாரிகுழு, தொல்பொருள்திணைக்களம், பொறுப்பானஅரசதிணைக்களம், பொலிஸ் நிலையம், குற்றவியல்பொலிஸார் ஆகியோர்இணைந்துதற்போதுபணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறப்புக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 6 பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. அவற்றில் தற்போது 2 மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் எலும்புக்கூடுகளின் மாதிரிகளைபெற்றுக்கொள்ளநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன". என அவர்மேலும்தெரிவித்தார். (56)




# குழாய்க்கிணறு சீரமைப்பு

வவுனியா, டிசெ.20

வவுனியா முதன்மைதொடருந்துநிலையத்துக்குமுன்பாக பயன்படாத நிலையில் இருந்த குழாய்க்கிணறு வவுனியா நகரசபையின் உபநகரபிதா சு.குமாரசாமியால் சீரமைத்து மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

குறித்தகுழாய்க்கிணறுகடந்தமூன்றுவருடங்களாகப்பயன் படாத நிலையில் இருந்துள்ளது. இது தொடர்பாக பொது அமைப்புகள் உபநகரபிதாவிடம் விடுத்தவேண்டுகோளுக் கிணங்கவே நேற்றுமுன்தினம் திருத்தியமைக்கபட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (110)

# மரணவீட்டுக்குச்சென்றுதிரும்பிய மாணவனுக்கு ஏற்பட்ட பரிதாபம்



வவுனியா.டிசெ.20

வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவன் கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில்ஏற்பட்டவிபத்தில்சாவடைந்துள்ளான்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

வவுனியா தோணிக்கல் பகுதியைச்சேர்ந்த மாணவன் கிளிநொச்சியில் உள்ள உறவினர் ஒருவரின் சாவு வீட்டுக்குச் சென்றுவிட்டு, வவுனியா வருவதற்காக நேற்று முன்தினம் மதியம் தனது மாமனாரின் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, உந்துருளி வேகக்கட்டுப்பாட்டை இழந்து, குழாய் கிணறு பொருத்தும் இணைந்த கனரக வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

உந்துருளியில் இருந்து தூக்கி வீசப்பட்ட மாணவன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும்வழியில்உயிரிழந்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

வவுனியாதோணிக்கல் பகுதியைச் சேர்ந்த கி. விதுசன் என்றமாணவனேவிபத்தில்உயிரிழந்தார். இவர்நேற்று முன்தினமே தனது பதினாறாவது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (110)

# விபத்தில் காயமடைந்த சிறுமி சாவு

யாழ்ப்பாணம்.டிசெ. 20

வீதியை கடக்க முயன்ற பாடசாலைச் சிறுமியை நோயாளர் காவு வண்டி மோதியதில், படுகாயமடைந்த 9 வயதுச் சிறுமி சிகிச்சை பயனளிக்காது, கடந்த திங்கட்கிழமை சாவடைந்தார்.

கிளிநொச்சி பரந்தனைச் சேர்ந்த ரவிந்திரகுமார் தரனிகா(வயது 9) என்ற சிறுமி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

கிளிநொச்சி விவேகானந்தா ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்ற இவர், கடந்த 11 ஆம் திகதி பாடசாலையில் இருந்து பேருந்து ஊடாக வீட்டுக்கு வந்து இறங்கி வீதியைக் கடக்கும்போது, நோயாளர் காவு வண்டி சிறுமியை மோதியுள்ளது.

படுகாயமடைந்த சிறுமி உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அன்றே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சாவு தொடர்பான விசாரணைகளை யாழ் போதான மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (8)



# வலயக்கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் நிகழ்வு

மன்னார்,டிசெ.20

மன்னார் வலயக்கல்வி பணிமனையின்ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் நேற்றுப் புதன்கிழமை காலை9.30மணியளவில் மன்னார் வலயக்கல்வி பணிமனையில், வலயக் கல்வி பணிப்பாளர் ஜே. கே.பிரட்லி தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராக மன்னார்மறைமாவட்ட ஆயர் இம்மனுவேல் பெர்னாண்டோஆண்டகையும், விருந்தினராக முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர்திருமதி சுகந்தி செபஸ்தியன் உற்பட வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (56)

# சட்டத்தரணி சிற்றம்பலத்தின் 75 ஆவது பவள விழா

வவுனியா,டிசெ.20

முன்னாள்வவுனியாமாவட்டசபைத்தலைவரும், வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தலைவரும் அரசதலைவர் சட்டத்தரணியுமான எம். சிற்றம்பலத்தின் 75ஆவது பவள விழா நிகழ்வுகள் நாளை இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுத் தூபி அமையப்பெறுவதற்குக் காரணமாக இவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நாளை மாலை 3 மணியளவில் ஓவியா விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில், நீதிபதிகள், சட்டத்தரணிகள், சமயத்தலைவர்கள், சமூகப் பெரியார்கள், சமூக ஆர்வலர்கள், கலைஞர்கள், கலை இலக்கியவாதிகள், பல்துறை சேவையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகஏற்பாட்டார்கள்தெரிவித்துள்ளனர்.

# இடைவேலியை அடைக்க வனஇலாகாதிணைக்களம் வேண்டுகோள்

வவுனியா.டிசெ.20

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான பகுதிக்கும் வன இலாகாவினரின் திணைக்களம் அமைந்துள்ள பகுதிக்கும் இடையிலுள்ள வேலி, நீண்டகாலமாக அடைக்கப்படாமல் இருப்பதால் வன இலாகா திணைக்களத்தினர் பல அசௌகரியங்களை சந்திப்பதாகத் தெரிவித்துள்ளனர்.



வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலுள்ள நகரசபைக்குச்சொந்தமான பொதுமலசலகூடம்அமைந்துள்ள பகுதியின் அருகே வன இலகாவினரின் திணைக்களம்அமைந்துள்ளது. நகரசபையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி வேலி நீண்டகாலமாக அடைக்கப்படவில்லை. இதனால்கால்நடைகள், கட்டாக்காலி மாடுகள் அதனைக் கடந்துவனஇலகாதிணைக்களத்தின் அலுவலகத்துக்குள்சென்றுஅங்குள்ளபயிர்களையும், செடிகளையும் நாசம்செய்து வருகின்றன.

பல தடவைகள் வவுனியா நகரசபையினருக்கு இது தொடர்பில் முறையிட்டும், அவர்கள்உரியநடவடிக்கை எடுக்காதுபொறுப்பற்றவிதத்தில் பதில் சொல்வதாக வன இலாகாத்திணைக்களத்தினர்தெரிவித்தனர்.

இதுதொடர்பாக வவுனியா நகரசபைத் தலைவரை தொடர்புகொண்டு கேட்டபோது இதுவரைநாளும் வேலி அடைப்பதற்கான பணியாளர்களைஇணைப்பதில் சிரமம் ஏற்ப்பட்டிருந்தது. தற்போது கம்பிக் கட்டை, தகரம் ஆகிய பொருள்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுவிட்டனஇந்தவாரம் வேலிஅமைக்கப்படும்-என்றார்.

(6.110)

# ஒரு கிழமை அமைச்சர்கள் தற்போது போய்விட்டனர்

*வடமாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு*

**வவுனியா,டிசெ.20**

**ஒரு கிழமை அமைச்சர்கள் எல்லாம் தற்போது போய்விட்டனர். மகிந்த பதவி ஏற்றதுடன் வவுனியாவில் வெடிகொழுத்தியவர்கள் யார் என்பது அனைவருக்கும் தெரியும் என வடமாகாணசபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**



வீடுவீடாகக் சென்று விண்ணப்படிவங்களைக் கொடுத்தவர்கள், வீட்டுத் திட்டம் தருவதாக தகவல்களைச் சேர்தார்கள், எல்லோரின் கதையும் தற்போது முடிவடைந்துள்ளது என ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

சத்துணவுத் திட்டத்துக்கான ஆலை திறப்புநிகழ்வும்போசனைக்கண்காட்சியும் நேற்று வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் மத்திய சுகாதாரமைச்சர் ராஜிதசேனாரத்தினவிடம் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில்,வுவுனியா மாவட்டத்துக்குச் சுகாதாரதுறை சார்ந்த பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக 50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கபட்டிருந்தது.

அந்த நிதி மூலம் 33 சுகாதாரத்துறை சார்ந்த வேலைத் திட்டங்கள் செயற்படுத்தபட்டு வருகின்றன.

இதன் பகுதியாக மகாறம்பைக்குளத்தில் சத்துணவு அரைக்கும் ஆலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வவுனியாசுகாதாரமருத்துவஅதிகாரி எஸ்.லவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டார்.

முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் நிகழ்வில் மேலும்தெரிவித்ததாவது:

போர்முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் புதிய அரசதலைவர் உருவாக்கபட்டிருந்தார். எனவேமக்கள்மத்தியில்ஒருவித மகிழ்வு நிலவியிருந்தது அனைத்து பிரச்சினைகளும்தீர்ந்துவிடும்என்று சிறுபான்மை மக்கள் நம்பியிருந்தனர். ஏனெனில்தேசியகட்சிகள்இரண்டும் இணைந்து ஆட்சியமைத்தமையால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையே அந்த மகிழ்வுக்குக்காரணமாக இருந்தது. அதுகடந்த 26ஆம்திகதியுடன்இல்லாமல்செய்யபட்டது.

உலகிலேயே அமைச்சரவை இல்லாத. அமைச்சர்கள் இல்லாத ஒரு அரசாங்கத்தை இலங்கை வரலாற்றில் உருவாக்கிவிட்டார்கள். இது துரதிஸ்டவசமானது.

அரசியல் ரீதியாக சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அதுஇன்றுகேள்விக்குறியாகியுள்ளது. சிறுபான்மை மக்களுக்கு அரசியல் ரீதியாக விழுந்த பெரும் அடியாகவே அரச தலைவரின் செயற்பாடு அமைந்திருந்தன.

தற்போது புதிய தலைமை அமைச்சர் பதவிஏற்றுள்ளார். அமைச்சரவையும் பதவி ஏற்கவுள்ளது. எனவே தேவைகள் நிறைந்த எமது பகுதி மக்களின் நிலமையைக் கருத்தில் கொண்டு எம்மோடு இணைந்து பணியாற்றக் கூடியவர்களை அமைச்சர்களாகநியமிக்க வேண்டும் என்பதே எமதுவிருப்பம்.

அரசியல்தீர்வுகிடைக்கும்வரைக்கும் அபிவிருத்தி தேவையில்லை என்று கூறிவிட்டு நாங்கள் இருக்கமுடியாது. எமது முன்னாள் முதலமைச்சர் அதனைதான் கூறுகின்றார். என்னைப் பொறுத்தவரைஇரண்டுமேமுக்கியம். இல்லாவிடில் இங்கு அரசியல்தீர்வு கிடைக்கும் முன்னர் அபிவிருத்தி இல்லாமல் மக்கள் தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துவிடும்நிலை இருக்கின்றது.

அதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்தஅபிவிருத்தியானது சுகாதாரம், கல்வி, அனைத்தையும்உள்ளடக்கியதாகஇருக்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் மருத்துவர் ரி.ஜெயரதன், பிரதேசசபைஉறுப்பினர் ஜெ.திரவியவதனி, குடும்பநல அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)



## முல்லைத்தீவு தேராவிலில் ஒருதொகுதி ஆயுதங்கள் மீட்பு


முல்லைத்தீவு,டிசெ.20

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தேராவில் காட்டுப்பகுதியிலிருந்து, தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒருதொகுதி ஆயுதங்களை முல்லைத்தீவு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

தேராவில் காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் ஒரு தொகுதி ஆயுதங்கள் இருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அங்கு சென்ற முல்லைத்தீவு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் ஆயுத வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.

ராங்கி செல்1,மிதிவெடிகள் 5 , 81 மில்லிமீற்றர் எறிகணை 1, 81 வகை மோட்டர் குண்டுகள் 2 ,கிறிஸ்ரி செல்கள் 2, ஆர். பி .ஜி குண்டு 1, என்பன மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பகுதி கட்டளை அதிகாரி உதவி பொலிஸ் அதிகாரி பியனந்தவின் ஆலோசனைக்கு அமைய, முல்லைத்தீவு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, பிரதான பொலிஸ் அதிகாரி டி .எப். யு கே. அபேரத்னவின் தலைமையில், உதவி பொலிஸ் பரிசோதகர் எந்துலால், பொலிஸ் சாஜன்ட் பிரசன்ன பொலிஸ் கொஸ்தாபல்களான பண்டார , ஜயசுந்தர , சுரங்க , ரத்னாயக்க உள்ளிட்டவர்களால் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (246)



## மாவட்ட இலக்கிய விழா

கொடிகாமம்,டிசெ. 20

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் மாவட்டச் செயலகமும் முல்லைத்தீவு மாவட்ட கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்தும் மாவட்ட இலக்கிய விழா மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் மதிப்புறு விருந்தினராக புலவர் வள்ளுவதாசன் நா.சிவராசா, சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர்கள் மாவட்ட செயலக பதவி நிலை அலுவலர்கள் பிரதேச செயலக பதவி நிலை அலுவலர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். வாழ்க்கைக்கு பெரிதும் வழிகாட்டுவது கம்பராமாயணமா அல்லது மகாபாரதமா என்ற தலைப்பில் விவாத அரங்கும், சந்திக்கடை சம்பாசனைகள், கவியரங்கம், "முல்லைஇலக்கிய சுடர் 2018" விருது வழங்கலும் இடம் பெறவுள்ளன. (159)

## பண்டிகைக்கால வியாபாரத்துக்கு மன்னாரில் கேள்வி கோரல்



மன்னார்,டிசெ.20

நத்தார்,புதுவருட பண்டிகைக்கால வியாபாராங்களை மேற்கொள்வதற்கு, மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 306 தற்காலிக வியாபார நிலையங்களுக்கு, கேள்வி கோரல் அடிப்படையில் இடம் வழங்கும் நடவடிக்கை நேற்று இடம் பெற்றது.

நத்தார், புதுவருட பண்டிகைக்கால வியாபாரங்களை மேற்கொள்ள இம்முறை மன்னார் நகர சபை பிரி வுக்குறப்பட்ட பகுதிகளில் 306 தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்க இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வியாபார நிலையங்களை அமைக்க இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 2ஆயிரத்து 50 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், நேற்று காலை 10 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் வைத்து திறந்த வெளியில் கேள்வி கோரல் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது.

இதன் போது ஒவ்வெரு இடங்களுக்கும் அதி கூடிய கேள்வி கோரலை சமர்ப்பித்தவர்களுக்கு இடங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞ.அன்ரனி டேவிட்சன் தலைமையில் விண்ணப்பங்கள் பரிசீலித்து இடம் ஒதுக்கும் நிகழ்வில் நகர சபை செயலர், உறுப்பினர்கள், உட்பட விண்ணப்பித்த ஆயிரக்கணக்கான வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

வர்த்தக நிலையம் அமைக்க இடம் கிடைத்த வர்த்தகர்கள் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க மன்னார் நகர சபை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

## அறுபது பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

முல்லைத்தீவு,டிசெ.20

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனின் தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து, வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்குவதற்காக 60 பயனாளிகளுக்கு 20 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஒட்டுசுடுட்டான் பகுதியில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயானாளிகளில் மிகக் குறைந்த வருமானத்துடன்,முன்பள்ளியில் கல்வி கற்பிக்கும் 20 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும்,10 கலைஞர்களுக்கும், 15 முன்னாள் போராளிகளுக்கும், பெண்தலைமைத்துவம் கொண்ட 10 குடும்பங்களுக்கும், வறுமைக்குட்பட்ட 5குடும்பங்களுக்குமாக, 60 குடும்பங்களுக்குரிய வாழ்வாதரத்தினை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

முதல்கட்டமாக நேற்று கலைஞர் ஒருவருக்கும், முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்குமாக மாடு வழக்கும் திட்டத்துக்காக ஐம்பதாயிரம் ரூபா வீதம் மாடு கொள்வனவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தி பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினரும் வன்னிக்குறோஸ்.முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப்பேரவையின் ஒட்டுசுட்டான் பிரதேச தலைவருமான இ.சத்தியசீலன், வன்னிக்குறோஸ் கலாசாரபேரவையின் முல்லை மாவட்டத்தின் செயலர் சி.வேதவனம் ஆகியோரால் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ரி 3)

# இராணுவக்கட்டுப்பாட்டிலிருந்த 45 ஏக்கர் காணிகள் விடுவிப்பு

**கிளிநொச்சி.டிசெ. 20**
**கிளிநொச்சி இராணுவத்தலைமையகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தின் 45 ஏக்கர் தனியார் காணிகள் நேற்றைய தினம் இரு மாவட்ட செயலர்களிடமும் கையளிக்கப்பட்டன.**



இந்தநிகழ்வு நேற்றுக்காலை10 மணியளவில் கிளிநாச்சி நகரில் உள்ள காமினி சென்டர் மண்டபத்தில்இடம் பெற்றது. கிளிநொச்சி இராணுவ தலைமையக பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ரால்வ் நுகேரரின்தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரிடம் விடுவிக்கப்பட்டகாணிகள்தொடர்பான ஆவணங்கள் படையினரால் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளிலும், முல்லைத்தீவுமாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, துணுக்காய் பிரதேச செயலர்பிரிவுகளிலும்உள்ளதனியார் காணிகளே இவ்வாறு படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்ணளவாக 40 ஏக்கர்காணிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்ணளவாக5ஏக்கர்காணிகளும், படையினரால் விடுவிக்கப்பட்டு தம்மிடம் கையளித்துள்ளதாகவும், பிரதேச செயலர்கள் ஊடாகமேலும்சிலகாணிகள் அடையாளம்காணப்பட்டுகையளிப்பதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்மேலும்தெரிவித்தனர்.

இந்தநிகழ்வில் மாவட்டச்செயலர்கள், பிரதேச செயலர்கள், கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின்உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தகாணிகையளிப்புநிகழ்வில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் காணிகளை விரைந்துவிடுவிக்குமாறுகிளிநொச்சி மாவட்டச்செயலர்சுந்தரம்அருமைநாயகம் புதிதாக பொறுப்பேற்றுள்ள கிளிநொச்சி படைகளின்கட்டளைஅதிகாரி மேஜர் ஜெனரல் ரால்ப் நுகரவிடம் கோரிக்கை விட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.


பொது மக்கள் மற்றும் அரச காணிகளில் இன்னும் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள்படையினரின்கட்டுப்பாட்டில் உள்ளமைகுறிப்பிடத்தக்கது. (6.214)

# ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் ஒளிவிழா

கிளிநொச்சி,டிசெ.20
கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் கிராமத்தின் ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வுகள் இன்று 20 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு அருட்தந்தை அமல்ராஜ் தலைமையில் இடம் பெறவுள்ளது என, ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (23)

# முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கரை ஒதுங்கிய உந்துருளி




முல்லைத்தீவு.டிசெ.20
முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை பெண்கள் செலுத்தும் உந்துருளி ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

கடலுக்குள் நீண்டகாலமாகக் கிடந்த நிலையில் உந்துருளியின் இரும்பு பாகங்கள் அனைத்தும் துருப்பிடித்து, கடல் அலையின் சுழற்சியில் முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு பிரதேச வாசிகள் தெரிவித்த தகவலைத் தொடர்ந்து, முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று உந்துருளியினை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தினை காட்டும் ஆங்கில எழுத்துக்களை கொண்டஉந்துருளிதொடர்பானவிபரங்களைசேகரிக்கும் நடவடிக்கையில் முல்லைத்தீவுப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ரி3)

# நூற்றுக்கணக்கானோரை அங்கவீனராக்கிய போர்

*கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவிப்பு*

கிளிநொச்சி,டிசெ.20
போரின் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் கிளிநொச்சி மாவட்டதில் மாற்றுவலுவுள்ளவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினால்மாற்றுவலுவுள்ளோர்பன்னாட்டுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம், செல்வாநகரில் நடைபெற்றன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"போரின் காரணமாகநூற்றுக்கணக்கானவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளவர்களாகஆக்கப்பட்டிருக்கிறார்கள். போர்நடந்தபோது போர் முனைகளில் போரை நடத்துவதற்குப் பதிலாக மக்கள் குடியிருப்பு மீதும், அப்பாவி பொது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் போர் கட்டவிழ்த்து விடப்பட்டதன் காரணமாக, போராளிகள் மாத்திரமின்றி பெருமளவான பொதுமக்களும் தங்களுடைய அங்கங்களை இழக்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது" என்றும் கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

நிகழ்வில்மாற்றுவலுவுள்ளோர்சங்கத்தின் தலைவர் சிவமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மைவிருந்தினராககரைச்சிப் பிரதேச உதவி செயலர்திருமதி. தமிழினிசதீஸ்ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,டிசெ.20
வவுனியாதெற்குதமிழ்ப்பிரதேசசபைஉறுப்பினரால்13மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கனடாவில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவான பிரண்டன் பசுபதி நேசனின் நிதி உதவியிலிருந்து 13 வசதியற்ற மாணவர்களைத் தெரிவு செய்து, தமிழீழ விடுதலை இயக்கத்தின்உறுப்பினர்களின்வேண்டுகோளுக்குஇணங்க, உதவும் கரங்கள் அமைப்பினூடாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்குதமிழ் பிரதேசசபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமாரினால் நேற்று அவரதுஇல்லத்தில் வைத்து தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த வசதியற்ற மாணவர்கள் 13 பேருக்குகற்றல்உபகரணங்கள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

# நினைவு நிகழ்வு

கொடிகாமம், டிசெ.20
இலங்கைமுதல்உதவிச்சங்கத்தின்இந்துசமயத்தொண்டர் சபை நிறுவுனரும், ஆணையாளருமாகிய அமரர் நாகேந்திரம் போஜனின் 7 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு விசுவமடுபிரமந்தனாறுமகாவித்தியால்யத்தில்நடைபெற்றது.

இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் சற்குணபாலன் கேதீஸ்வரிதலைமையில்கடந்த16ஆம் திகதி 2 மணிக்கு இடம்பெற்றநிகழ்வில், இலங்கைமுதல்உதவிச்சங்கஇந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை. மோகனதாஸ்,

மகளிர் பொறுப்பாளர் ச. கேதீஸ்வரி, தொண்டர் அணி பிரிவுப்பொறுப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசுவமடு பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தின் சமூக பணிகளிலும், பொதுச் சேவைகளிலும் ஈடுபட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (159)



படுவான்கரை மக்கள் படும் பாடு

# விடிய விடிய விழிப்பிருந்து யானை விரட்டும் அவலம்

மட்டக்களப்பு.டிசெ.20

மட்டக்களப்புமாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியின் போரதீவுப் பற்றுப் பிரதேச எல்லைக் கிராமங்களுக்குள் இரவில் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளால் அந்தப்பகுதி மக்கள் இரவு முழுதும் விழித்திருந்து யானை விரட்ட வேண்டிய, நிலை ஏற்பட்டுள்ளது. போர் நிறைவடைந்தபின்னர் குறித்தபகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் அவற்றால் அதிக இடரை எதிர் கொள்வதாகக் குறித்தபகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



படுவான்கரைப் பகுதியில் தினமும் இரவுவேளைகளில் காட்டு யானைகள் கூட்டமாகவும், தனியாகவும் கிராமங்களுக்குள் உட்புகுந்து பயிர்களை அழித்தும், மக்களின் இருப்பிடங்களைச் சேதப்படுத்தியும் வருகின்றன.



குறித்த பகுதியில் யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி 10க்கு மேற்பட்டவர்கள் சாவடைந்திருக்கிறார்கள். பலர்காயடைந்துள்ளனர்.

நூற்றுக்காணக்கான வீடுகளும், உடமைகளும், பயன்தரும் மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. தற்போதுபெரும் போக வேளாண்மை செய்கை பண்ணப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில் அதிகளவு காட்டுயானைகள் இரவு வேளைகளில் பயிர்ச் செய்கை நிலங்களை நோக்கியும், கிராமங்களுக்குள்ளும் படையெடுக்கின்றன. இதனால் தாங்கள் நித்திரையின்றியும், நிம்மதியின்றி யும் வாழ்வைக் கழிப்பதாகஇந்தப்பகுதிமக்கள்கவலைவெளியிட்டனர். இதுகுறித்துப் பலமுறை உரிய அரச தரப்புகளிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும்எடுத்துரைத்தபோதிலும், இன்றுவரை எவராலும் தீர்வு எட்டப்படவில்லை என்றும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

இது குறித்து அந்தப் பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரி ஏ.ஹலீமைத் தொடர்புகொண்டு கேட்ட போது, "யானைகள் உணவுக்காக இரவில் கிராமங்களுக்குள்ளும், வயல் வெளிகளுக்குள்ளும் ஊடுருவுகின்றன.

3 தடவைகள் இங்குள்ள யானைகளை மின்சார வேலிக்கு அப்பால் விரட்டியுள்ளோம், யானைகள் மின்சார வேலிகளை உடைத்துவிட்டுக் கிராமங்களுக்குள் நுழைகின்றன. யானைகள் புகுந்து விட்டன என எமக்குப் பொதுமக்கள் தகவல் தந்தவுடன் அந்த இடத்துக்கு இரவு, பகல் பாராது நாம் சென்று யானைகளைத் துரத்துகிறோம்" - என்றார்.

## செயலமர்வு என்ற பெயரில் மோசடியில் ஈடுபட்டவர் மகியங்கனையில் மாட்டினார்

மகியங்கனை.டிசெ.20

தேசிய மொழியுரிமை தொடர்பான செயலமர்வு என்ற பெயரில் இளையோரை ஒன்று திரட்டி அவர்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட நபரொருவரைக் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்ததாக மகியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரச தலைவர் செயலகத்தால் வெளியிடப்பட்டதாகக் கூறிப் போலிச்சுற்றறிக்கையொன்றைப்பயன்படுத்தி, குறித்தநபர் மகியங்கனைப்பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட் கிழமை தேசிய மொழியுரிமை என்ற பெயரில் செயலமர்வை நடாத்தினார்.

அதில்ஐநூறுவரையானோர்பங்குபற்றினர். பங்குபற்றுநர்களுக்குக் குறித்த செயலமர்வு இலவசமாக நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தச் செயலமர்வை நடத்திய நபர், மொழி பெயர்ப்புக்கும் அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கும் குறிப்பிட்டஅளவுபணம்செலுத்தப்படவேண்டுமென்றுபங்குபற்றியவர்களைக் கோரினார்.

இதன்படி பலர் பணம் செலுத்திச் சிட்டைகளைப் பெற்றனர். தேசிய மொழி உரிமை இலட்சினை பொறிக்கப்பட்ட 'ரீசேட்'டுக்கள் வழங்கப்பட்டு அதற்கு 700ரூபா கோரப்பட்டது. இதனால், குறித்தநபர்மீதுசந்தேகம்கொண்டசிலர், மகியங்கனைப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினர். அங்கு விரைந்தபொலிசார் குறிப்பிட்டநபரைவிசாரணைக்குட்படுத்தினர்.

அரச தலைவர் செயலகத்தால் இந்தச் செயலமர்வு நடாத்தப்படவில்லை. செயலமர்வுகுறித்தசுற்றறிக்கைபோலியானது. கைது செய்யப்பட்டவரை விசாரணைக்குட்படுத்திவிட்டு மகியங்கனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவிருக்கிறோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




## ப.நோ.கூவால் சவப் பெட்டிகள் விற்பனை ஆரம்பித்து வைப்பு

மட்டக்களப்பு.டிசெ.20

மட்டக்களப்பு - வாகரையில் கூட்டுறவுச் சங்கத்தால் சவப்பெட்டிகள் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

கோறளைவடக்குவாகரைப்பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. சவப்பெட்டிகள் மிகக் குறைந்தவிலையில்கிடைக்கும்என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் வாகரைப் பிரதேச மக்கள் சவப்பெட்டிகளைப்பெறுவதற்குத்தொலைவிலுள்ளமட்டக்களப்புநகருக்கோஅல்லதுமூதூர்நகருக்கோசெல்லவேண்டியிருந்தது.

இனிப் போக்குவரத்து அலைச்சல் இன்றியும் பொருளாதாரக்கஷ்டமின்றியும்அருகிலேயேஅந்திமகாலச் சேவைகளைப்பெற்றுக்கொள்ளமுடியும்என்றுஇந்த நிகழ்வில் உரையாற்றிய கூட்டுறவு உதவி ஆண்ணையாளர் குறிப்பிட்டார்.

வாகரைப் பிரதேசத்தில் நிகழும் சாவுகளின்போது சவப் பெட்டிகளை எடுத்துச் சென்று கையளிப்பதற்கு இலவச வாகன வசதிகளைப் பெற்றுத் தருவதாகக் கோறளை வடக்குப் பிரதேச சபைத் தலைவர் இதன் போது உறுதியளித்தார்.





## மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிப்பு!

நுவரேலியா.டிசெ.20

நுவ்ரேலியாமாவட்டத்தின்வட்டவளை-ரொசல்லபிரதேசங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம் புரண்டதால் மலையகத்துக்கான ரயில் போக்குவரத்துகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை நோக்கிப் பயணித்த ரயிலே இவ்வாறு தடம் புரண்டது.



இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமைபிற்பகல்2மணியளவில் இடம்பெற்றது. இதனால் நேற்றைய தினம்வரைமலையகத்துக்கான ரயில் சேவைகள்பாதிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தின் காரணமாகக் கொழும்பு கோட்டை - மலையகத்துக்கான ரயில் சேவைகள் நிறுத்தப் பட்டன.

தடம்புரண்டபகுதியைச்சீர்செய்வதற்கான பணிகள் நடந்து வந்தன. தடம்புரண்டபகுதியைச்சீர்செய்தபின்னர்கொழும்பு மற்றும்பதுளைக்கானரயில்சேவைவழமைக்குத்திரும்பும் என்று ரயில் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

தொடர்கிறது தொழிலாளர் பிரச்சினை

## அடிப்படைச்சம்பளத்தில் மாற்றமில்லை பெருந்தோட்ட நிறுவன ஒன்றியம் அறிவிப்பு

நுவரேலியா.டிசெ.20

மலையகத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான தங்களது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று பெருந்தோட்ட நிறுவனங்களின் ஒன்றியம் தெரிவித்தது. பெருந்தோட்ட நிறுவனத்தின் பேச்சாளரும் அதன் தலைவருமான ரோஷான் இராஜதுறை விடுத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. பெருந்தோட்டத்தொழிலாளர்விடயத்தில்முதலாளிமார் சம்மேளனத்துடன் தொழிற்சங்கங்கள் பல சுற்றுப் பேச்சுக்களை முன்னெடுத்த போதும் அடிப்படைச் சம்பளமாக 600ரூபாவே வழங்க முடியும் என்பதில் பெருந்தோட்ட நிறுவனங்கள் ஊறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை முதலாளிமார் சம்மேளனத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கும்தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற இது தொடர்பான கலந்துரையாடலின்போது எந்த மாற்றமும் எட்டப்படவில்லை என அவர்குறிப்பிட்டார். ஆனால், இந்தக்கலந்துரையாடலில் தொழிலாளர்களின்சம்பள அதிகரிப்புத்தொடர்பானபேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டதாக இலங்கைத் தொழிலாளர்காங்கிரசின்உபதலைவர்எஸ்.அருள்சாமி அறிவித்திருந்தார்.

தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் முன்னேற்றம் காணப்பட்டதை அடுத்து இலங்கைத் தொழிலாளர்காங்கிரசின்தலைவர் ஆறுமுகன்தொண்டமான் இந்தியா சென்றதாகவும் நாடுதிரும்பியவுடன் இதற்குத் தீர்மானம்எட்டப்படும்என்றும்தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் புதன் கிழமை (நேற்றைய தினம்) அரச தலைவருடன்பேச்சுக்களைநடத்திஇதுகுறித்துமேலும் ஆராயவிருப்பதாகவும்தெரிவிக்கப்பட்டது. நேற்று இடம் பெறவிருந்த அந்தக் கலந்துரையாடல் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் வரை பிற்போடப்பட்டுள்ளதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.



## பதவி விலகினார் பெல்ஜியத்தின் தலைமை அமைச்சர்

பிரசல்ஸ்.டிசெ.20
பெல்ஜியத்தின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்து வந்த மைக்கல் சார்லஸ்தனதுபதவியைத்துறந்தார். பெல்ஜியத்தில்அரசுக்குஅளித்துவந்த ஆதரவைக் கூட்டணி கட்சி நிறுத்திக் கொண்டது. இதையடுத்தே அவர் பதவி விலகினார்.

அந்தநாட்டின்உலகளாவியஅகதிகள் குறித்த ஐ.நா ஒப்பந்தம் தொடர்பாக பெல்ஜியத்தின் அரசுக்கும் குறித்த கூட்டணிக்கும் இடையே கருத்து முரண்பாடுதோன்றியது.

இதனால்அரசுக்குஅளித்துவந்தஆதரவை. புதிய பிளெமியம் கூட்டணி திரும்பப்பெற்றது.இதனால்தலைமை அமைச்சரின் அரசு தனித்துப்போனது.

தனது அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் தலைமைஅமைச்சருக்குஏற்பட்டது. நாடாளுமன்றத்தில். நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ள விரும்பாத தலைமை அமைச்சர் மைக்கல் சார்லஸ் தன்னுடையபதவியைத்துறந்தார். அகதிகள் குறித்த ஐ.நா ஒப்பந்தத்துக்கு எதிராகப் பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில் சமீபத்தில் போராட்டங்கள் நடைபெற்றன. வன்முறைகள் இடம்பெற்றன.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதுடன். தண்ணீரையும்பீய்ச்சியடித்தனர். பின்னர் நிலமை கட்டுக்குள் வந்தது. இந்தப்பரபரப்பானசூழ்நிலையில்தான்தலைமைஅமைச்சர்மைக்கல் தன்னுடைய பதவியைத் துறந்துள்ளார்.

பெல்ஜியத்தின் மன்னர் பிலிப்பிடம் தன்னுடையபதவிவிலகல்கடிதத்தை ஒப்படைத்துள்ளார். அவரது பதவி விலகலைஏற்பதா? இல்லையா? என்பது குறித்து மன்னர் ஆலோசனை செய்துவருகிறார். 2019ஆம்ஆண்டு மே மாதம் பெல்ஜியத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருப்பதால், அது வரை பதவியில் இருக்குமாறு தலைமை அமைச்சர் மைக்கல் சார்லஸைமன்னர்கேட்டுக்கொண்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகி உள்ளன.

# "சீனாவுக்கு எவரும் கட்டளையிட

## சீனா அதிபர் ஜின்பிங் ஆவேசம்

**பீஜிங்.டிசெ.20**
**சீனாவுக்குஎவரும்கட்டளையிடமுடியாதுஎன்றுசீனஅதிபர்ஜின்பிங் ஆவேசமாகக் கூறினார். சீன சீர் திருத்தக் கொள்கையின் 40 ஆவது ஆண்டுநிறைவுவிழாவில்கலந்துகொண்டுபேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



சீனாவின்பீஜிங்நகரில்அமைந்துள்ளநாடாளுமன்றக் கடடடத்தில் நேற்றுமுன்தினம் சீன சீர் திருத்தக் கொள்கையின் 40 ஆவது ஆண்டு நிறைவுவிழாநடந்தது. இதில்சீனாவின்அதிபர் ஜின்பிங்கலந்துகொண்டுபேசினார். அப்போது அவர் தனது நாட்டின் கடின உழைப்பு, விவேகம், துணிச்சல் ஆகியவற்றைப் புகழ்ந்தார். சீனாவின் முன்னாள் தலைவர் டெங் ஸியாவோபிங் 40 ஆண்டுகளுக்கு முன் அறிமுகம் செய்த சீர்திருத்தக்கொள்கைகளால் ஏற்பட்ட சாதனைகளைப் பட்டியலிட்டார்.




கடந்த 40 ஆண்டுகளில் 74 கோடி மக்களின் வறுமை ஒழிக்கப்பட்டது எனச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து அவர் பேசும்போது, "என்ன செய்ய வேண்டும் என்றோ அல்லது என்ன செய்யக்கூடாது என்றோ சீன மக்களுக்கு யாரும்கட்டளையிடமுடியாது"எனக்கூறினார். இதை அமெரிக்காவுக்கான மறைமுக எச்சரிக்கையாகஉள்ளூர்ஊடகங்கள்சுட்டிக்காட்டுகின்றன.


**பின்னணி**
அமெரிக்காவுக்கும், சீனா வுக்கும் இடையே மோதல்போக்குநிலவிவருகிறது. இந்தஇரண்டு நாடுகளுக்கும்இடையேவர்த்தகப்போர்மூண்டது. ஆர்ஜென்ரீனா நாட்டின் தலைநகரான பியுனோஸ் அயர்ஸ் நகரில் அண்மையில்

## ஈஸ்டர் தீவில் நிலநடுக்கம்

ஹங்கா ரோவா.டிசெ.20
சிலி நாட்டின் அருகே உள்ள ஈஸ்டர் தீவில் நேற்று 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் கட்டடங்கள் குலுங்கின. பசுபிக் பெருங்கடலின் தென்கிழக்கே அமைந்துள்ளஇந்தச்சிறியதீவுசிலிநாட்டின்ஆளுகைக்குட்பட்டது. 2017ஆம்ஆண்டில்நடந்தகணக்கெடுப்பின்படிஇங்கு7ஆயிரத்து 750 பேர் வசிக்கிறார்கள். ரிக்டர் அளவுகோலில் 6.2 அலகாக பதிவான இந்த நிலநடுக்கத்தால், கட்டடங்கள் குலுங்கின. இதனால் மக்கள்அச்சமடைந்தனர். இந்தநிலநடுக்கத்தால்ஏற்பட்டபாதிப்புகள் குறித்த தகவல் ஏதும் நேற்றுவரை வெளியாகவில்லை.

தென்அமெரிக்க நாடான சிலியில் நிலநடுக்க அதிர்வுகள் அடிக்கடி ஏற்படுவதுசமீபஆண்டுகளில்வழக்கமானஒன்றாகிவிட்டது. 2015 ஆம் ஆண்டுசிலியின் இலாபெல் பகுதியில்ஏற்பட்ட 8.3 ரிக்டர் அளவான நிலநடுக்கத்தல் 13 பேர் சாவடைந்தனர். 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர். 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து தவித்தமை குறிப்பிடத்தக்கது.



## 'பரசூட்' பரிசோதனையில் ஈடுபட்ட சிறுவன் சாவு

### உக்ரைனில் பரிதாபம்

கீவ்.டிசெ.20
தன்னால் தயாரிக்கப்பட்ட பரசூட்டைப் பரிசோதிப்பதற்காக 14ஆவது மாடியில் இருந்து குதித்த சிறுவன் சாவடைந்த சம்பவம் உக்ரைனில் நடந்தது.

இதுஅங்குபெரும்சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில்உள்ளமக்கீவ்காநகரைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவன் ஒருவனே இந்தச்சம்பவத்தில் சாவடைந்துள்ளான்.

தன்னுடைய முயற்சியால், வீட்டிலேயே'பரசூட்'ஒன்றைத் தயார் செய்து அதைப் பரிசோதித்துப்பார்ப்பதற்காகவீட்டின் அருகேஉள்ள14மாடிகளைக் கொண்டஅடுக்குமாடிக்குடியிருப்பின் உச்சிக்குச் சென்று பரசூட்டின் உதவியுடன் குதிப்பதற்குத் தயாரானான். சிறுவனின் முயற்சியைப் பார்ப்பதற்கு.அவனது தாய், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் அங்கு குவிந்தனர். சிறுவனை உற்சாகப்படுத்தினர்.

சிறுவன்குதிப்பதைஅலைபேசிகளில் பதிவு செய்தனர். சிறுவன்தனதுகைகளைஉயர்த்தி காட்டியபடி, மாடியில் இருந்து கீழே குதித்தான். பின்னர் பரசூட்டை இயக்கினான்.

'பரசூட்' சரியான நேரத்தில் விரிந்தபோதிலும்.முறையாக இயங்கவில்லை. இதனால் சிறுவன் தரையில் விழுந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து சாவடைந்தார்.

கண் முன்னே மகன் கீழே விழுந்து சாவடைந்தைக் கண்டுஅவனதுதாய்அதிர்ச்சியில் உறைந்தார். சிறுவன் 'பரசூட்டை'முறையாகத்தயார் செய்யாததால்இந்தச்சம்பவம் நடந்ததாகக்கூறப்படுகிறது.

## குழந்தைக்குக் ஹிட்லரின் பெயர்; தாய், தந்தை இருவருக்கும் சிறை



லண்டன்.டிசெ.20
தங்களது குழந்தைக்குக் ஹிட்லரைக் குறிக்கும் விதமாகப் பெயர் சூட்டியிருக்கிறார்கள் பிரிட்டனின் தம்பதிகள்இருவர். தடைசெய்யப்பட்டபயங்கரவாத இயக்கத்தின் உறுப்பினர்கள் என்ற குற்றச்சாட்டில் பின்னர்அவர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிரிட்டனின் பேன்பரி நகரத்தைச்சேர்ந்த தம்பதிகளான தோமஸ் மற்றும் க்ளவுடியா படடஸ் ஆகியோரே இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

"தங்களதுகுழந்தையின்பெயரின்மத்தியபகுதியில் ஹிட்லரைப் போற்றும் விதமாகப் பெயர் சூட்டியுள்ளனர். இவர்கள் நாஜி தத்துவங்களைச் செயல்படுத்த முனையும் நவ நாஜிக்களாவர். இவ்விருவருக்கும் வன்முறையை தூண்டும் இனவெறி குறித்த நம்பிக்கைகள் இருந்ததற்கான நெடிய வரலாறு இருக்கிறது" என இவர்களை விசாரித்த நீதிபதி தெரிவித்திருக்கிறார்.

தோமஸுக்கு ஆறு ஆண்டுகளும் ஆறு மாதங்களும்க்ளவுடியாவுக்கு ஐந்து ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# டமுடியாது”



நடந்த 'ஜி20' உச்சி மாநாட்டின் முடிவில் அமெரிக்க அதிபர் ட்ரம்பும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்துப் பேசினார்கள். அதில் வர்த்தகப்போரைத்தற்காலிகமாகநிறுத்திவைப்பதாகஉடன்பாடு எட்டப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இரண்டு நாடுகளும் ஒன்றின்மீது மற்றொன்று கூடுதல் வரிகளை விதிப்பது இல்லை என்று உடன்பாடு செய்து கொண்டன.

இது 90 நாள்களுக்கு நீடிக்கும் என்றும், இந்த காலகட்டத்தில் வர்த்தகப் பிரச்சினை களைப் பேசித் தீர்த்துக்.கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பாக இரண்டு நாடுகளும் பேச்சுக்களைத்தொடங்கிஉள்ளன.இந்தநிலையில்தான் சீன அதிபரின் குறித்த கருத்து வெளிவந்துள்ளது.

# உடல்நலமின்றி இருந்த ஜெயலலிதாவின் உணவுக்கு ஒரு கோடியே 17 இலட்ச ரூபா

புதுடில்லி.டிசெ.20

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா உடல்நலமின்றிச் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைக்குச்சுமார் 6 கோடியே 85 இலட்சரூபாபணம்(இந்திய மதிப்பில்) செலவாகியிருப்பதாகக்குறித்த மருத்துவமனை தெரிவித்திருக்கிறது.

இதில் இன்னும் 44 இலட்சரூபாய் செலுத்தப்படாமல் இருப்பதாகவும் கூறியுள்ளது. ஜெயலலிதாவின் சிகிச்சைக்கு எவ்வளவுபணம்செலவானதுஎன்பதுகுறித்துஅப்போலோ மருத்துவமனை வெளியிட்ட ஆவணம் ஊடகங்களுக்குக் கிடைத்தது.

அதில், உணவுக்காக மட்டும் ஒரு கோடியே 17 இலட்ச ரூபா செலவாகியுள்ளதாக அந்த ஆவணத்தில் கூறப் பட்டிருக்கிறது. இந்த விடயம் சமூக வலைதளங்களில் விமர்சனத்துக்கும் கேலிக்கும் உள்ளாகியிருக்கிறது. இறக்கும் தறுவாயிலிருந்த ஜெயலலிதா இவ்வளவு பணப்பெறுமதியுடைய உணவை உண்டிருப்பதகக் குறித்த மருத்துவமனை




கூறியிருப்பது ஆச்சரியத்துக்குரியது என்று இணைய அரட்டையர்கள் பதிவிட்டு வருகிறார்கள்.



### புரட்சியில் ஈடுபட்ட 2ஆயிரம் பேருக்கு

# துருக்கியில் ஆயுள் தண்டனை

அங்காரா.டிசெ.20

துருக்கியில் 2016ஆம் ஆண்டில் இராணுவ புரட்சியில் ஈடுபட்ட 2ஆயிரம் பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்தநாட்டுநீதிமன்றம்தீர்ப்புவழங்கியது. துருக்கிநாட்டின் அதிபர் ரீசெப் தய்யீப் எர்டோகனுக்கு எதிராகக் 2016ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சி ஏற்பட்டிருந்தது.

பொதுமக்கள் உதவியுடன் அதை அதிபர் எர்டோகன் முறியடித்தார். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள், நீதிபதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது வழக்கு விசாரணை நடந்து வந்தது. அந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

அதில் 2 ஆயிரம் பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஏற்கனவே 938 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# பிரான்ஸ் போராட்டத்தின் எதிரொலி

## முன்னாள் அதிபரின் உதவியை நாடுகிறாரா மக்ரோன்?

பரீஸ்.டிசெ.20

பிரான்ஸ்நாட்டில்டீசல், பெற்றோல்விலையேற்றத்துக்கு எதிராகச் சிறிய அளவில் ஆரம்பமான போராட்டம் நாடு முழுவதும் பரவிக்கடந்தபலவாரங்களாகநீடித்து வருகிறது. ஆரம்பித்ததிலிருந்து அதன் பரிமாணம் மாறி தற்போது 'மஞ்சள் அங்கி' என்ற பெயரில் எழுச்சி கொண்டது.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிற மக்களின் இந்த எழுச்சிப் போராட்டத்தைச் சமாளிக்கஇயலாதநிலையில்உள்ளஅந்த நாட்டின் அதிபர் கமரோன் இதிலிருந்து மீள்வதற்காகப் பிரான்சின் முன்னாள் அதிபர் சர்கோஷியின் உதவியை நாடியுள்ளதாக ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

பிரான்சின் அதிபராக 2007ஆம்ஆண்டிலிருந்து 2012ஆம்ஆண்டுவரைபதவிவகித்தவர் சர்கோஷி. அவருடன் கைகோர்ப்பதன் ஊடாக நாட்டில் நடந்து கொண்டிருக்கும்போராட்டத்துக்குமுடிவுகாண்பதற்குக் கமரோன் திட்டமிடுகிறார்.

இதன் முதல் கட்டமாக ஜியோவின் புதிய அதிபர் கடந்த ஞாயிறு அன்று பதவி ஏற்ற போது பிரான்சின் பிரதிநிதியாக சர்கோஷியை அந்தநாட்டுக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும் சர்கோஷியின் உறவு எவ்வளவுதூரம்தன்னுடைய அரசியல்பயணத்துக்குச் சாதகமாக அமையும் என்பதை மக்கரோன் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார்என்றும்ஊடகவிமர்சனங்கள்மேலும் எழுந்துள்ளன.

கமரோனுக்குச்சவாலாகவிளங்கும்எதிர்க்கட்சியிலுள்ளசர்கோஷியுடன்உறவுபேண முயல்வது அவரின் ராஜதந்திரம் எனவும் பிரான்சின் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# ட்ரம்ப்பைக் கொல்வதாக மிரட்டியவருக்குச் சிறை

வோஷிங்டன்.டிசெ.20

அமெரிக்கஅதிபர்டொனால்ட்ட்ரம்ப்பைச்சுட்டுக்கொல்லப் போவதாக மிரட்டிய நபருக்கு 37 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தைச்சேர்ந்தவர் ஜெர்ராட் ஹன்ட்டர்ஸ்கிம்ட் என்பவர் ஒரு வழக்கில் தனக்கு விதிக்கப்புட்ட தண்டனைக்கு எதிராக நெப்ரஸ்காமாவட்டமேல்முறையீட்டுநீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அது தோல்வியில் முடிந்தது.

இதனால்கோபமடைந்தஜெர்ராட், நெப்ரஸ்காநீதிமன்றத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ட்ரம்ப்பின் தலையில்துப்பாக்கியால்சுட்டுஅவரைக்கொல்லப்போவதாக் மிரட்டினார்.

இதைத் தொடர்ந்து, அவரைத் தேடிவந்த பொலிஸார் அவரைக் கைது செய்து அரிசோனா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தனர். இந்தவழக்கில்தீர்ப்பளித்தநீதிபதி ஜெர்ராட் ஹன்ட்டர் ஸ்கிம்ட்டுக்கு 37 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தார்.



# 600 கோடி விவசாயக் கடன் தள்ளுபடி: பா.ஜ.க. ஆளும் அசாம் அரசு உத்தரவு

அசாம், டிசெ.20

புதிதாக அமைந்துள்ள மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மாநில அரசுகளைத் தொடர்ந்து பா.ஜ.க. ஆளும் அசாம் மாநில அரசும் 600 கோடிரூபாய் மதிப்பிலானவிவசாயக்கடன்களைத்தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த 3 மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.



இதில்மத்தியபிரதேசமாநிலத்தில்பெரும்பான்மை இல்லாத நிலையில், பகுஜன் சமாஜ் கட்சி ஆதரவு அளித்துள்ளதால், சத்தீஸ்கர், ம.பி. ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில்காங்கிரஸ்ஆட்சி அமைத்தது.

மத்திய பிரதேச மாநில முதல்வராக கமல்நாத் பொறுப்பேற்ற நிலையில்மாநிலத்தில்விவசாயக்கடனைத்தள்ளுபடிசெய்துகையெழுத்திட்டார். இதைத் தொடர்ந்து சத்தீஸ்கர் முதல்ரவாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பூபேந்திர பாகேலும், சத்தீஸ்கர்மாநிலத்தில் உள்ள சிறு விவசாயிகளின் ரூ. 6ஆயிரத்து 100 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும், நெல்லுக்கு ஆதார விலை 2ஆயிரத்து 500 ஆக உயர்த்தப்படும் என அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து நாடுமுழுவதும் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வேண்டுகோள் விடுத்தார். இந்த நிலையில் பா.ஜ.க ஆளும் அசாம் மாநில அரசும் விவசாயக் கடனை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. அசாம் மாநிலத்தில் 8 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் 600 கோடி ரூபாய் அளவிலான விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்துள்ளது. விரைவில் மக்களவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அடுத்தடுத்து மாநில அரசுகள் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சம்பந்தன் கொடுத்த சாட்டையடி!

நேற்றே இந்தப் பத்தியில் குறிப்பிட்டதைப் போன்று நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் பிரச்சினை ஓய, எதிர்க்கட்சித் தலைவர் பிரச்சினை தலைதூக்கிவிட்டது.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வு இந்தப் பிரச்சினையால் அல்லோலகல்லோலப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பதவி மகிந்த ராஜபக்சவுக்கு கேட்டுக்கேள்வியில்லாமல் வழங்கப்பட்டது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடுமையான ஓர் உரையை ஆற்றினார். அதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குப் பல நுணுக்கமான, ஆழமான குத்துக்கள் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

''பிளவுபடாத பிரிக்க முடியாத இலங்கை நாட்டில் ஐக்கியத்துடனும் அமைதியுடனும் வாழ விரும்பும் குடிமக்கள் இந்த நடவடிக்கையினை இந்த நாடு இன்றைக்கு இருக்கும் இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு மூல காரணமாக அமைந்த பெரும்பான்மைவாத சிந்தனையாகவே கருதுகிறார்கள்'' என்று தனது உரையின் இறுதிக் கட்டத்தில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். அதாவது எதிர்க் கட்சித் தலைவர் பதவியை எடுத்த எடுப்பில் மகிந்த ராஜபக்சவிடம் சபாநாயகர் தூக்கிக் கொடுத்தமையைச் சாடியே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவிடம் இருந்து ஆட்சியைப் பிடுங்கவும், மக்களாட்சியைப் பாதுகாப்பது என்கிற முழக்கத்தின் கீழ் தலைமை அமைச்சர் பதவியை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பெறுவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்திக்கொண்ட நீங்கள், அந்தப் பிரச்சினை தீர்ந்ததும், எந்த நீதி நியாயங்களையும் சட்ட நுணுக்கங்களையும் ஆராய்ந்து பார்க்காமல், ஏனைய கட்சித் தலைவர்களுடனும் பேசாமல், குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தன்னுடன் கூடப் பேசாமல் மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தூக்கிக் கொடுக்கிறீர்கள் என்றால், அது நீங்கள் எல்லோரும் சிங்களவர்கள், பெரும்பான்மையினத்தவர்கள், உங்களுக்குள் சேர்ந்திருப்பவர்கள் என்கிற அர்த்தத்தில்தானே நடந்தது என்று குத்திக்காட்டியிருக்கிறார் சம்பந்தன்.

குறைந்தபட்சம் தன்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதாக அறிவிக்குமளவிற்கான மரியாதையைக் கூட இந்தப் பெரும்பான்மைவாத மனோ நிலை சிங்களத் தலைவர்களுக்குத் தரவில்லை என்பதை இதன் மூலம் ஓங்கி உரைத்திருக்கிறார் அவர்.

இந்த விடயத்தில் கூட்டமைப்புத் தலைவரின் நிலைப்பாடு மிகச் சரியானதே! தமிழ், முஸ்லிம், மலையக மக்களைத் தமது தேவைக்குக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி வீசிவிட முடியாது என்பதை அதிகாரத்தில் இருக்கும் சிங்களத் தலைவர்களுக்கு மிகவும் உறுதியாக, ஆணித்தரமாக இடித்துரைக்க வேண்டியது அவசியம். அப்படி இடித்துரைக்கும் உரிமையை, ரணில் அரசுக்கு ஆதரவு வழங்கி பதவிக் கதிரையில் அமர்த்தியதன் மூலம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கொண்டிருக்கிறது என்பதும் யதார்த்தம்.

இப்போதே இத்தகைய விடயங்களில் தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்கள் ஒன்றிணைந்து ஆணித்தரமாக எதிர்ப்புக் குரல் காட்டத் தவறினால், காலப் போக்கில் இந்தத் தரப்புகளைக் கிள்ளுக்கீரைகளாகக் கணித்து, துச்சமாகத் தூக்கி வீசிவிடவும் சிங்களத் தலைவர்கள் தயங்கமாட்டார்கள்.

இந்த இடித்துரைப்போடு சம்பந்தர் மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இத்தகைய பெரும்பான்மைவாத சிங்கள மனோநிலைக்கான தீர்வு புதிய அரசமைப்பு ஊடாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அந்த விடயம். ஆனால், பெரும்பான்மைவாத மனோநிலையில் ஆண்டாண்டுகாலமாக ஊறித் திளைத்திருக்கும் சிங்களத் தலைவர்களின் மனச்சாட்சியை சம்மந்தரின் இந்த உரை தட்டியெழுப்புமா என்றால், அது சந்தேகம்தான். இதைவிடவும் வேகமான, விவேகமான அணுகுமுறையை அவர் சிங்களத் தலைவர்களுடன் கடைப்பிடிக்க வேண்டிய தேவையை அது உணர்த்தி நிற்கின்றது.

# தவறுகளை செய்யாதிருங்கள்!

செ.உமாசுதன்

ஆரம்ப காலத்திலும் சரி நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிகழ்காலத்திலும் சரி செய்யக்கூடாத தவறுகள் என்ற பட்டியலில் 'திருட்டு', 'சூது' ஆகிய இரண்டும் முதல்நிலையில் அமைந்துள்ளன. இந்த இரண்டு தவறுகளும் ஒரு மனிதனை எந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அது உலகறிந்த உண்மையாக விளங்குகிறது. இங்கு 'திருட்டு' என்பது, பிறருக்கு உரிமை உடைய பொருளை அவருக்குத் தெரியாமல் தான் எடுத்துக் கொள்வதாகும். 'சூது' என்பது, பிறருக்குச் சொந்தமான பொருளை தந்திரத்தால் ஏமாற்றித் தான் எடுத்துக் கொள்வதாகும்.

### 'சூது' என்பது தந்திரமான விளையாட்டு!

தாயக்கட்டைகளை உருட்டி விளையாடுகின்ற இந்த விளையாட்டுக்குச் 'சூதாட்டம்' என்று பெயர் குறிப்பிடுவர். இந்தத் தந்திரமான விளையாட்டின் அடிப்படையிலே தான் 'மகாபாரதம்' உருவானது. துரியோதனன் துகில் உரிவதற்கும் பாஞ்சாலி சபதம் செய்வதற்கும் அடிப்படையாக அமைந்த காரணமே இந்த விளையாட்டுத் தான். அதிலும் திருவள்ளுவர் 'சூது' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களைத் தந்து அவற்றுக்கு அருமையான விளக்கம் தந்துள்ளதை இவ்விடம் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சூதுவிளையாடியவனின் நிலை பற்றிக் குறிப்பிடும் திருவள்ளுவர் அதை, "கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் இல்லாகி யார்!" என்று சுட்டுகிறார். சூதாடும் கருவியையும், சூதாடும் இடத்தையும், தம் கைகளையும் நம்பி மேல் சென்றவர்கள் ஒன்றும் இல்லாதவராய் ஆவர்." என இடித்துரைக்கின்றார். இங்கே, 'கவறு' என்பது சூதாடும் கருவியையும், 'கழகம்' என்பது சூதாடும் இடத்தையும் குறித்து நிற்கின்றன.

### 'மைத்திரி - மகிந்த' கூட்டு திருட்டின் அடையாளம்!

அந்தவகையிலே இலங்கையின் இன்றைய அரசியல் கள நிலவரங்கள் கூட மேற்போந்த செய்யக்கூடாத தவறுகள் பட்டியலில் முதல்நிலையில் உள்ள 'திருட்டு' மற்றும் 'சூது' குறித்து அற்புதமான விளக்கங்களைத் தந்துள்ளன. குறிப்பாக நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிப்பேன் என்ற கடிவாளத்தோடும், இன நல்லிணக்கம் தரும் நல்லாட்சி என்கிற மந்திரக் கோலோடும் ஆட்சிஅதிகாரத்தில் அமர்ந்த மைத்திரிபால சிறிசேன, அதே அதிகாரத்தைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட கதையை 'ஒக்ரோபர் சூழ்ச்சி' விளம்பியாய் விளம்பியதை யாவரும் அறிவர். குறிப்பாக ஜனநாயகத்தை மீறித் திருட்டுத்தனமாக அதிகாரப் பிறழ்வில் ஈடுபட்டு தலைமை அமைச்சர் பதவி என்ற உரிமையை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கிய தன்மை 'திருட்டு' என்ற தவறாகவே மேலோங்கி நிற்கிறது. இந்தச் செயல் மைத்திரிபால சிறிசேன ஓர் திருடன் என்பதை வெளிக்காட்டி நிற்பதுடன், மக்களாட்சித் தத்துவத்தை 50 நாள்கள் வரை கீழ்மைப்படுத்திய தனியனாகவும் அவரை அடையாளப்படுத்தி நிற்கிறது.

### 'சூதாட்ட' களமாக மாற்றங்கண்டுள்ள நாடாளுமன்றம்!

இதேவேளை மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் ஜனநாயகத்தின் உயரிய பீடமாகக் கருதப்படுகின்ற நடாளுமன்றம் தற்போது 'சூதாட்ட' களமாக மாற்றங்கண்டுள்ளது. ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதிய சூழ்ச்சியின் பலாபலன் ஆரம்பத்தில் ஆட்சியாளர்களிடையே பதவி மோகத்தையும், கைகலப்புகளையும், பணமூலமான பேரம் பேசல்களையும், கட்சித் தாவல்களையும் நடத்தைப் பிறழ்வாக கட்டவிழ்த்துவிட்டன. அந்தக் களோபரங்கள் ஒருவாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தலைமை அமைச்சர் பதவி மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் 'ஆட்சிக் கவிழ்ப்பு' அல்லது 'புதிய ஆட்சி'யின் உருவாக்கம் என்கிற சூதாட்டம் ஜனநாயகத்தை மானபங்கப்படுத்தியுள்ளது. சூழ்ச்சியின் சூத்திரதாரிகளான பெரும்பான்மையினக் கட்சியினரிடையே மீண்டும் 'பதவி' என்ற தாயக்கட்டைகளைத் திணித்து நாடாளுமன்றத்தை சூதாட்டகளமாக்கி அவற்றை உருட்டி விளையாடப் பணித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அதன் வழிப்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவராக மகிந்தராஜபக்சவை முன்னிறுத்தி அவரை அந்தப் பதவியில் அமர்த்துவதற்கான 'சூது' இடம்பெற்று வருகிறது.

### தமிழர் தரப்பைச் சிறுமைப்படுத்தும் ஆட்சி மாற்றத் தந்திரம்!

இங்கு ஆட்சி மாற்றம் என்கிற தந்திரத்தின் வழி தமிழர் தரப்பை சிறுமைப்படுத்திய துரியோதனனாக மகிந்த ராஜபக்ச ஜனநாயகத்தின் துகிலை உரிய முற்படுவதும், பஞ்சாலி சபதமாக மிக நீண்ட காலங்களின் பின்பு தமிழர் தரப்பு நல்லாட்சிக் கரங்களிடம் இருந்து பிரதி உபகாரமாகப் பெற்றுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்பதையும் அண்மைய அரசியல் கள நகர்வில் கண்டுகொள்ள முடிகிறது.

மிக முக்கியமாக "அரசமைப்பின் 99 ஆவது உறுப்புரிமையின் பிரகாரம் நடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலகினால் அல்லது நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத வேறு கட்சியில் இணைந்தால் அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாது போகும். இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். தெரிவுக்குழு மூலம் இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதுவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சம்பந்தனே இருப்பார்." என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இந்தப் பிரதிவாதம் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தர மறுக்கும் அதிகாரத் தரப்பிடம் இருந்து தனித்துப் பதவி நிலையில் நீடித்திருப்பதற்கான நியாயத்தை வேண்டி நிற்கும் பாஞ்சாலி சபதமாகவே தோற்றம் தருகின்றன.



### சிறு துளி பெரு வெள்ளமாக மாற்றம் பெறுமா?

ஆக, தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தாம் வழங்கிய ஆணையின் கட்டுமானமாக இதுவரை உயர்ந்து நிற்கின்ற நாடாளுமன்றம் தற்போது 'சூதாட்ட' களமாக மாற்றம் பெற்றுள்ளதை தெரிந்துகொண்டுள்ளனர்.

தவிர அங்கு சூதாடும் கருவியாக தமிழர் பிரதி நிதித்துவங்கள் உள்ளீர்க்கப்படுவதையும், தாம் வழங்கிய வாக்குரிமைக்கான விளைவு தீமையின் பற்றுதலால் கபளீகரம் செய்யப்படுவதையும் ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர். சிங்களப் பேரினவாதம் என்ற சூதாடிகளிடம் இருந்து தப்பித்து தமிழர்களின் வாழ்வில் நன்மைகள் ஏற்படவும், தீர்வை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டிய தன் அவசியத்தைப் புரிந்துகொள்ளவும் தலைப்பட்டுள்ளனர்.

'சிறு துளி பெரு வெள்ளம்!' என்ற நம்பிக்கையில் ஒட்டுமொத்த தமிழர் பிரதிநிதித்து வங்களின் எதிர்காலச் செயல் வேகம் குறித்து எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கின்றனர்!

# ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பாரா ரணில் விக்கிரமசிங்க?



■ சேரலாதன்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஒற்றையாட்சித் தத்துவத்திலேயே தொடர்ந்தும் நிலைத்திருக்கப்போவது திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. காலிமுகத்திடலில் இடம்பெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தில் வைத்து அவர் இதை உறுதி செய்துள்ளார்.

**ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு சாத்தியப்படாது!**

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் நாட்டில் நிலவிய அரசியல் குழப்பம் ஒருவாறு முடிவுக்கு வந்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். அதன் பிற்பாடு கருத்துரைக்கும் போது ஒற்றையாட்சிக்குள் மட்டுமே அரசியல் தீர்வு வருமெனத் திருவாய் மலர்ந்துள்ளார். ரணில் வெளிப்படுத்தியுள்ள இந்த அறிவிப்பு கூட்டமைப்பின் தலைமைக்கு ஒருபோதும் உவப்பான விடயமாக இருந்திருக்காது என்பதைக் கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. ஏனெனில் தமிழ்மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கிடைக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பின் மிகமுக்கியமான கோரிக்கையாகக் காணப்படுகின்றது. அதேவேளை ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு சாத்தியப்படாது என்பதையும் கூட்டமைப்பு நன்கு அறிந்துகொண்டுள்ளது. உண்மையில் கூட்டாட்சி ஏற்படும்போதுதான் அதிகாரப் பகிர்வு சாத்தியமாகும்.



இங்கு கூட்டாட்சி என்பது சமஷ்டியின் மற்றொரு பெயர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தந்தை செல்வநாயகம் மறைந்த ஜி.ஜி.பொன்னம்பலத்துடன் முரண் பட்டுக்கொண்டு தனிக் கட்சியை ஆரம்பித்தபோது, அது 'சமஷ்டிக் கட்சி' என்றே பலராலும் அழைக்கப்பட்டது. ஏனென்றால் சமஷ்டியையே தனது அடிப்படைத் தத்துவமாக அது கொண்டிருந்தது. ஒற்றையாட்சி என்கிற இரும்புத் தளைக்குள் நாடு கட்டுண்டு இருக்கும் வரையில் தமிழர்களுக்கு எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் கிடைக்காதென்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

சமஷ்டி அல்லது கூட்டாட்சி தொடர்பாக இனவாதிகள் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டதால் பெரும்பான்மையின மக்கள் அதை முற்றாகவே நிராகரிக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இந்தநிலையில் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் ஒற்றையாட்சிக்கு அப்பால் செல்வது குறித்து அச்சம் கொண்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவும் இதற்கு விதி விலக்கானவர் அல்ல என்பது தெளிவாகவே தெரிகிறது.

**கூட்டமைப்பின் நம்பிக்கை பிசுபிசுத்துப்போனது!**

மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும், ரணிலுக்கு ஆதரவான நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும் கூட்டமைப்பு ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சிக்குச் சார்பாகவே நடந்துகொண்டது. ரணில் தமக்கு ஆதரவான நம்பிக்கைத் தீர்மானத்தில் வெற்றிபெறுவதற்காக கூட்டமைப்பின் ஆதரவை நாடி நின்ற போது, அதன் தலைமை சில நிபந்தனை விதித்ததாகவும், அதற்கு எழுத்து மூலமான உத்தரவாதமொன்றை ரணில் வழங்கியதாகவும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் தீர்மானம் வெற்றிபெற்றதன் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் இந்த விடயம் மறுத்துரைக்கப்பட்டது. கூட்டமைப்பின்சார்பிலும் இதுதொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வெளியாகின. இதனால் தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தநிலையில் தான் ரணில் விக்கிரமசிங்கவின் ஒற்றையாட்சி தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதேவேளை சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆப்பு வைக்கின்ற முயற்சிகளில் மகிந்த தரப்பினர் முழுமையான ஈடுபாடு காட்டி வருகின்றனர். எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள அவர்கள் தலைமைப் பதவியும் தமக்கே வழங்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக ரணில் விக்கிரம சிங்கவை ஆதரித்ததால் நீண்ட காலத்தின் பின்னர் தமிழர் ஒருவருக்குக் கிடைத்த அந்தப் பதவியை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மறுத்துரைக்க முடியாது.

**இனவாத மேலாண்மையிடம் இருந்து தீர்வைப் பெறுவது இலகுவான காரியமல்ல!**

இதனிடையே காணாமல் போனவர்கள் தொடர்பில் அரச தலைவர் கூறிய கருத்துக்கள் ஏற்கமுடியாதவை. படையினர் போர்க்குற்றம் புரிந்தமை தொடர்பாக நீதியான விசாரணைகள் முதலில் இடம்பெறவேண்டும். அதன் பின்னரே தண்டனை வழங்குவது தொடர்பாகத் தீர்மானிக்க முடியும். இதைவிடுத்து முன்னாள் போராளிகளையும், படையினரையும் இணைத்து அவர் கருத்து வெளியிட்டமை சிறுபிள்ளைத்தனமானது.

> புதிய தலைமை அமைச்சர் ஒற்றையாட்சிக்குள்ளாவது அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார். அதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுவருவது நாட்டுக்கு உகந்த சுவாத்தியமாகத் தெரியவில்லை. ஒற்றையாட்சியில் சில நெகிழ்வுத் தன்மைகளை ஏற்படுத்தி, அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி அமைக்கக்கூடிய தீர்வுத் திட்டத்துக்கு ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும். இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையில் தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவே சரியான வழிமுறை என்பதை மறந்துவிட முடியாது.

எனவே புதிய தலைமை அமைச்சர் ஒற்றையாட்சிக்குள்ளாவது அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார். அதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டும். உண்மையில் ஒற்றையாட்சிக்குள் அரசியல்தீர்வு என்ற முயற்சியில் அவர் சாதிப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

# அதிகாரிகள் கண்ணோட்டத்துடன் செயல்படலாமா?

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முக்கியமான பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக மாணவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளும், அவர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகளும் முன்னிலை பெறுவதாகத் தெரியவில்லை.

படிப்புரிமைகளும் அடிப்படை உரிமைகளும் கண்டுகொள்ளப்படவில்லை. அவர்கள் மதிக்கப்படவில்லை மாறாக மிதிக்கப்படுகின்றனர். வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருடம் தோறும் (கலை, வர்த்தகம், பௌதீகம், விஞ்ஞானம், முகாமைத்துவம்) துறைசார்ந்து ஆயிரம் வரையான பட்டதாரிகள் வெளியேறுகின்றனர். ஆனால் அவர்களுக்குரிய பொருத்தமான வேலைவாய்ப்பு என்பது எட்டாக் கனியாகவே இருந்துவருகிறது. குறைந்தது 5 வருடங்கள் அல்லது அதற்கு மேல் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இந்தநிலையில் தற்போது இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 46 இளைஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள தகவலை ஊடகங்கள் வயிலாக அறிய முடிந்தது. உண்மையில் வடக்கு மாகாணத்தில் பல ஆயிரம் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பின்றி இருக்கும் போது, சிங்கள மாவட்டங்களில் இருந்து ஊழியர்களைக் கொண்டுவந்து பணிக்கமர்த்தியுள்ள செயற்பாடு கண்டிக்கத்தக்கது.


எந்த அடிப்படையில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வடபகுதியில் உள்ள தகுதியான தமிழ் இளைஞர்களை அந்த இடங்களுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது விடயம் குறித்து வடமாகாண ஆளுநர் கருத்தில் எடுத்துச் செயற்படுவாரா? அவர்களுடைய நியமனத்தை உடனடியாக இரத்துச்செய்வதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பாரா? வழங்கப்படும் சம்பளம் போதவில்லை (31,750), ஏனைய மாகாண சபைகளைப் போல (43,250) சம்பளம் வழங்கப்படவேண்டும் என கடந்த காலத்தில் வடமாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதிய 'பெருந்தகைகள்' இது குறித்துச் சிந்திப்பார்களா?

**ப.கயல்விழி, நெல்லியடி**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## வித்தியாசங்கள் காண்போம்



# மூக்கு உடைந்த குருவி!



ஆற்றங்கரை அருகே ஒரு பெரிய மரத்துக்குக் கீழே சேவலும் கோழியும் வசித்து வந்தன. இரண்டும் அதிகாலை உணவு தேடிப் புறப்படும். மாலையில்தான் வீடு திரும்பும்.

அந்த மரக் கிளையில் ஒரு குருவியும் கூடி கட்டி இருந்தது. ஒருமுறை குருவி கூட்டில் சேர்த்து வைத்த தானியங்கள் கீழே விழுந்துவிட்டன. அவற்றைக் கோழியும் சேவலும் சாப்பிட்டுவிட்டன. தன்னுடைய தானியங்களைத் தன் அனுமதியின்றி எப்படிச் சாப்பிடலாம் என்று சண்டையிட்டது குருவி. கீழே விழுந்த தானியங்களை எடுக்க யார் அனுமதியும் தேவை இல்லை என்றது கோழி. அதிலிருந்து குருவிக்குக் கோழியைக் கண்டாலே பிடிக்காது.

நாட்கள் சென்றன. கோழி மீது தேவையின்றி வெறுப்பை வளர்த்துக்கொண்ட குருவி, பழி வாங்குவதற்குத் தகுந்த நேரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

“முட்டைகள் சேர்ந்துவிட்டன. நாளை முதல் அடை காக்கப் போகிறேன்” என்றது கோழி.

“சரி, உனக்கு நானே உணவு கொண்டு வந்துவிடுகிறேன்?” என்றது சேவல்.

இரண்டும் பேசிக்கொண்டு செல்வதைப் பார்த்த குருவியின் மனதில் ஒரு திட்டம் உருவானது.

சட்டென்று கோழியின் கூட்டுக்குள் நுழைந்தது. முட்டைகளைத் தன் அலகால் கொத்தியது. மீண்டும் தன் கூட்டுக்குள் வந்து அமர்ந்துகொண்டது.

மாலை வீடு திரும்பிய கோழி, உடைந்திருந்த முட்டைகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது. அழுதுகொண்டே சேவலிடம் முறையிட்டது.

“நாம் இல்லாத நேரத்தில் யாரோ வந்து முட்டைகளை உடைத்துச் சென்றிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் இப்படி ஒரு குணம் படைத்தவர்கள் யாரும் இல்லையே…”

“இது பாம்புகளின் வேலையாக இருக்குமோ?”

“இல்லை. பாம்புகள் முட்டைகளை முழுவதுமாக விழுங்கக்கூடியவை. இது வேற யாரோ. சரி, நாளை பார்க்கலாம்” என்று சமாதானம் சொன்னது சேவல்.

மறுநாள் காலை முட்டையிட்டு, வைக்கோலைப் போட்டு மூடி வைத்தது கோழி. பிறகு உணவு தேடி இரண்டும் புறப்பட்டன.

கோழியும் சேவலும் அங்கிருந்து புறப்பட்டதை உறுதிப்படுத்திக்கொண்ட குருவி, கீழே வந்தது. கூட்டுக்குள் நுழைந்து, முட்டையை உடைத்துவிட்டுக் கிளம்பியது. அன்று மாலை பதற்றத்துடன் கூட்டுக் குத் திரும்பியது கோழி. முட்டை உடைந்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. இதுக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும் என்றது கோழி. சேவல் நீண்ட நேரம் யோசித்து, ஒரு திட்டம் தீட்டியது.

“கவலைப்படாதே. இரண்டே நாளில் இந்தப் பொல்லாத வேலையைச் செய்பவரைப் பிடித்துவிடலாம்” என்றது.

“எப்படி?”

கோழியின் காதில் தன் திட்டத்தைச் சொன்னது சேவல். மகிழ்ச்சி அடைந்தது கோழி. மறுநாள் உடைந்த முட்டை ஓடுகளைச் சேகரித்தது கோழி. களிமண்ணையும் கற்களையும் கொண்டு வந்தது சேவல். முட்டை ஓட்டுக்குள் கற்களையும் களிமண்ணையும் வைத்து முட்டைகளைத் தயார் செய்தன. இரண்டு நாட்களில் களிமண் கெட்டியானது.

“முட்டைகள் தயார். இன்று இரை தேடிச் செல்வோம்” என்றது சேவல்.

இரண்டும் நிம்மதியாகக் கிளம்பின.

“அவர்கள் புறப்பட்டு விட்டனர் இரண்டு நாளா முட்டை உடைக்காமல் தூக்கமே வரவில்லை”என்றுசொல்லிக்கொண்டே கோழி கூட்டுக்குள் சென்றது குருவி.

முட்டையைக் கண்டது. ஒரு கொத்துக் கொத்தியது. ஆனால், முட்டை விரிசல் கூட விடவில்லை. கொஞ்சம் வேகமாகக் கொத்தியது. அப்போதும் உடையவில்லை. தன் பலம் அனைத்தையும் சேர்த்துக் கொத்தியது.

இப்போது உடைந்தது முட்டையல்ல… குருவியின் மூக்கு.

வலியால் துடித்துக்கொண்டே வெளியேறிய குருவியை, சேவல் மடக்கியது.

“முட்டையிடுவதும் அவற்றை அடை காப்பதும் எவ்வளவு கஷ்டம் என்று உனக்கே தெரியும். ஒரு பறவையாக இருந்துகொண்டு இப்படி ஒரு காரியத்தை எப்படிச் செய்யத் துணிந்தாய்?” என்று கோபமாகக் கேட்டது கோழி.

“என்னை மன்னித்துவிடுங்கள். என் மூக்கு உடைந்துவிட்டது இனி நான் தவறு செய்ய மாட்டேன்” என்று அலறிக்கொண்டே வேறு இடம் நோக்கிப் பறந்தது குருவி.

# உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள்

**முன்னிலைப்படுத்துங்கள்**

உறவுகள் மிக முக்கியமானவை. நமக்கு முக்கியமான உறவு கள் முன் எமது வேலை. வசதி, விருப்பங்கள் எல்லாம் இரண்டாம் பட்சமே.

**சுதந்திரம் கொடுங்கள்**

மற்றவர்களுக்குத் தனிப்பட்ட விடயங்களில் சுதந்திரம் கொடுப்பது என்பது மிக முக்கியமானது. ஒத்த இயல்புடையவர்களை நண்பர்களாகக் கொண்டிருப்பது மிகவும் நல்லது. நன்றாகப் பழகிய பின்புதான் ஒருவரைப் பற்றி அபிப்பிராயம் கொள்ளவேண்டும் அதன் பின்பே நட்பு வலுப்படும்.

**பரஸ்பர நம்பிக்கை**

சந்தேகம் உறவுகளைக் கெடுக்கும். திறந்த மனத்துடன் இருங்கள். ஒருவரை ஒருவர் நம்புங்கள். நேர்மையாகவும் இருங்கள். இருவருக்கான கருத்து வேறுபாடுகள் பற்றியும் பேசுங்கள்.

**மதித்தல்**

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்வோம். ஒருவரை விட இன்னொருவர் அதிகமாகச் சம்பாதிக்கச் செய்வோம். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை இருக்கும். பணத்தை வைத்து திறமையை மதிப்பிட முடியாது. ஆகவே ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும்

**மன்னிப்பு**

அனைவரும் தவறு செய்பவர்கள்தான். அதற்காக அற்புதமான உறவைக் கெடுத்துவிடாதீர்கள். மன்னித்துவிடுங்கள்.

**வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்**

அன்றாட வேலைகளில் நீங்களும் பங்கெடுங்கள். மற்றவர்கள் தான் செய்ய வேண்டுமென்று விட்டு விடாதீர்கள்.

**தவறுகளை ஏற்றுக் கொள்ளுங்கள்**

தவறுகள் செய்தால் ஆமாம் என ஏற்றுக்கொள்ளுங்கள். மறைக்க முயன்றால் உறவுகள் பாதிக்கப்படும் தவறு செய்துவிட்டேன் என மன்னிப்புக் கோருவது சிறந்தது.

**முக்கிய நாள் நினைவில் இருக்கட்டும்**

நண்பர்களின் பிறந்தநாள் திருமண நாள் என்பன நினைவில் இருக்கட்டும். மறந்துபோய் விடும் என்றால் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

## நீரை காப்போம்

நீரை விரயம் செய்யாமல்
குளித்துப் பழக வேண்டும்!


அடிக்கடி ஆடைகள் மாற்றும்
பழக்கம் கைவிட வேண்டும்!
துணிகளை அலசும் நீரை
செடிக்கு ஊற்ற வேண்டும்!


வீட்டில் மழைநீர் சேமிக்க
தொட்டி அமைக்க வேண்டும்!
கழிப்பறைக்கு அந்நீரைப்
பயன்படுத்திட வேண்டும்!

ஒவ்வொரு மனிதரும் தினமும்
சிறிதே நீரைச் சேமிக்க
உலகில் நீர்வளம் பெருகுமே
அதனால் நிலவளம் சிறக்குமே!

நீரின்றி அமையாது உலகு
வள்ளுவர் சொன்ன கருத்தாம்!
மனதில் அதை நிறுத்தி
நடந்தால் நல்லது நமக்காம்!







## பொறுமை அவசியம்

தனது நண்பர்களுக்கும், சக விஞ்ஞானிகளுக்கும் மின்சாரக் குமிழை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக எடிசன், ஒரு சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

எடிசன், தனது உதவியாளரை அழைத்து மின்சாரக் குமிழை மேல் தளத்துக்குக் கொண்டு வரச்சொன்னார். பல்பை கொண்டு வரும்போது, அது கைத்தவறிக் கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கு கூடியிருந்த அனைவரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளர் பதற்றம் அடைந்தார். ஆனால், எடிசன் சற்றும் மனம் தளரவில்லை.

ஆயிரம் தோல்விகளைச் சந்தித்து வெற்றி கண்ட அவருக்கு, மின்குமிழை மீண்டும் உருவாக்குவது எளிதாக இருந்தது. சிறிது முயற்சி செய்து மின்சாரக் குமிழ் ஒன்றை திரும்பவும் உருவாக்கினார். அதனை மீண்டும் அந்த உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்துவரச் சொன்னார்.

“மின்சாரக் குமிழை கீழே போட்டு உடைத்தவனிடமே மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே?” என்று சிலர் எடிசனிடம் கேட்டேவிட்டனர்.

அதற்கு, “மின்சாரக் குமிழ் உடைந்தாலும் என்னால் திரும்பவும் செய்துகொள்ள முடியும். ஆனால், அவரது மனதை காயப்படுத்திவிட்டால் அதை என்னால் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? அதனால்தான் திரும்பவும் அவரிடமே பணியைக் கொடுத்தேன். அவர் தனது பொறுப்பையும், எனது நம்பிக்கையும் உணர்ந்து கூடுதல் கவனத்துடன் பணிபுரிவார் என்றார் எடிசன்.

எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்த பொறுமை உணர்ச்சியின் எல்லையை அப்போதுதான் மற்றவர்கள் முழுமையாக உணர்ந்தார்கள். குழந்தைகளே! உங்களுக்கு எந்த அளவுக்கு பொறுமை உண்டு?

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பொடியன் கந்தையன் (தம்பர்)



பிறப்பு 22.02.1933 இறப்பு 16.12.2018

அளவெட்டி மேற்கு, காட்டுப்புலத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு வராஹி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் கந்தையன் (தம்பர்) 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சடையர் - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் மகேஸ்வரியின் (சின்ராசு) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, கணபதி மற்றும் தங்கம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற செல்லையா மற்றும் இராசம்மா, சரஸ்வதி, பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், வீரபாகு மற்றும் திரவியம், பவளமணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பிறேமா (ஆசிரியர் - யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) மற்றும் பிறேம்குமார், காலஞ்சென்ற சிவகுமார் (செல்வம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், பேருசாளி, தனுவர்ணன், பபிகேசன், டிலான், டீனன், தீபராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

வராஹி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.

## இரட்ணம் தங்கராசா

(இளைப்பாறிய அதிபர்)



பிறப்பு 02.02.1940 இறப்பு 17.12.2018

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான இரட்ணம் தங்கராசா 17.12.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.12.2018 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 8763) (14,17)

தகவல்: குடும்பத்தினர்.

சிவா (மகன் - கனடா) 001 416 930 6614/
கௌரி (மகள் - கனடா) 001 416 479144870/
மாலா (மகள் - கனடா) 001 416 477175963/வீடு - 001 416 266 2984



பிறப்பு 15 . 09 . 1946

இறப்பு 19 . 12 . 2018

## செல்லத்துரை சிதம்பரநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிதம்பரநாதன் நேற்று (19.12.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், ரகுநாதன் (சண்டிலிப்பாய்), ஜெகநாதன் (மலேசியா), மேகலா (அளவெட்டி), ஜீவிதா (கிளிநொச்சி), லோஜிதா (அளவெட்டி), மேனகா (அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசபூபதியின் அன்புச் சகோதரனும், ஜெகதாம்பிகை, சாந்தினி, கிருஸ்ணகுமார், சுரேஸ்குமார், கஜமுகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(C 14355)(13,17)

077 441 5198 / 077 525 3424 / 077 106 8782

# நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு





| அமரர் இளையதம்பி கனகசபாபதி | | திருமதி அன்னபூரணி கனகசபாபதி |
|---|---|---|
| 29.08.1939 | மலர்வு | 21.11.1942 |
| 31.12.2017 | உதிர்வு | 14.12.2015 |
| 20.12.2018 | திதி | 11.12.2018 |

எமக்காய் வலிசுமந்த மேனிகள் விழிமூடிச் சென்றாலும்
காலங்கள் என்றும் உம் நினைவுகளை மீட்டுத்தரும்
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

76, மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(CS 21929)(14,17)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 01 . 1934

இறப்பு 19 . 12 . 2018

## திருமதி சரஸ்வதி இராசையா (வேலணை)

வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரம் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசையா 19.12.2018 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர் செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தையா, காசிலிங்கம், அன்னலக்சுமி, சித்திரவடிவேல் மற்றும் யோகவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசகுலசிங்கம்(வேலணை), இராஜேந்திரம் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (ஜேர்மனி), ஞானேஸ்வரி (சாந்தி . யாழ்ப்பாணம்), ஜெயந்திமாலா(பிரான்ஸ்), கல்யாணி (உருத்திரபுரம்), இராஜராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலச்சுமி (வேலணை) காலஞ்சென்ற அகல்யா(ஜேர்மனி), யோகநாதன்(ஜேர்மனி), சிவகுமாரன் (கட்டார்), சுரேந்திரன் (பிரான்ஸ்), தயாபரன்(உருத்திரபுரம்), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் லதாலக்சுமி(வவுனியா), நந்தரூபன்(கட்டார்), நிரோஜன், கீர்த்திகா, அஸ்வினி(ஜேர்மனி), ராகேஸ், ரஜீன், கபிலாஸ்(ஜேர்மனி), Doctor டிசாந் (யாழ் போதனா வைத்தியசாலை), Doctor டினோஜன் (மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை) வினோஜகான் (யாழ். மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவன்), ஓவியா, மதுரன், ஆரூசன்(பிரான்ஸ்), பவித்திரா, திவ்வியா, வேணுயா, யகதீசன் (உருத்திரபுரம்), அபர்ணிகா, அபர்ணன், அக்ஷயன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிஷனன், அனுசிகன், அபராயுதன் (வவுனியா), டனுசன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 26/14, வளாக வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

26/14, வளாக வீதி,
தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
077 633 4386

(CS 21933/14/15/17)

தகவல்: குடும்பத்தினர்.

# சேவைநலன் பாராட்டு

முு/துணுக்காய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

அதிபர்

திருமதி **தனபாக்கியம் இரத்தினகுமார்**

(இலங்கை அதிபர்சேவை தரம் - 2)




**சேவை விவரங்கள் :**

- 29.08.1988 - 22.01.1993
  மு/அம்பலப் பெருமாள்குளம் அ.த.க. பாடசாலை
- 23.01.1993 - 02.01.1995
  ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி
- 03.01.1995 - 22.05.1995
  மு/அம்பலப் பெருமாள்குளம் அ.த.க. பாடசாலை
- 23.05.1995 - 26.03.2006
  மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க பாடசாலை
- 27.03.2006 - 20.09.2011
  மு/ தென்னியங்குளம் அ.த.க. பாடசாலை
- 21.09.2011 - 20.12.2018
  மு/ துணுக்காய் அ.த.க. பாடசாலை

குறைந்த வசதிகள் வாய்ப்புகள் உள்ள பிரதேசங்களில் நிறைந்த சேவையை ஆற்றிச் செல்லும் எமது அதிபர் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இன்னும் பல ஆண்டுகள் சேவைகளை செய்ய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலை சமூகத்தினர்**
**மு/துணுக்காய்**
**அ.த.க. பாடசாலை.**

## விற்பனைக்கு

ISUZU 350 எல்வ் இயந்திரம் பொடி மற்றும் உதிரிப்பாகங்கள். JCP Jack மின்சார மோட்டார்கள். வயர்கள். இரும்பு கேடர்கள். மின்சாரப் பொருள்கள் விற்பனைக்குண்டு.

**076 902 2221** (CS 21919)(14.17)

## வேலையாள் தேவை

உணவகத்துக்கு வேலையாள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (CS 21930)(14.17)

**075 777 6597**

## தேவை

Serandib Luster International
மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம் பெண் விற்பனையாளர், கணக்காளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**0710 600 289 / 071 664 7692**

## தவறிவிட்டது

கோண்டாவில் றோட், கோப்பாயை சேர்ந்த கோ.சிவசுந்தரமூர்த்தி ஆகிய எனது 502530461 V இலக்க தேசிய அடையாள அட்டையுடன் மோட்டார் சைக்கிள் ஆவணங்களும் திருநெல்வேலி கொமர்சியல் வங்கிப் பகுதியில் கடந்த 13.12.2018 ஆம் திகதி தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 272 8555 / 021 223 0315**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**உழவு இயந்திரங்கள், சிறியரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துதல், தனியார் பாதுகாப்புச் சேவை, கட்டண அடிப்படையிலான கழிவகற்றல் சேவைகளுக்கான கேள்விகள் கோரல்**

1. யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக் கழிவுகளினை வகை பிரித்தெடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.
2. யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டாரங்களின் கடைகள், சந்தைகளில் வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக் மற்றும் இறைச்சி எலும்புகளினை எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறியரக வாகனம் தேவைப்படுகின்றது.
3. யாழ்ப்பாணம் மாநகரசபையின் தனியார் பாதுகாப்புச் சேவைக்காக இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
4. யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம்பிரிக்கப்பட்ட கழிவுகளை (உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கை தீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவுசேர் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான கழிவு அகற்றும் சேவை வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 19.12.2018 - 01.01.2019 ஆம் திகதி வரை சபையின் கொள்வனவுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு முதல் இரண்டு (01, 02) கேள்விகளுக்குரிய கூறுவிலைப்படிவங்களினையும், வேலைப்பகுதியுடன் தொடர்பு கொண்டு மற்றைய இரண்டு (03.04) கேள்விகளுக்குரிய கூறுவிலைப் படிவங்களையும் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 01.01.2019 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கேள்விகள் திறக்கும் திகதி : 02.01.2019 நேரம் : காலை 10.00 மணி

**ஆணையாளர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C 8764)(14.17)



## தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய மருத்துவ குடும்பம் ஒன்றிற்கு தங்கிநின்று பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை. **0778 819 124**

## பெயர் மாற்றம்

முல்லைத்தீவு குமுழமுனை இல் வதியும் சிவக்கொழுந்து சிங்காரவடிவேல் ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை சிவக்கொழுந்து நிருக்ஷன் என மாற்றுவதோடு இப் பெயரையே சகல ஆவணங்களிலும் பயன் படுத்துவேன் என்பதை அறிவிக்கின்றேன்.

## பெயர் மாற்றம்

சில்லாலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த மருதநாயகம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து மதுரநாயகம் எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(CS 21920)(14.17) **மதுரநாயகம்.**

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் சின்னத்தம்பி நடராசா

*(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.06.1946 | 12.01.2006 |

ஆண்டுகள் பதின்மூன்று ஓடிவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் உயிர் உள்ளவரை
அழியாது

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

கச்சாய் வீதி,
கொடிகாமம். **குடும்பத்தினர்.**

(CS 21727)(14.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்

### திருமதி சாமித்துரை யோகராணி (சாந்தா)

பிறப்பு 17.03.1964 — இறப்பு 17.12.2018



பெரியமடுவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாமித்துரை யோகராணி(சாந்தா) 17.12.2018 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் பெரியமடு. மன்னாரைச்சேர்ந்த இராமுப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதிகளின் மகளும் பொன்னையா சாமித்துரை (ஓய்வு பெற்ற முன்னாள் மன் - பெரியமடு ம.வி ஆங்கில ஆசிரியர்) இன் அன்பு மனைவியும் மதுரனின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (20.12.2018) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**இரா.ஜெயராசா (பெரியமடு) - 077 066 2009**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபைநிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல. 04/2016(i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணத்தின் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணத்தின் பகுதி 5இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் (வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை) 20.12.2018–03.01.2019 வரையான காலப் பகுதியில் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 20.12.2018 ஆம் திகதி தொடக்கம் 03.01.2019 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 04.01.2019ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாள்களுக்கு (22.03.2019 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.12.2018 அன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/01/CF.Bu/2018/70 | Construction of Waste Water Treatment Plant at Kaakaithivu | 16.76 | 04 | C6 (Building) | 168,000.00 | 19.04.2019 |

**ஆணையாளர்,**
**பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை,யாழ்ப்பாணம்.**

19.12.2018

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்
## சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கான
## கேள்வி அறிவித்தல் - 2019

யாழ்ப்பாணம் மாநகர வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான சிற்றுண்டிச் சாலைக் கட்டடமும், தளபாடங்களும் சமையல் பாத்திரங்களும் எதிர் வரும் 01.01.2019 ஆம் திகதி முதல் 31.12.2019 ஆம் திகதி வரையான ஒருவருட காலத்துக்கான குத்தகைக்கு கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 300.00 மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பிணைப் பணமாக ரூபா 1000.00 செலுத்துவதின் பேரில் வழங்கப்படும்.(கேள்விப் படிவங்களில் மட்டும் கேள்விகளைக் சமர்ப்பித்தல் வேண்டும்)
2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மேற்படி சங்க அலுவல-கத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. வருடாந்தம் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 125,000.00 (வரி நீங்கலாக)
4. கேள்விப்படிவங்கள் 20.12.2018 ஆம் திகதி தொடக்கம் 26.12.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
5. கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் 27.12.2018 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.
6. மேலதிக விவரங்களை மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுச் சேவையில் உள்ள
**கோ.நரேந்திரன்**
தலைவர்

(IN 8757)(14.17)

## மரண அறிவித்தல்கள்

### ஆழ்வான் சின்னையா

**மண்ணில் : 20.01.1942 விண்ணில் : 19.12.2018**

மருதங்கண்டு. கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஆழ்வான் சின்னையா நேற்று (19.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் கணவரும், காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம், குணபாலசிங்கம் (சுவிஸ்), தனபாலசிங்கம் (சிங்கன்), ஜெயந்தினி, ஜெயக்குமாரி, குலபாலசிங்கம் (கனடா), பாலசிங்கம் (லண்டன்), குகதாசன், விஜயகுமாரி (சுவிஸ்), புஸ்பலீலா (பிரதேச வைத்திய சாலை கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராணி, விஜயலக்சுமி (சுவிஸ்), செல்வராணி, காலஞ்சென்ற சிவலிங்கம், திருக்குமார், சயானா (கனடா), சர்மிளா, தயாநிதி, சந்திரகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற இராசையா, அன்னம்மா, பூதத்தம்பி, ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.12.2018) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மருதங்கண்டு,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.** (c.8772) (13.17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**



### தர்மலிங்கம் நிரஞ்சன்

யாழ்.புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஊரைதீவு, லண்டன் Middx Northwood ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நிரஞ்சன் 11.12.2018 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான - அருணாசலம் யோகமுத்து, சதாசிவம் - மீனாட்சி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கண்ணம்மா (வெள்ளைக்கண்ணம்மா) தம்பதிகளின் அன்புப் புதல்வரும் சந்திரகலாவின் அன்புக் கணவரும் நீதர்சனின் அருமைத் தந்தையும் மதனசரோஜினி(மதனா - கனடா), மஞ்சுளா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரன்(கனடா), நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோகில்(கனடா), கோபனா(கனடா), மிதுசன்(ஜேர்மனி), பிரவீன்(ஜேர்மனி), ஆருஜன்(ஜேர்மனி), வினோஜன்(ஜேர்மனி) ஆகியோரின் ஆசை மாமனாரும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் யோகேஸ்வரி, கனகரத்தினம் - கமலாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2018 சனிக்கிழமை லண்டன் நேரப்படி 9.30 இற்கு Hendon Cemetery & Crematorium, Holders Hill Rd, London NW7 1NB, UK எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5/1, புகையிரதவீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**த.கண்ணம்மா(தாய்)**
**க.இலம்போதரன்(மைத்துனர்)**

**077 468 5770**

# இன்று வெளியாகின்றது 'சீதக்காதி'



'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' படத்தின் இயக்குநர் பாலாஜி தரணிதரன் விஜய் சேதுபதியை வைத்து இயக்கியிருக்கும் திரைப்படம் 'சீதக்காதி'.

இந்தப் படத்தில் ரம்யா நம்பீசன், பார்வதி நாயர், காயத்ரி ஆகியோர் நடிக்கிறார்கள். படத்தின் முதல் சுவரொட்டியில் முதியவர் வேடத்தில் தோன்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார் விஜய் சேதுபதி. 'ஒஸ்கர்' வின்னர் அலெக்ஸ் நோபல் என்னும் ஒப்பனைக்கலைஞர் விஜய் சேதுபதிக்கான 75 வயது முதியவர் தோற்றத்தை உருவகித்தவர்.

கொஞ்சநேரம்மட்டுமேபடத்தில்வந்தாலும்அவருக்குஅழுத்தமான பாத்திரமாம். ஒரு கலைக்கும், கலைஞனுக்கும் இடையிலானபயணத்தைக்கூறவிருக்கும்இந்தப்படம் இன்று வெளியாகின்றது. விஜய்சேதுபதிநடிக்கும்25ஆவது படமாக அமைந்துள்ளது.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 4 | 5 | 7 | |
| | | 1 | | 9 | 6 | 3 | | |
| 7 | 4 | | 8 | | | | | |
| | | 2 | | | | | 9 | |
| | | | | | | | | |
| | 7 | | | | | 4 | | |
| | | | | | 3 | | 6 | 2 |
| | | 6 | 2 | 1 | | 7 | | |
| | 1 | 7 | 5 | | 9 | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 8 | 5 | 6 | 9 | 1 | 3 | 4 |
| 3 | 9 | 5 | 4 | 2 | 1 | 7 | 6 | 8 |
| 6 | 1 | 4 | 7 | 8 | 3 | 9 | 2 | 5 |
| 7 | 2 | 1 | 3 | 4 | 6 | 5 | 8 | 9 |
| 4 | 5 | 6 | 9 | 1 | 8 | 2 | 7 | 3 |
| 9 | 8 | 3 | 2 | 5 | 7 | 6 | 4 | 1 |
| 1 | 4 | 9 | 8 | 7 | 2 | 3 | 5 | 6 |
| 8 | 3 | 7 | 6 | 9 | 5 | 4 | 1 | 2 |
| 5 | 6 | 2 | 1 | 3 | 4 | 8 | 9 | 7 |




**மேடம்:** மனதில் உருவான திட்டம் செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** தொடர்பில்லாத பணி குறுக்கிட்டு சிரமம் தரலாம். செயல்களில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க நண்பர்கள் உதவுவர்.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எதிரியிடம் கூட நட்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கடகம்:** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி இஷ்டதெய்வ அருளால் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும்.

**சிங்கம்:** நல்லவரையும் தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவது அவசியம். பணவரவு உண்டு

**கன்னி:** பின்விளைவு உணர்ந்து நிதானமுடன் நடப்பது நல்லது. உடன்பிறந்தவர் உதவிகரமாக நடப்பர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**துலாம்:** உங்கள் அணுகுமுறையால் வளர்ச்சி ஏற்படும். விலகிய உறவினர் விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும்.

**விருச்சிகம்:** தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் கூடுதல் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** சிலரது செயலால் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தம் தேவைப்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கலாம். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மகரம்:** உங்களின் எதார்த்த பேச்சு சிலரை பாதிக்கலாம். திட்டமிட்ட பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரிசெய்வீர்கள்.

**கும்பம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியா பார வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** பணிகள் நிறைவேற தாமதமாகலாம். அனுபவசாலியின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தை பாதுகாத்திடுவீர்கள்.






**BREAKING NEWS**

மறைந்த முதல்வர் ஜெயலலிதா அப்போலோ மருத்துவமனையில் இருந்தபோது 75 நாளில் உணவுக்காக ரூ.1.17 கோடி செலவு, மருத்துவ சிகிச்சைக்கான செலவு ரூ. 6.85 கோடி

- ஆறுமுகசாமி ஆணையத்தில் அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் தகவல்


**காதலன்** : அன்பே! உனக்காக வானத்தை வில்லாக வளைப்பேன்,
மணலைக் கயிறாகத் திரித்து அந்த நிலவைக் கட்டி இழுப்பேன்

**காதலி** : அதெல்லாம் ஒண்ணும் பண்ண வேண்டாம் அப்பல்லோ மருத்துவமனைக்குப் போய் இரண்டு இட்லி மட்டும் வாங்கிட்டு வா

**காதலன்** : ஆள விடுடீ....

விஜய் மல்லையா கூட அந்த இட்லியை
சாப்பிட்டிருக்க மாட்டார்
இவ்வளவு ஏங்க அம்பானி வீட்டு கல்யாணத்தில்கூட அந்த
இட்லியை யாரும் பரிமாறலயாம்

**அப்பல்லோ_இட்லி**






# தலைவலி, கழுத்து வலியை குணமாக்கும் 'மகா சிரசு' முத்திரை

மோதிர விரலை மடக்கி உள்ளங்கையின் நடுவில்வைத்துஅழுத்தவேண்டும். ஆள்காட்டி விரல் நடுவிரல் நுனிகளை கட்டைவிரல் நுனியோடுசேர்த்துவைக்கவேண்டும். சுண்டு விரல்நீட்டி இருக்கவும்.

விரிப்பில் அமர்ந்து தலை, முதுகுத்தண்டு நிமிர்ந்த நிலையில் தரையில் சம்மணமிட்டு செய்ய வேண்டும். நாற்காலியில் அமர்ந்து பாதங்களை தரையில் பதித்தும் செய்யலாம்.

படுக்கையில் இருக்கும் நோயாளிகள் தலையணை வைத்து சாய்ந்த நிலையில் செய்யலாம்.

உயர்ரத்த அழுத்தம் பிரச்சனை உள்ளவர்கள் இதை தவிர்க்க வேண்டும்.

**பலன்கள்:**

நீர்கோத்தலால் ஏற்படும் தலைவலி, தலைபாரம், சளியால் ஏற்படும் தலைவலி, நெற்றிப்பொட்டில் ஏற்படும் வலி (Frontal sinusitis), மூக்குக்கு இருபுறமும் கண்களுக்குக் கீழே உள்ள எலும்புகளில் வரும் வலியை (Maxillaray sinusitis, Ethomoidal sinusitis) சரியாக்கும்.

மூக்கடைப்பு, மூக்கில் சதை வளர்தல், மூக்கில் நீர் வடிதல், ஒரு பக்க மூக்கில் மூச்சுவிடுதல், வாசனை உணராமல் போதல் பிரச்சனை உள்ளவர்கள் மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

குனிந்து நிமிர்ந்து வேலை செய்வோர், இரு சக்கர வாகனம் ஓட்டுவோர், நீண்ட நேரம் குனிந்து படிக்கும் மாணவர்கள் ஆகியோருக்கு ஏற்படும் கழுத்து வலி சரியாகும். கழுத்து இறுக்கமும் நீங்கும். சிலருக்குக் கழுத்து எலும்பில் உள்ள சவ்வு பாதிக்கப்பட்டிருக்கும். இதனால் தோள் பட்டை, கை வரை வலி பாயும். இவர்களுக்கான பிரச் சினையைத் தீர்க்கும் சிறந்த முத்திரை இது. இதனால் தலை சார்ந்த அனைத்துத் தொந்தரவுகளும் நீங்கும். தலைவலி, ஸ்ட்ரெஸ் (மனஅழுத்தம்) டென்சன் இவைகள் தீரும்.

## ஐ.ம.சு.மு...

அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தொடர்ந்தும் இருக்கின்றார்கள் என்று அந்தக் கட்சியின் செயலர் மகிந்த அமரவீர சபாநாயகருக்கு அவசர அவசரமாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தெரிவுக்குழுவை நியமிக்கக் கோரும் தீர்மான வரைவு சபாநாயகரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த செனவிரத்ன, "மகிந்த ராஜபக்ச ஒவ்வொரு மாதமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அங்கத்துவக் கட்டணத்தை செலுத்துகின்றார். 3 ஆயிரம் ரூபாவை தனது நாடாளுமன்ற செலவுகளில் குறைத்துக்கொள்வ தற்கு அனுமதியளித்துள்ளார். மாதந்தம் கட்டணம் செலுத்துவதனால் அவர் கட்சி உறுப்பினராக இருப்பதற்கான அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன" - என்றார். (ம-5)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிப்பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **குமாரசாமி செந்தில்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குமாரசாமி மனோன்மணி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம்.**

## நெஞ்சை விட்டகலாத 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 08 . 06 . 1950

கண்நெகிழ 20 . 12 . 2013



**திருமதி கனகரஞ்சினி திருலோகசிங்கம்**

பஞ்சரைப் பெற்றெடுத்துப் பாசத்துடனும் பரிவுடனும் எம்மை வளர்த்து ஆளாக்கி தாய் என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் தரணி போற்ற வாழ்ந்த அன்புத் தாயே எங்கள் அம்மா!

சிரித்த முகமும் சிந்திக்கத் தூண்டும் வார்த்தைகளும் அன்பான அரவணைப்புகளும் ஆண்டுகள் ஐந்தல்ல உயிர் உள்ளவரை மறவாது என்றுமே மறையாது தாயே!

உன் பாசம், உன் அணைப்பு, உன் காதல் எதுவும் இன்றி வெறுமையாகச் செல்கிறது நாட்கள் மீண்டும் வராதோ அந்த பொற்காலம் எங்கள் அம்மாவுடன் வாழும் காலம்! கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்!

உன் மடிதேடி, எம் தலைசாய்த்து, உன் கையிலேயே உணவருந்தி.... எல்லாமே மாயமாய் போனது ஒரு நொடியில் ஆயினும் உன் நினைவலைகள் தொடரும் எம் காலம் முடியும் வரை!


ஐந்தாவது ஆண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது தாயே! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவில் வாழும்
**குடும்பத்தினர்.**

(CS/11892(11,17)

## மரண அறிவித்தல்

### பேதுருப்பிள்ளை ஆரோக்கியநாதர்



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேதுருப்பிள்ளை ஆரோக்கியநாதர் நேற்று (19.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திரேஸ்மலரின் (தங்கம்) அன்புக் கணவரும் ஜெனி, டோலின், ஜதீசா, சுதர்சன் (Sun Travels) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராணி, சுபாஜினி, எஸ்ரா, நதியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிநல்லடக்க ஆராதனை இன்று (20.12.2018) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மணியந்தோட்டம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொய்யாத்தோட்டம், புதுவீதி.**

**தகவல்: குடும்பத்தினர். 077 400 1937**

## மரண அறிவித்தல்

### ஜெயராமச்சந்திரன் ஜெயமோகன்
**(கண்ணன்)**



சரவணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான ஜெயராமச்சந்திரன் ஜெயமோகன் (கண்ணன்) ஜேர்மனியில் கடந்த (18.12.2018) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயராமச்சந்திரன் - சகுந்தலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும் அசோகமாலாதேவியின் பெறாமகனும் கவிதர்சனாவின் அன்புக் கணவரும் இராஜமனோகரன் - தனவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் துஷாந்தியின் அன்புச் சகோதரனும் இன்பகீதனின் மைத்துனரும் வர்ஷா, அட்சயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கிருபாதேவி, நல்லையா மற்றும் கனகரத்தினம், குணரத்தினம், தெட் சணாமூர்த்தி (திலகம்), மகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.


அன்னாரின் துக்கநிகழ்வு சம்பியன்லேன் 17/4, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: திலகம் - 077 084 6427,**
**அசோகமாலாதேவி - 076 578 5554**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 05 . 1931

மறைவு 20 . 12 . 2017



**அமரர் டானியல் டேவிட் (தாவீது)**
**(முன்னாள் புகையிரதப் பகுதி ஊழியர்)**

அன்பின் இலக்கணமாய் பாசத்தின் பெட்டகமாய்
கண்இமைபோல் எம்மைக் காத்துநின்ற தெய்வமே!
விண்ணகம் நீர் சென்றதேனோ? கண்களில் நீர் சுமந்தோம்
எண்ணத்திலே உயர்ந்தவரே சிரித்த முகம் என்று காண்போம்?
தியாகத்திரியாகி எமை உயர்த்திய குலவிளக்கே!
பண்புநிறை அரவணைப்பை எப்படி மறந்திடுவோம்
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டானாலும் உம் நினைவே
இறைபதத்தில் இளைப்பாற எந்நாளும் வேண்டுகின்றோம்.

**28, ஏ.வி. றோட், கொழும்புத்துறை.**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.**

(CS 21944/15/17)

## விற்பனைக்குண்டு
### மோட்டார்சைக்கிள்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| NPBFR-XXXX | SUZUKI | GIXXER | NPBGK-XXXX | TVS | WEGO |
| NPBFI-XXXX | TVS | XL | NPBFW-XXXX | BAJAJ | NS-200CC |
| NPBGR-XXXX | BAJAJ | V12 | NPBDU-XXXX | HERO | GLAMOUR |
| NPBFY-XXXX | TVS | WEGO | NPBEY-XXXX | BAJAJ | RS-200 |
| NPBGE-XXXX | BAJAJ | NS-200CC | NPBGE-XXXX | HERO | DIO |
| NPBEW-XXXX | HERO | CD110 | NPBFK-XXXX | YAMAHA | RAY-ZR |
| NPBFA-XXXX | BAJAJ | PULSAR-150 | NPBGH-XXXX | TVS | WEGO |
| NPBGC - XXXX | YAMAHA | RAY-Z | NPBGN - XXXX | BAJAJ | NS-200CC |
| NPBFJ - XXXX | BAJAJ | NS-200CC | NPYC - XXXX | BAJAJ | RE-4S |
| NPBFU - XXXX | BAJAJ | NS-200CC | NPBDY - XXXX | HERO | GLAMOUR |
| NPBEC-XXXX | BAJAJ | PULSAR-150 | NPBGJ-XXXX | BAJAJ | NS-160CC |
| NPBFV-XXXX | TVS | WEGO | NPBFH-XXXX | TVS | WEGO |
| NPBFS-XXXX | TVS | APA-160 | NPBGU-XXXX | TVS | TIGER |
| NPBFY-XXXX | TVS | WEGO | NPBFE-XXXX | BAJAJ | PULSAR-180 |
| NPBGQ-XXXX | TVS | APA-160 | NPBFS-XXXX | TVS | WEGO |
| NPBGT-XXXX | HERO | DIO | NPBGQ-XXXX | BAJAJ | PULSAR-150 |
| NPBFV-XXXX | HONDA | DIO | NPBGC-XXXX | BAJAJ | NS-200CC |
| NPBGE-XXXX | YAMAHA | RAY-ZR | NPBGE-XXXX | BAJAJ | PULSAR-150 |
| NPBGJ-XXXX | BAJAJ | NS-160CC | NPBFY-XXXX | HERO | ISMART |
| NPBFQ-XXXX | YAMAHA | RAY-ZR | NPBFV-XXXX | HERO | PLEASURE |
| NPBGH-XXXX | YAMAHA | FAZEER | NPBFQ-XXXX | BAJAJ | NS-160CC |
| NPBFX-XXXX | YAMAHA | RAY-ZR | NPBGA-XXXX | BAJAJ | NS-200CC |
| NPBFX-XXXX | HERO | HUNK | NPBFQ-XXXX | HONDA | ACTIVA |

தொடர்புகளுக்கு: மேனகாந் 077 060 8074, 077 364 4409

**TRADE FINANCE AND INVESTMENTS PLC**
**No. 233, Stanley Road, Jaffna.**
**0212219997, 0212221898**

## நாடாளுமன்றத்...

பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இணைந்து இந்தத் தீர்மான வரைவை நேற்று ஒப்படைத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக நேற்று முன்தினம் பிரேரித்திருந்தது. அதற்கு அமைவாக சபாநாயகரும் மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்திருந்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதனை எதிர்த்திருந்தன. மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையே அவை கேள்விக்கு உட்படுத்தியிருந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மகிந்த ராஜபக்ச போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். நவம்பர் மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைத்து அரச தலைவர் மைத்திரிபால அரசிதழ் வெளியிட்டதும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டேன் என்று அவர் தனது கீச்சகத்தின் ஊடாகப் பதிவிட்டிருந்தார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சி ஒன்றின் உறுப்புரிமையைப் பெற்றால், ஒரு மாத காலத்தினுள் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடமாகும் என்று அரசமைப்பின் 99ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக மகிந்தவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரிப்பதற்கு தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரி சபாநாயகரிடம் தீர்மான வரைவு சமர்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் எத்தனை பேர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளார்கள், அவர்கள் எப்போது பெற்றார்கள் உள்ளிட்ட விடயங்களை விசாரணை செய்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்பிக்க 11 பேரைக் கொண்ட தெரிவுக்குழுவை நியமிக்குமாறு தீர்மான வரைவில் கோரப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது முதல் அமர்வை நடத்தியதிலிருந்து 2 மாதங்களுக்குள் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என்று அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ம-5)

## புதிய...

ரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று மாலை இந்தத் தகவலை வெளியிட்டார் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மிக நீண்ட பிரயத்தனங்களுக்குப் பின்னர் நாட்டின் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த 16ஆம் திகதி நியமித்திருந்தார். ரணில் தலைமையிலான அமைச்சரவை இன்னமும் பதவியேற்கவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினாலேயே இந்தப் பதவியேற்பு இழுபறி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டம் ஒழுங்கு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு இரண்டும் தனக்கு கீழே செயற்படவேண்டும் என்று அரச தலைவர் கூறியுள்ளார். அதேபோன்று, சரத் பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கமாட்டேன் என்றும் அரச தலைவர் குறிப்பிட்டுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவியவர்களுக்கும் அமைச்சுப் பதவி கொடுக்கமாட்டேன் என்று மைத்திரி தெரிவித்துள்ளார். அமைச்சர்கள் பட்டியலை ஐக்கிய தேசிய முன்னணி தயாரித்தாலும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒவ்வொரு காரணங்களைக் கூறி அதனைத் தொடர்ந்து நிராகரித்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனாலேயே அமைச்சரவை பதவியேற்பு இன்னமும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை இன்று காலை பதவியேற்கும் என்று தெரிவித்தார் என்று அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கூறியுள்ளார். (ம-5)

## தமிழீழ...

ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களினதும், இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களினதும், பல்லாயிரம் போராளிகளினதும் தியாகங்களால் பொறிக்கப்பட்ட உன்னத வரலாறாகும். ஆயுதப் போராட்டமானது 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவுக்கு வந்ததே தவிர அது மரணமடையவில்லை. மௌனத்துக்குள் அது தன் இயங்கு நிலையில் உள்ளதென்பதை அனைவரும் நன்குணர்ந்து கொள்ளவேண்டும்" என்று அந்தச் சுவரொட்டியின் ஒரு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"சுவரொட்டி இன்று (நேற்று) மாலை 4 மணியளவில் நெல்லியடிப் பொலிஸாரால் கிழித்துச் செல்லப்பட்டது. வழக்கத்துக்கு மாறாக நேற்று இரவு அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

"சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன" என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-26)

## சம்பந்தனுடன்...

சொல்லப்பட்டும். நாங்கள் அவருடன் முரண்பட விரும்பவில்லை" இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் இலங்கை செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத்தில் நான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினராகவே தொடர்ந்து செயற்படுகின்றேன். தற்போது எதிரணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே அதிக உறுப்பினர்கள் உள்ளனர். இதனால் முதன்மை எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை நாம் பெற்றுள்ளோம்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் எம்மைத் தேடி வந்தது. எவரிடமும் மண்டியிட்டு இந்தப் பதவியை நாம் பெறவில்லை. எல்லாவற்றுக்கும் 'ஆம்' 'ஆம்' போட்டு அடிமைகளாக இருக்க நாம் விரும்பவில்லை' - என்றார். (6-5)



### விற்பனைக்கு

தட்டாதெருச் சந்தியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 9597 300

(CI 21945/15/17)


### மரண அறிவித்தல்கள்



### திருமதி தங்கம்மா நடராசா

காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வழுப்போடையை வசிப்பிடமாகவும் (தற்போதைய இல. 958/42, நாச்சிமார் கோவிலடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்) கொண்ட திருமதி தங்கம்மா நடராசா நேற்று (19.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 605 7153,
075 033 6799,
076 6688 503

தகவல்: பிள்ளைகள்.

(CI 21947/15/17)


### முச்சக்கர வண்டி பாதுகாப்பு கருவி

உங்கள் வண்டி தரிப்பிடத்தில் அல்லது இரவு வேளை நிறுத்தி உள்ள போது அதனுள் உள்ள விலை உயர்ந்த பொருள்கள் திருடப்படுவதை தடுக்கலாம்.

- உயர்தர ரிமோட் சென்சர்கள்
- அதி உயர் எச்சரிக்கை கோன், லைற்.
- ரிமோட் பாக் லைற்.

இலங்கையில் முதல் முறையாக அறிமுகமாகிறது

**Garudan (Pvt) LTD.**
**077 444 5909**

விலை 8700.00


### JAFFNA MEDICAL ASSOCIATION
ANNUAL GENERAL MEETING - 2019

## NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Wednesday, 30th January 2019 at 11.00 a.m at the Auditorium of Medical Students' Hostel, Jaffna, for the following purposes;

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2018 and the report of the auditors thereon.
2. To Consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the Committee of management for year 2019.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management.
Honorary Secretary
20th December 2018

### திருமதி யோகேஸ்வரி அப்பையா



பிறப்பு 08.09.1947 இறப்பு 18.12.2018

அம்பிகை வாசம் கூவில் புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி அப்பையா கடந்த (18.12.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் குலவீரசிங்கம் (டென்மார்க்), கனகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம், திலகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கனகசபை, பூபாலன், சிவப்பிரகாசம், ஞானபாக்கியம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகாம்பிகை, பிரபாகரன், மீனாம்பிகை (ஆஸ் திரேலியா), கிருபாகரன் (லண்டன்), சுதாகரன், ஹரிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதா, சத்தியேந்திரா (ஆஸ்திரேலியா), பத்மாவதி (லண்டன்), மஞ்சுளா, சுபா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரபாலினி, சரணுஜன், சத்தியசாயினி, றூபினி, நிரூபா, நிதர்சா, சரண்யா, அனுதின, அனுஜன், அனுலாஷ், ஆதித்தன், கபாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அம்பிகைவாசம்"
கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி. 021 226 4280


தகவல்: குடும்பத்தினர்.

(C 8770/15/17)

### மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை இரத்தினம் ஜெகராசா

(ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர்)



தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினம் ஜெகராசா நேற்று (19.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரி சோபியாவின் அன்புக் கணவரும் ஜனனியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் தனராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மைத்துனரும் சந்திரமோகன், கேதாரணி ஆகியோரின் மாமனாரும் சத்தியரேகாவின் பெரியதந்தையும் சர்மிதா, தபித்தா, தமந்தா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.
076 684 9128

தகவல்: குடும்பத்தினர்.

# 20ஆவது திருத்தத்தை உடன் நிறைவேற்றி மைத்திரியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

## ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் சீற்றம்



கொழும்பு, டிசெ. 20
நாட்டின் அரசமைப்பையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் கேள்விக்கு உட்படுத்திய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி வீட்டுக்கு அனுப்பவேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவால் முன்வைக்கப்பட்ட நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்கக்கோரும் தீர்மான வரைவின் மீது நேற்றுப் புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் விவாதம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**காலில் விழவேண்டும்**

கடந்த மூன்றாண்டுகளில் பகலில் அரச தலைவர் மைத்திரிபாலவுடனும், இரவில் மகிந்தவுடனும் இருந்த சூழ்ச்சிக்காரக் கும்பலின் சூழ்ச்சி ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி பகலில் அரங்கேறியது. தான்தோன்றித்தனமான தனது அதிகாரத்தை தக்க வைக்கவே மைத்திரி இந்தச் சூழ்ச்சியை அரங்கேற்றினார்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க நாங்கள் எடுத்த முயற்சிகளின்போது சபாநாயகரை மிகவும் இழிவாகப் பேசினார்கள். சபாநாயகரின் கதிரையையும், சபாபீடத்தையும் சிதைத்தார்கள். அப்படிச் செய்தவர்கள், தங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சபாநாயகர் அறிவித்ததும், சபாநாயகரின் தீர்ப்பே இறுதியானது என்கின்றார்கள். இந்தச் சூர்ச்சிக் கும்பல் சபாநாயகரின் காலில் விழுந்து வணங்கவேண்டும். சபாபீடத்தில் மண்டியிடவேண்டும்.

**முதுகெலும்பு இல்லை**

திருட்டு வழியில் தலைமை அமைச்சராகச் சென்றவர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இன்று போராடும் நிலைமை உருவாகியுள்ளது. ஜனநாயகத்தின் பலத்தை அவர்கள் இதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மறுகணமே மகிந்த உள்ளிட்டோர் தாமரை மொட்டில் இணைந்தனர். ஆனால், இன்று இணையவில்லை என்கின்றார்கள். அரசியல் ரீதியாக ஒரு முதுகெலும்பு இருக்கவேண்டும்.

**நிறைவேற்று அதிகாரத்தை கைவிடவில்லை**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிலருக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுக்க முடியாது என்று கூறிவருகின்றார். அவ்வாறு கூறுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. மைத்திரிக்கு ஆதரவாக இருந்தால் பதவிகளைக் கொடுக்க முடியும். எதிராக இருந்தால் பதவி கொடுக்க முடியாதென கூறுகிறார். இது தவறானது. அரசமைப்புக்கு முரணானது. அரச தலைவர் அவரது அரசியலுக்காக நிறைவேற்று அதிகாரத்தைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றார். 50 நாள் சூழ்ச்சிகள் முடிந்துள்ளபோதும், அமைச்சரவையை நியமிக்க முடியாதுள்ளனர். தனது பதவியைத் தக்க வைக்க அவர் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார்.

**வாக்குறுதிகள் காற்றில்**

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றனர். அரச தலைவர் தேர்தலின் போது பேரம் பேசுவதற்கான சில வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், ஜே.ஆர்க்கு பின்னர் வந்த எவ்வொரு அரச தலைவரும் வாக்குறுதிகளை மாத்திரமே அளித்தனர். மைத்திரியும், மகிந்தவும் அவ்வாறு பல விதமான வாக்குறுதிகளை கொடுத்தனர். ஆனால், எவருமே அதனை நிறைவேற்றவில்லை. முஸ்லிம்களின் எதிர்ப்பின் மத்தியில் ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தியே வடக்கு கிழக்கை ஜே.ஆர். இணைத்தார்.

அரச தலைவர் ஒருவர் சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டாலும் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியாது. அரச தலைவர் தேர்தலில் மாத்திரமே அவருக்கு அழுத்தம் கொடுக்க முடியும். பதவிக்குத் தெரிவாகிய பின்னர் மாறிவிடுவார்கள். அளவுக்கு அதிகமாக குவிந்துள்ள அதிகாரங்ளால் தன்னுடைய அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள அரசமைப்பையும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் அழிவுக்கு உட்படுத்துகின்றனர். நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் தலைமை அமைச்சரின் கீழான ஆட்சியே தேவையாகவுள்ளது.

**நிறைவேற்று அதிகார முறைமைகளால் மக்கள் உரிமையைக் காக்க முடியாது**

1977ஆம் ஆண்டுக்கு முந்திய ஒவ்வொரு தேர்தல்களின் போதும் கூட்டணி ஆட்சியே அமைக்கப்பட்டன. அங்கு ஏனைய கட்சிகளுக்கும் மதிப்பளிக்கும் நிலையும், அவர்களின் கருத்தை உள்வாங்கும் நிலையும் காணப்பட்டது. உலகில் பல்வேறு நாடுகளில் இம்முறையே பின்பற்றப்படுகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களும் தேர்தல் காலங்களில் கொடுக்கப்படும் சில வாக்குறுதிகளை நம்பி நிறைவேற்று அதிகார ஒழிப்புக்கு எதிராகவுள்ளனர். பேருவளை, திகனையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்ட போது நிறைவேற்று அதிகாரத்தால் தடுக்க முடிந்ததா?. அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ள மாத்திரமே அரச தலைவர் பதவி நல்லது. மக்களின் உரிமைகளை பர்துகாக்க முடியாது.

**முடிவு கட்டவேண்டும்**

ஜே.ஆர். அரச தலைவராகச் செயற்படும்போது, சிறீமாவோவின் உரிமையைப் பறித்திருந்தார். அதேபோல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் நாட்டுக்கும், கட்சிக்கும் அல்ல பதவிக்காகவே பயன்படுத்தப்படும். நிறைவேற்று அதிகாரம் கட்சியின் ஜனநாயகத்தையும் பறித்துவிடுகிறது. கட்சியினுள் கருத்துச் சுதந்திரம் என்ற பேச்சுக்கே இடமில்லாதுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு பல தடவைகள் மக்கள் ஆணைகள் கிடைத்துள்ளன. அவை பொய் வாக்குறுதிகளாகவே இருந்துள்ளன. இதற்கு முடிவுகட்ட வேண்டும். நாங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ள 20ஆவது திருத்தச்சட்டத்தை அனைத்துக் கட்சிகளிதும் திருத்தத்துடன் நிறைவேற்றத் தயாராகவுள்ளோம்.

வெகுவிரைவில் 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி அரசமைப்பையும் நாட்டின் ஜனநாயகத்தையும் கேள்விக்கு உட்படுத்தி மைத்திரிபால சிறிசேனவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றார். (ம-5.10)
















# உத்தரதேவியின் பரீட்சார்த்த பயணம் வெற்றி நாளைமறுதினம் சேவைகள் ஆரம்பமாகலாம்




யாழ்ப்பாணம், டிசெ. 20
இந்திய அரசால் அண்மையில் வழங்கப்பட்ட புதிய தொடருந்தின் (உத்தர தேவி) பரீட்சார்த்த பயணம் நேற்று மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயணம் வெற்றிபெற்றுள்ளது என்றும் இன்றும் ஒருசில தினங்களில் (பெரும்பாலும் நாளை மறுதினம்) உத்தரதேவி சேவைக்கு விடப்படும் என்றும் தொடருந்து நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தொடருந்தின் சேவை தொடர்பில் தொடருந்து நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில், "புதிய தொடருந்து இன்று (நேற்று) பரீட்சார்த்தாமாக யாழ்ப்பாணம் வந்துள்ளது. இது எப்போது சேவையில் ஈடுபடும் என்ற நேர அட்டவணை தொடருந்து திணைக்களத்தால் இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை. அவை கிடைத்தால்தான் ஆசனப் பதிவுகள் சேவை நேரங்கள் என்பனவற்றைப் பயணிகளுக்குத் தெரியப்படுத்தலாம். காலை 6.10 மணிக்கு யாழ்பாணத்திலிருந்து சேவையை ஆரம்பிக்க கூடியதாக இருக்கும் என்று நம்புகிறோம்" என்றார். (ம-7)

## மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணம்:

# துடுப்பாட்டத்தில் வென்றது தெல்லிப்பழை பி.செ. அணி

யாழ்ப்பாணம், டிசெ. 20
மாவட்டச்செயலர்வெற்றிக்கிண்ணத்துக்கான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வேலணைப் பிரதேச செயலக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. நிசாந்தினி 14 ஓட்டங்களையும், நவநூபி 6 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சார்பில் கௌதமி ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

27ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்கை இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சார்பில் கௌதமி 16 ஓட்டங்களைப் பெற்றார். (5,23)


வெற்றி பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியைத் தோற்கடித்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (5,23)




## மென்பந்துத் தொடரில் அல்வாய் யுத் சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 20
வடமராட்சி புலோலிமேற்கு குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் அஜந் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 21 வயதுப் பிரிவினருக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய எஸ்.எம்.எஸ் விளையாட்டுக்கழக அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. மேனன் 15 ஓட்டங்களையும், லாவணியன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணி சார்பில் கிரி 3 இலக்குகளை வீழ்த்தினார்.

44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. நிகாஸ்15 ஓட்டங்களை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் மேனன், நேசன், லாவணியன் ஆகியோர் தலா ஓர் இலக்கினைக் கைப்பற்றினார்கள்.

அல்வாள் யுத் விளையாட்டுக்கழக அணி வீரன் கிரி ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக எஸ்.எம்.எஸ். விளையாட்டுக்கழக அணி வீரன் லாவணியன் தெரிவானார். (5,23)

### ஆனந்தா வி.க. வெற்றி

முல்லைத்தீவு, டிசெ. 20
புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், ஆனந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தா விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட 60 நிமிடங்களில் இரண்டு அணிகளும் எதுவித கோலையும் பதிவு செய்யவில்லை. வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கான சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் ஆனந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (5,23)




## கபடியில் கிண்ணம் வென்ற வவுனியா பிரகதீஸ் வி.க.

மன்னார், டிசெ. 20
மன்னார் பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியில் நடத்திய கபடி போட்டித் தொடரில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரகதீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

மன்னார் பெரியகமம் எவர்கிறீன் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டி இடம்பெற்றது. வவுனியாபிரகதீஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 34:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் எவர்கிறீன் அணியை பிரகதீஸ் விளையாட்டுக்கழகம் வீழ்த்தியது. (5,23)

## உடுவில் ஸ்ரைல் போய்ஸ் வி.க. வெற்றி




யாழ்ப்பாணம், டிசெ. 20
குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் அஜந் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான திறந்த பிரிவு மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில், உடுவில் ஸ்ரைல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் நோநேம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஸ்ரைல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

உடுவில் ஸ்ரைல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. கபிசாந் 31ஓட்டங்களையும், சுரேன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் நோநேம் அணி சார்பில் கிசாந் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோநேம் விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 45 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. ஜெயிசன் 27 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் உடுவில் ஸ்ரைல் போய்ஸ் அணி சார்பில் கபிசாந் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

உடுவில் ஸ்ரைல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் கபிசாந் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக நோநேம் விளையாட்டுக்கழக அணி வீரர் நிரோசன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (5,23)

## மாவட்டச் செயலக அணி சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில், யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி 67 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது.



ஸ்கந்தவரோதய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதி நிகழ்வில், மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிவைத்தார். மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இந்தப் போட்டியில், மாவட்டச் செயலக அணி முதலிடத்தையும், தெல்லிப்பழை பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும், வேலணைப் பிரதேச செயலக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. கனவான் விருதை நல்லூர் பிரதேச செயலக அணி பெற்றுக் கொண்டது. (5,23)



# சகிப் அல் ஹசனுக்கு ஐ.சி.சியால் தண்டம்!

நடுவருடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்த குற்றத்துக்காக பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசனுக்கு தண்டம் விதித்தது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி 20 ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ் தோல்வியடைந்தது.

பங்களாதேஷ்அணிதுடுப்பெடுத்தாடியபோது ஆட்டத்தின் 14ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஒரு பந்து அகலப்பந்தாகச்சென்றது. ஆனால் நடுவர் அகலப்பந்து என்பதற்குரிய அறிவுறுத்தலைக் கொடுக்கவில்லை. இதையடுத்து சகிப் அல் ஹசன் நடுவரை நோக்கிக் கத்தினார். இது பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறையின் அடிப்படையில் குற்றமாறும். ஆட்டத்தின் பின்பாக நடத்தப்பட்ட விசாரணையில் சகிப் அல் ஹசனும் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து அவருக்கு குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 15 சதவீதத்தை தண்டமாக விதித்தது ஐ.சி.சி. (ம)

# தங்க காலணியை மீண்டும் வென்றார் லயனல் மெஸ்ஸி

## ஐந்தாவது விருதாகப் பதிவானது

ஆர்ஜென்ரீன கால்பந்து அணியின் தலைவரும் பார்சிலோனா கழகத்தின் தலைவருமான மெஸ்ஸி ஐந்தாவது தடவையாக தங்கக் காலணி விருதைத் தட்டிச் சென்றார்.

ஐரோப்பியக் கழகங்களுக்காக விளையாடும் வீரர்களில் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அதிக கோல்களைப் பதிவுசெய்யும் வீரருக்கு ஆண்டுதோறும் தங்கக் காலணி விருது வழங்கப் பட்டு வருகின்றது.

இந்த வருடத்துக்கான விருதை எவர் கைப்பற்றுவார் என்பது தொடர்பில் மெஸ்ஸி, லிவர்பூல் அணியின் சாலா, டொட்டென் ஹோம் அணியின் ஹரி கேன் ஆகியோருக்கு இடையில் கடும் போட்டி நிலவியது. இறுதியில் மெஸ்ஸி குறித்த விருதுக்காகத் தெரிவுசெய்யப்பட்டார். கடந்த பருவ காலத்தில் 68 ஆட்டங்களில் 34 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். இந்த விருதை மெஸ்ஸி கைப்பற்றுவது இத்துடன் ஐந்தாவது தடவை.

'உண்மையிலேயே நான் கால்பந்தாட்டத்தைத் தெரிவுசெய்யும் போது இது நடக்கும் என்று நினைக்கவே இல்லை. நான் இந்தத் துறையை மிகவும் விரும்புகிறேன். இந்த விருதை மீண்டும் பெறுவேன் என்று நினைத்தது கிடையாது" என்றார்.









மெஸ்ஸியின் போட்டியாளரான ரொனால்டோ 26 ஆட்டங்களில் விளையாடி 52 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். (ம)

# நியூசிலாந்து இலங்கை ஆட்டம் சமநிலை

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. முதலாவது இன்னிங்ஸில் இலங்கை அணி கடும் பின்னடைவைச் சந்தித்த போதிலும் மத்தியூஸ் மற்றும் குசல் மென்டிஸ் ஆகியோரின் அபார ஆட்டத்தால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 282 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 83 ஓட்டங்களையும், டிக்வெல்ல 80 ஓட்டங்களையும், கருணாரத்ன 79 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 6 இலக்குகளையும், வாக்நெர் 2 இலக்குகளையும், போல்ட், கிராண்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.





பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 578 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. லாதம் ஆட்டமிழக்காமல் 264 ஓட்டங்களைப் பெற்றார். வில்லியம்சன் 91 ஓட்டங்களையும், ரெய்லர், நிக்கொல்ஸ் இருவரும் தலா 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குமார 4 இலக்குகளையும், பெரேரா, தனஞ்சய டி சில்வா இருவரும் தனா 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 296 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மத்தியூஸ் 117 ஓட்டங்களுடனும், மென்டிஸ் 116 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காகக் களமிறங்கினார்கள்.

நேற்றைய நாளில் வெறும் 13 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் மழை குறுக்கிட்டதை அடுத்து ஆட்டம் சமநிலையானது. குசல் மென்டிஸ் 141 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 120 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)




# மும்பையில் யுவராஜ்

இந்தியாவின் அதிரடி வீரர் யுவராஜ் சிங் ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

அடுத்த வருட ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யுவராஜ் சிங்கின் அடிப்படை விலையாக 2 கோடி ரூபா நிர்ணயிக்கப்பட்டது. அவர் முதலாவது சுற்று ஏலத்தின்போது எந்த அணியாலும் கொள்வனவு செய்யப்படவில்லை. இரண்டாவது சுற்றின்போது 2 கோடி ரூபா கொடுத்து ஒப்பந்தம் செய்தது மும்டை இந்தியன்ஸ்.



இந்தத் தொடரில் யுவராஜ் சென்னை அணி ஒப்பந்தம் செய்வதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்பட்டது. ஆனால் மும்பை அவரை பிடித்துக் கொண்டது.

(ம)

DMI Jaffna
A/L 2K21
பொருளியல்
S.S. சிறி
ஜனவரி 5
காலை 09

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S. வீதி, சுன்னாகம்
(இரு இடத்திலும்)
A/L 2021
பொறுத்திருங்கள்
ஜனவரி 6 இல்
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்.
Note:- BARATHY சித்தன்கேணியில் ஜனவரி 2 இல்

புதுவருடத்தை முன்னிட்டு....
சகல நாடுகளுக்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்

| OVER 11 KG | |
|---|---|
| UK | - 600/- |
| GERMANY | - 700/- |
| FRANCE | - 750/- |
| SWISS | - 850/- |
| ITALY | - 800/- |

TCN EXPRESS
321 K.K.S. Road, Jaffna. 0777 554 528
[Visit/Tourist visa, Permanent Visa, Student Visa & Work Visa.]
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் Online மூலம் செய்துகொடுக்கப்படும்
• தேவையான ஆவணங்கள் தயார்படுத்தல்.
• Scheduled appointment பெற்றுக்கொடுத்தல்.
• Sworn Translations & Air ticketing
NALTC
134, ADIYAPATHAM ROAD,
THIRUNELVELY, JAFFNA.
070 375 0002
THIRUMURUGAN COM NET
321, K.K.S. ROAD,
JAFFNA.
0777 554 528

யாழ்ப்பாணத்தில்
1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்
உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

1 ஏக்கர் – 16 பரப்பு
40 தென்னை, 40 - 60 தேக்கு
20 கஜு மரம், 10 - 15 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
26 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)



2 ஏக்கர் – 32 பரப்பு
80 தென்னை, 80 - 90 தேக்கு
40 கஜு மரம், 20 - 30 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
49 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
30 அடி, 15 அடி அகல பாதை
விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
24 மணிநேர பாதுகாப்பு
விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி • உணவகம் • உடற்பயிற்சிக்கூடம் • நீச்சல் தடாகம் • விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை • மீன்பிடி குளம் • முந்திரிகை தோட்டம் • மூலிகைத் தோட்டம்

சிறப்புக் கழிவு
ரூபாய் 1 இலட்சம்
வருட இறுதிக்குள் முற்பதிவு செய்பவர்களுக்கு மட்டும்


சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.